பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 29 திங்கட்கிழமை (12.04.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 137

# பொன்சேகா நாடாளுமன்றுக்கு செல்ல அனுமதிக்கப்படுவாரா?

## குட்டிமணிக்கு நடந்ததைப்போல இவரும் முடக்கப்படலாம்

கொழும்பு, ஏப்ரல்-12

கடந்த வியாழனன்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவக் காவலில் இருந்து நாடாளுமன்றத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவாரா என்று இப்போது கேள்வி எழுப்பப்பட்டிருக்கின்றது.

அவரை நாடாளுமன்றுக்குச் செல்ல அனுமதிப்பதா என்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரபீடத்திடமிருந்து தமக்கு வழிகாட்டல் உத்தரவு ஏதும் இதுவரை கிடைக்கவில்லை என்று இராணுவத்தரப்பு தெரிவித்துள்ளது.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இராணுவக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஜெனரல் சரத் பொன்சேகா, சிறையில் படுத்திருந்தபடியே கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஜனநாயகத் தேசிய முன்னணி சார்பில் போட்டியிட்டு சுமார் 98ஆயிரம் விருப்பு வாக்குகள் பெற்று எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். (23ஆம் பக்கம் பார்க்க)

## அரசுத் தரப்பில் 46 புதிய முகங்கள்

கொழும்பு, ஏப். 12

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அரசின் சார்பில் போட்டியிட்டுப் புதிய எம்.பிக்களாக 46 பேர் தெரிவாகியுள்ளனர் என்று முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும நேற்றுக்கூறினார்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அரசுக்கு வாக்களித்த மக்கள் அனைவருக்கும் நாம் இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசியாவிலேயே மிகச் சிறந்த நாடாக இலங்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாற்றுவார் (24ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்துக்கு பொன்சேகா செல்லலாம் என்கிறார் மைத்திரிபால

கொழும்பு, ஏப். 12

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா வெற்றி பெற்றிருப்பதால் அவரால் நாடாளுமன்றத்துக்குச் செல்ல முடியும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக் கூறினார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேற்படி விடயம் தொடர்பாக செய்தியாளர்கள் கேட்டபோது தெரிவித்தவை வருமாறு:-

ஜெனரல் சரத் பொன்சேகா நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார். அவர் இப்போது ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதால் அவரால் நாடாளுமன்றத்துக்குச் செல்ல முடியும்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் அரசியல் நிலைவரம்: மன்மோகன் - ஒபாமா முக்கிய பேச்சு

கொழும்பு, ஏப். 12

அணுசக்தி பாதுகாப்பு தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து முக்கிய பேச்சுக்களில் (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதியுடன் வந்து இணைய அரசு அழைப்பு

கொழும்பு, ஏப். 12

மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன்வந்துஇணையுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் எம்.பிக்கள் அனைவருக்கும் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனவே இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் அங்கு இதுதொடர்பில் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வெற்றியைப் பெற்றுள்ளோம். யுத்தம் முடிவடைந்து, இந்த நாட்டில் மக்கள் பல மாற்றங்களை எதிர்பார்த்தனர். அந்த மாற்றங்களை ஏற்படுத்தவே அவர்கள் இந்த ஆணையை எமக்குத் தந்துள்ளனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

## மீள்குடியேற்றம் பூர்த்தியடைந்த பின்பே வட மாகாண சபைத் தேர்தல் பற்றி முடிவு

கொழும்பு, ஏப்.12

வடமாகாணசபைத் தேர்தலை எப்போது நடத்துவதென்பது அங்கு மீள்குடியேற்றம் முற்றாக நிறைவடைந்ததன்பின்பே தீர்மானிக்கப்படும் என்று முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான சுசில் பிரேமஜயந்த கூறினார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 20 மாவட்டங்களில் வெளியாகிய முடிவின்படி நாம் 117 ஆசனங்களைப் பெற்று முன்னிலையில் நிற்கின்றோம்.

கண்டி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மீள்வாக்கெடுப்பு நடத்தப்பட்டதன் பின்னர் அம்மாவட்டங்களின் முடிவுகள் வெளியிடப்படும்.

போனஸ் ஆசனங்கள் 17ஐ நாம் எதிர்பார்க்கின்றோம். கண்டி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து எமக்குக் கிடைக்கும் ஆசனங்களையும் போனஸ் ஆசனங்களையும் சேர்த்து மொத்தமாக (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பியாக பிரபல சட்டத்தரணி சுமந்திரன்

கொழும்பு, ஏப்.12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தேசியப் பட்டியல் மூலம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்கக்கூடிய வாய்ப்பு அதிகரித்திருக்கிறது என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவ்வாறு கிடைக்குமிடத்து அந்த இடத்திற்கு பிரபல சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நியமிக்கப்படுவார் என்று கூட்டமைப்புத் தலைமைப்பீடம் உறுதி செய்துள்ளது.

நடந்த பொதுத்தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திருகோணமலை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்த வாக்குகள் 2 லட்சத்து 12 ஆயிரத்து 590 ஆகும்.

திருகோணமலை மாவட்டத்தில் கிடைத்து (24ஆம் பக்கம் பார்க்க)

இன்னும் 06 நாள்களில்

JAFFNA International 2010 TRADE FAIR

2010 ஏப்பிரல் 18,19,20 வரை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை

Raves RIBA AP KITCHEN LAPTOP™ Induction Cooker




365 Days Open 9.00am to 9.00pm (we accept all credit cards)

குறிப்பு:-இலங்கையில் மின்காந்த அடுப்புகளை இறக்குமதி செய்வதற்கு அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

இலங்கையில் முதன் முறையாக உலகத் தரம்வாய்ந்த மின்காந்த அடுப்புகளை அறிமுகப்படுத்தியவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள்

அனுகூலங்கள்:
- குறைந்த மின்சாரம்.
- குறைந்த நேரத்தில் விரைவாக சமைக்கலாம்.
- நெருப்பு அபாயம் இல்லை.
- புகை இல்லை, வெப்பம் இல்லை.
- மின்சார அபாயம் 100% அற்றது.
- ...விலும் சமைக்கலாம்.
- ...யின் போது அடுப்பிலேயே மின்சார அலகு பற்றிய தகவலை அறிந்து கொள்ளலாம்.

AP Kitchen Laptop™
368/1, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
தொலைபேசி: 012 36 46 96, 014 25 55 65
ஹொட்லைன்: 0772 35 95 35
மின்னஞ்சல்: kitchenlaptop@sltnet.lk

யாழ் ஏக விநியோகஸ்தர்:
A.S.P Enterprises
360/9, கத்தோலிக்க அச்சகக் கடைத்தொகுதி,
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 300 1585, 0776 079 352

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## "வெற்றிக்கு வித்திட்ட என் தமிழ் உறவுகளுக்கு நன்றி"

எம் தமிழ் உறவுகள் சந்தித்த கொடிய யுத்தத்தினால் ஏற்பட்ட உயிரழிவு, சொத்தழிவு, சொல்லொணாத் துன்ப துயரங்களோடு இன்றும் சொந்த மண்ணில் ஏதிலிகளாக வாழும் எம் உறவுகளுக்காகவும், புனர்வாழ்வு முகாம்களில் சிறைப்பட்டிருக்கும் எமது சகோதரர்களுக்காகக் குரல் கொடுக்கவும், பாதிக்கப்பட்ட, மோசமாகப் பழிவாங்கப்பட்ட எமது மக்களின் பெருவிருப்பமாக இருக்கின்ற தமிழ்த் தேசிய அடையாளத்தைப் பேணவும் நாடாளுமன்ற உறுப்பினராக என்னைத் தெரிவு செய்வதற்காகத் தங்களுடைய ஒவ்வொரு பொழுதுகளையும் செலவழித்த என் தமிழ் உறவுகளுக்கும், சகல ஊடகத்துறையினருக்கும், புலம்பெயர் நாடுகளில் வாழும் சகோதர தமிழ் உறவுகளுக்கும் வாக்களித்து என்னை வெற்றிபெற வைத்த என்இனிய மக்களுக்கும் நன்றிகளைக் கூறுகின்றேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக என்னில் நானாக நின்று என்னை இயக்குகின்ற கனவோடு விழி மூடித் தூங்கும் என் உறவுகளுக்கும் நன்றிகள்.



என்றும் உங்களில் ஒருவனாக....

**சிவஞானம் சிறீதரன்**

தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டம்.
கிளிநொச்சித் தேர்தல் தொகுதி. (சி/566518)

## இலங்கையர் ஒருவர் இத்தாலியில் சுட்டுக்கொலை

கொழும்பு, ஏப். 12

இலங்கையைச் சேதர்ந்த 27 வயது மதிக்க தக்க நபர் ஒருவர் இத்தாலியில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலி, வெனின்ஸி நகரத்திலுள்ள அவரது வீட்டிலிருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது என இத்தாலியப் பொலிஸார் தெரிவித்தனர் - என்று ஜரிஸ் செய்தி சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

மேலதிக விவரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை எனவும் விசாரணைகள் தொடர்கின்றன எனவும் கூறப்படுகிறது. (சி)

## கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ ஸ்ரீநிவாச
நாகேந்திரக் குருக்கள்
(சின்னமணி ஐயா)
(ஆதீன கர்த்தா புங்குடுதீவு சிவன் ஆலயம்)

குருக்கள் அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயர்கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவர் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நேசன் புடைவை அகம்,**
(சி/566517) முதலாம் வட்டாரம், புங்குடுதீவு.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி திரவுஞ்சநாதன்

இராம்புவில், சாவகச்சேரி, முருகன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி திரவுஞ்சநாதன் நேற்று (11.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாரித்தம்பி சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) - இராசம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை) தம்பதிகளின் அன்பு மகனும், சரசாலை மத்தியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இரத்தினம் - செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுகந்தினியின் அன்புக் கணவரும், துர்க்கா (சாவகச்சேரி இந்துக்கல்லூரி), சங்கவி (சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயரஞ்சினி (ஆசிரியை, மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம்), குகரஞ்சினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், நந்தினி, ரஜனி, வதனி, சுரேஷ், சபேசன், யசோதினி, சிவகுமாரன், சக்திவேல் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2010) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் கோயிலடி,
இராம்புவில், சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## இதய அஞ்சலி



சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் முன்னாள் உபசெயலாளராகவும் சிறந்த வேதாகம விற்பன்னராகவும், இலங்கையின் பல்வேறு பாகங்களிலுமுள்ள சிவாலயங்களில் பிரதம சிவாச்சாரியாராகவும் பணிபுரிந்து திடீரென எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அந்தண விப்ரேஷ்டர்

**சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள்**

அவர்களின் ஆத்மா பார்வதி சமேத பரமேஸ்வரன் பாதங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி!

(சி/566514)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்12

ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பஸ் நிறுவனத்தினரால் இணையத்துடன் இணைந்து கொள்வோம்'' என்றும் கருப்பொருளில் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு வண்ணார் பண்ணை சிவன் பண்ணை வீதியில் உள்ள நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

கருத்துரையை சதீஸ் நவரட்ணம் வழங்குவார். (ஒ-10)

## வவுனியாவில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஏப். 12

வவுனியாவிலுள்ள குளமொன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சடலம் இதுவரையில் அடையாளம் காணப்படாத நிலையில், பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

## கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ ஸ்ரீநிவாச
நாகேந்திரக் குருக்கள் (சின்னமணி ஐயா)
(புங்குடுதீவு மதுரையம்பதி மீனாட்சி சுந்தரேஸ்வர சிவன் ஆலய ஆதீன தர்மகர்த்தா, புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம்)

புங்குடுதீவு மண்ணின் பெருமையினைத் தனது
புலமையான ஆகமக் கிரியைகளால் ஆற்றி
சிலையையே சிவனாக்கும் வல்லமையுள்ள சின்னமணி
ஐயாவே!
சிந்தையையே மகிழ்விக்கும் சிறப்பு மிகு அர்ச்சனையால்
சித்தம் மகிழ்வது சிவன்மட்டுமா? இல்லை ஐயா!
எம்மூரின் மக்களும் மண்ணும் மரங்களும் கூடவே தான்
ஆவிதுறந்து இறைவனடி சேர்ந்திட்ட ஐயாவின்
ஆத்மா சாந்திபெற இறைஞ்சுகின்றோம் உங்கள்
புங்குடுதீவு கதிர்காம ஆலய பரிபாலன சபையினர் நாம்

**புங்குடுதீவு கதிர்காம ஆலயப் பரிபாலனசபை,**
(96845) புங்குடுதீவு - 1.

### ஸ்ரீமதி பூரண சந்திரிகா சிவானந்தசர்மா



குருநாகலைப் பிறப்பிடமாகவும் காரைநகரை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது பதுளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரண சந்திரிகா சிவானந்த சர்மா நேற்று (11.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமச்சந்திரக் குருக்கள் - இராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகளும் காரைநகர் மணற்காடு காலஞ்சென்றவர்களான சாம்பசிவ ஐயர் - சரஸ்வதி அம்மா மற்றும் பரமேஸ்வரி அம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சிவானந்த சர்மாவின் அன்பு மனைவியும் அமரர் பாலச்சந்திரனின் சகோதரியும் சிவரூபசர்மா (ஸ்ரீ மாணிக்க கதிர் வேலாயுத சுவாமி தேவஸ்தானம், பதுளை), சிவகௌரியின் பாசமிகு தாயாரும் நந்தினியின்(சாரு) அன்பு மாமியாரும் அக்ஷயாவின் அன்புப் பாட்டியும் குமாரசாமி சர்மா, பரமேஸ்வரசர்மா, தாட்சாயினி (தயாபரி), சிற்சபேசசர்மா, இராஜேஸ்வரி, சர்வேஸ்வரி, சோமசபேசக்குருக்கள் (இணுவில் சிவகாமி அம்மன் கோயில்), ஸ்ரீதரசர்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2010) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் 'பவாநிவாசம்', காரைக்கால் வீதி, இணுவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பவாநிவாசம்',
காரைக்கால் வீதி, இணுவில் கிழக்கு,
இணுவில். 021 222 5781
பதுளை - 0552229548 (96846)

தகவல்:
சிவஸ்ரீ குமாரசரவணபவகுருக்கள்
(இணுவில் பவா குருக்கள்).

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் ஒரு பொதி கண்டெடுக்கப்பட்டுள்ளது. தகுந்த அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.
தொ.பே: 0776362445

## தொலைத் தொடர்பு நிலையம் எரிந்து நாசம்

வலி.வடக்கு. ஏப். 12

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலடியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற தீ விபத்தில் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்று எரிந்து நாசமாகியுள்ளது.

இரவு கடையைப் பூட்டிவிட்டுச் சென்ற பின்னர் கடையில் இருந்து புகை வெளியேறியதை அவதானித்த அயலவர்கள் தீப் பற்றியதை உணர்ந்து அணைக்க முற்பட்டுள்ளார்கள்.

யாழ். மாநகர சபை தீயணைப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து உரிய இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினரும்தீயை அணைத்துள்ளனர்.

அங்கிருந்த கணனிகள், தொலைத் தொடர்புச் சாதனங்கள், மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் எரிந்து நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-த-86)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கங்கநாதன் மங்களேஸ்வரி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கங்கநாதன் மங்களேஸ்வரி 09.04.2010 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் வீரகத்திப்பிள்ளை - காலஞ்சென்ற இராசமணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிர்காமர்-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கங்கநாதனின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2010) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முடிப்பிள்ளையார் கோவிலடி, வேலணை.
கனடா : 0016473398635
வேலணை : 0217902107 (96842)

தகவல்:
செல்லமுத்து வீரகத்திப்பிள்ளை
(தந்தை).

### திருமதி கிருஸ்ணபிள்ளை கண்மணி

காரைநகர், முல்லைப்பிலவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணபிள்ளை கண்மணி 10.04.2010 சனிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தையல்முத்து மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2010) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் சாம்பலோடை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைநகர். (96835)

தகவல்:
மருமக்கள்.

## மரண அறிவித்தல்

### அருமைநாயகம் சுசீலா (பவளம்)



இல 96/1, கண்டி வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அருமைநாயகம் சுசீலா (பவளம்) நேற்றுமுன்தினம் (10.04.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அருமைநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தங்கரத்தினம் தம்பதியினரின் அருமை மருமகளும், இராசம்மா, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் பரமேஸ்வரி பரமலிங்கம் (கனடா), மாசிலாமணி (கனடா), தருமராஜா (அவுஸ்திரேலியா), கனகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தையல்நாயகி, மகாலட்சுமி, பரமேஸ்வரி, மகேந்திரன், காலஞ்சென்ற விஜயபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், இரவிச்சந்திரன் (கனடா), வதனி (சுவிஸ்), சிவதர்சினி (கனடா), முகுந்தன் (UNDP Minc Action), மேனகா ஆகியோரின் அன்புத் தாயாரும், பவா (கனடா), ஸ்ரீரஞ்சன் (சுவிஸ்), நவசீலன் (கனடா), சிவாஜினி, பிரசாத் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நரேன், சுரேன், சங்கவி, அச்சுதன், அக்ஷயா, நிஷிகா, கிருஷாணி, யதுசாளினி, அபிஷாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.04.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

96/1, கண்டி வீதி, அரியாலை.
தொ.பே. 021-4591459, 077-8375224 (96838)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பொன்சேகா தரப்போகும் தலையிடி!

சவாலுக்கே இடமில்லாத பெரு வெற்றியை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இந்தப் பொதுத் தேர்தலில் ஈட்டியுள்ளது என்பது சந்தேகத்துக்குரியதல்ல.

இன்னும் சுமார் பத்து ஆசனங்களை எதிர்த் தரப்பில் இருந்து சுருட்டிக் கொண்டால் இந்த நாட்டின் அரசியல் தலைவிதியைத் தம்மிஷ்டப்படி மாற்றியமைக்கக் கூடிய வகையில் - அரசமைப்பைத் தன் எண்ணப்படி நிலைநிறுத்தத்தக்க விதத்தில் - நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையை அவர் பெற்றுக்கொண்டு விடுவார் என்பதிலும் ஐயமில்லை.

அப்படி எதிரணியிலிருந்து தேவையான எண்ணிக்கை எம்.பிக்களை வாரி எடுப்பதும் அவருக்கு அப்படியொன்றும் சிரமமான காரியமாக இருக்கப் போவதில்லை என்பதும் கூட உறுதி.

இப்படி ஒருபுறம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய பலமும், நாட்டின் அதிகாரக் கட்டமைப்பையே தன் விருப்பப்படி மாற்றி அமைக்கக்கூடிய விதத்தில் நாடாளுமன்றப் பலமும் ஒருங்கே பெற்று அசைக்க முடியாத தலைவராக உருவெடுத்திருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை, அசைக்கக்கூடிய தேர்தல் முடிவொன்றும் இப்போது வெளிவந்திருப்பது பலராலும் கவனிக்கப்படாமல் உள்ளமை வியப்புக்குரியதே.

அது - கொழும்பு மாவட்டத்துக்கான தேர்தல் முடிவுதான். அங்கு ஜனநாயகத் தேசிய முன்னணியின் சார்பில் அதன் தலைவர் ஜெனரல் சரத் பொன்சேகா நாடாளுமன்ற எம்.பியாகியிருப்பது பற்றிய தேர்தல் முடிவுதான் அது.

இந்தப் பொதுத் தேர்தலில் தமக்காக ஒரு சொல் கூட வாய் திறந்து பிரசாரம் செய்யக்கூடிய வாய்ப்பு ஜெனரல் பொன்சேகாவுக்குக் கிடைக்கவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான பிரதான வேட்பாளராக - எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக - போட்டியிட்டு, ஆளும் தரப்பினர் வயிற்றில் கடைசிவரை புளியைக் கரைத்த பொன்சேகா, அந்தத் தேர்தல் முடிந்து இரண்டு வாரங்களுக்குள்ளேயே கைது செய்யப்பட்டு இராணுவச் சிறைக்குள்ளே அடைக்கப்பட்டு - அடக்கப்பட்டு - விட்டார்.

இராணுவச் சிறைக்குள் 'படுத்துக்கொண்டே' இந்தத் தேர்தலில் தலைநகரில் சுமார் ஒரு லட்சத்தை நெருங்கும் அளவுக்கு விருப்பு வாக்குகளைப் பெற்றுத் தேறியிருக்கின்றார் - தெரிவாகியிருக்கின்றார் - பொன்சேகா.

ஆளும் தரப்பு இத்தகைய பெரு வெற்றியை - அமோக வெற்றியை - ஈட்டியிருக்கையில் நான்கு, ஐந்து சக உறுப்பினர் களோடு ஜனநாயகத் தேசிய முன்னணியின் தலைவர் ஜெனரல் பொன்சேகா நாடாளுமன்றுக்கு வந்து அப்படி என்ன பெரிதாகக் 'கிழித்து'விடுவார் என்று கேள்வி எழுவது நியாயமானதே.

ஆனால் ஜெனரல் பொன்சேகாவை நாடாளுமன்றுக்கு வர அனுமதிப்பதுதான் ஆளும் தரப்புக்கு பெரும் சிக்கலாகிவிடும் விவகாரமாகும். ஜெனரல் பொன்சேகா நடாளுமன்றத்துக்கு வர அனுமதிக்கப்பட்டு, எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்து, நாடாளுமன்றத்தில் சுதந்திரமாக உரையாற்ற அனுமதிக்கப்படுவாராயின் அதன் விளைவு ஆட்சிப் பீடத்தில் இருப்போருக்குப் பெரும் விபரீதமாகிவிடும் என்பது வெளிப்படையானது.

தனக்கு எதிராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரது அதிகாரபீடமும் எடுத்த கெடுபிடி நடவடிக்கைகளால் கடும் ஆத்திரத்தில் - மனக் குமைச்சலில் - இருக்கின்றார் ஜெனரல் பொன்சேகா என்பதும் தெரிந்த அம்சம்தான்.

கடந்த வருடம் முற்பகுதியில் வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராக அரசுப் படைகள் மேற்கொண்ட இறுதி யுத்தத்தின் போது கட்டவிழ்ந்த பல சம்பவங்களுக்கு சாட்சியமாக - உறுதியளிக்கப்படக்கூடிய சாட்சியாக - இருப்பவர் அப்போதைய இராணுவத் தளபதியான ஜெனரல் பொன்சேகா. யுத்த நடவடிக்கைகள் தொடர்பாக அவரிடம் புதைந்து கிடக்கும் இரகசியங்கள் அம்பலமாவதற்கு ஒரு மேடை - பகிரங்கக் களம் - ஜெனரல் பொன்சேகாவுக்குக் கிடைக்குமானால், அவர் பல உண்மைகளைப் பிய்த்து உதறி அம்பலப்படுத்தி விடுவார் என ஆளும் தரப்பிலும் அஞ்சப்படுகின்றது எனக் கருதப்படுகின்றது.

யுத்தகால விடயங்களை அம்பலப்படுத்தத் தயங்கமாட்டேன் என்று ஜெனரல் பொன்சேகா பகிரங்கமாகக் குறிப்பிட்டு சிலமணி நேரத்துக்குள் இராணுவப் பிரிவினரால் குண்டுக்கட்டாகத் தூக்கிச் செல்லப்பட்ட அவர், அன்று முதல் இன்று வரை பகிரங்கமாக வாய் திறக்க முடியாத நிலையில் இராணுவச் சிறைக்குள் முடக்கப்பட்டிருப்பதன் பின்னணி இதுதான் என்றும் கருதப்படுகின்றது. இவ்விடயத்தில் அவர் வாய் திறக்க வாய்ப்பளிக்கப்படுமாயின் அது சர்வதேச யுத்தக் குற்றவியல் நீதிமன்றம் வரை பல விடயங்களை எதிரொலிக்கச் செய்யும் என்பதும் நம்பக்கூடியதே.

இறுதி யுத்தகால நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேச யுத்தக் குற்றவிசாரணை மன்றத்தின் பிடிக்குள் சிக்கலாம் என்ற அச்சத்தில் மூழ்கிக் கிடக்கும் இலங்கை ஆட்சிப்பீடம், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வென்றமைக்காக ஜெனரல் சரத் பொன்சேகா இலகுவாக வந்து நாடாளுமன்றத்தில் எல்லா உண்மைகளையும் பகிரங்கமாகக் கக்கிவிட்டுச் செல்வதற்கு அனுமதிக்கும் என எதிர்பார்க்க முடியாது.

ஆனால், ஜெனரல் சரத் பொன்சேகா இப்போதுவரை சில குற்றச்சாட்டுகள் தொடர்பில் வெறும் குற்றம் சுமத்தப்பட்ட சந்தேக நபர் மட்டும்தான். குற்றம் நிரூபிக்கப்பட்ட குற்றவாளியல்ல. அப்படி சந்தேக நபர் ஒருவர் தேர்தலில் வென்றால் - அவருக்கு எதிரான குற்றச்சாட்டு எதுவும் நிரூபிக்கப்படாத வரையில் - அவர் நாடாளுமன்றம் செல்வதைத் தடுப்பதற்கு வலுவான சட்ட ஏற்பாடுகள் ஏதும் இருப்பதாகவும் தெரியவில்லை.

எனினும், எண்பதுகளின் முற்பகுதியில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொலைக்குற்றவாளியாகக் காணப்பட்டு, பின்னர் சாதாரண தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் மரணதண்டனை விதிக்கப்பட்ட குட்டிமணி (செல்வராசா யோகச்சந்திரன்), அப்போதைய வட்டுக்கோட்டைத் தொகுதி எம்.பியான திருநாவுக்கரசு காலமானபோது அந்த இடத்துக்கு ஓர் எம்.பியாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியால் நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் நாடாளுமன்றம் சென்று எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்ய இறுதிவரை வாய்ப்பளிக்கப்படவேயில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்னணியில், பொன்சேகா நாடாளுமன்றம் சென்று அங்கு வாய் திறக்க அனுமதிக்கப்படுவார் என எதிர்பார்ப்பது சாத்தியமற்றதே.

# மக்களின் மந்தமான வாக்களிப்பின் மூலம் உணர்த்தப்பட்டுள்ள படிப்பினை என்ன?

நேற்று 11.04.2010 சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளியான விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி

ஆறுவாரங்கள் இடையறாது இடம் பெற்றுவந்த தேர்தல் பிரசாரங்களின் முடிவில் கடந்த வியாழக்கிழமை மிக அமைதியான ஆனால் ஆர்வமோ, உற்சாகமோ இல்லாத வகையிலான பொதுத்தேர்தல் ஒன்று நடந்து முடிந்துள்ளது. இந்த அளவு உற்சாகமற்ற தேர்தல் ஒன்று இதுவரை நடந்ததில்லையென்று கூறப்படுகின்றது. இருந்தாலும் பலவகைகளில் அரசியல் மட்டத்தில் வரலாற்று முக்கியத்துவமான அம்சங்களைக் கொண்டதாக இத்தேர்தல் அமைந்திருந்துள்ளது.

பதிவு செய்யப்பட்டிருந்த ஒரு கோடியே 40 லட்சத்து 88 ஆயிரத்து 500 வாக்காளர்களில் அரைவாசிப் பேர் வாக்களிப்பில் அக்கறை கொள்ளாது இருந்தவிட்டனர். உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களில் அநேகர் வாக்களிக்கச் செல்வதற்கானவாகன வசதியில்லாமல் இருந்துவிட்டனர்.

தேர்தல் ஆணையம் கூட வழமையாக வாக்களிப்பு விகிதாசார விவரங்களை வெளியிடும் பணியி லிருந்து ஒதுங்கிக்கொண்டுவிட்டது.

சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தல்களுக்கான மக்கள் நடவடிக்கை முன்னணி வெளியிட்டுள்ள ஒரு குறிப்பில் 50 - 52 வீதமானவர்களே வாக்களித்துள்ளார்கள் என்று கூறியுள்ளது. தேர்தல் வன்செயல்களைக் கண்காணிக்கும் நிலையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் வாக்களிப்பு 50 வீதத்துக்கு குறைவாகவே இருந்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

இதுவரை 20 தேசியமட்ட நாடாளுமன்றத் தேர்தல்களும், ஜனாதிபதித் தேர்தல்களும் இடம் பெற்றுள்ளன. 1982 இல் மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றும் நடைபெற்றுள்ளது. இவை அனைத்திலும் 1988 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் 55.32 வீதமானவர்களே வாக்களித்திருந்தார்கள்.

1988 ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலானது இரண்டு வித்தியாசமான கலகங்களின் பின்னர் நடைபெற்றது. ஒன்று தெற்கில் இடம்பெற்ற ஜனதா விமுத்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) புரட்சிக்கலகமாகும். தெற்கில் எவரும் வாக்களித்தால் கொலை செய்யப் படுவார்கள் என ஜே.வி.பி அறிவித் திருந்தது. இருந்த போதிலும் 55.32 வீதம் வாக்காளர்கள் துணிந்து வாக்களித்திருந்தார்கள். மற்றது வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகள் ஆரம்பித்திருந்த ஆயுதப் போராட்டம். கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற தேர்தலில் பொதுமக்கள் அதிகம் அக்கறை எடுத்துக் கொள்ள வில்லையென்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசிய முன்னணியும் தெரிவித்துள்ளன.

### மக்கள் ஆர்வமின்மை குறித்து ஆராய்ந்து அறிய வேண்டும்

இம்முறை தேர்தலில் வாக்காளர்கள் அக்கறைகாட்டிக் கொள்ளாமைக்கான காரணங்கள் தொடர்பாக அரசாங்கமும் எதிர்க்கட்சியினரும் விரிவாக ஆராய்ந்து அறிவது அவசியமாகும். 30 ஆண்டுகளுக்குப் பின்னர் புலிகள் தோற்கடிக்கப்பட்டதையடுத்து நடைபெற்றுள்ள முதல் தேர்தலாகும் இது.

### நாளை

| | |
|---|---|
| பங்குனி 30 13.04.2010 | |
| செவ்வாய்க்கிழமை | |
| திதி | : சதுர்த்தசி பி.ப. 05.41 வரை |
| நட்சத்திரம் | : உத்தரட்டாதி பி.ப. 04.07 |
| சுபநேரம் | : 10.36-12.06 வரை |
| ராகுகாலம் | : 03.06-04.36 வரை |

பொதுமக்களுக்குப் பயமோ, அச் சுறுத்தலோ இருக்கவில்லை. மக்கள் சுதந்திரமாக நடமாடக் கூடியதாக விருந்தது.

36 கட்சிகளிலிருந்தும் 301 சுயேச்சைக்குழுக்களில் இருந்தும் 7,620 வேட்பாளர்கள் களத்தில் இருந்தார்கள். வாக்காளர்கள் தமக்கு விருப்பமான கட்சிகளையும் வேட்பாளர்களையும் தாரதம்மியங்களில் இல்லாவிட்டாலும் எண்ணிக்கையில் ஆகுதல் தமக்கு வேண்டிய மாதிரி தெரிவு செய்து கொள்வதற்கு வசதியிருந்தது.

வாக்காளர் வருகை மோசமாக விருந்தமைக்கான காரணங்களை ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க வெளிப்படுத்தியிருக்கிறார்.

வாக்காளர் குறைவாகவாக்களித்திருப்பதானது அரசு மீது மக்கள் நடத்தியுள்ள ஒரு தாக்குதலாகும். என்று அவர் குறிப்பிட்டுள்ளார். வெள்ளிக்கிழமை அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தேர்தல் சுதந்திரமாக நடைபெறவில்லை. வாக்களிப்பு தினத்திலும் கூடதேர்தல் முகவர்களும் வேறு அலுவலர்களும் துரத்தி அடிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் வாக்களிக்க விரும்பவில்லை என்று கூறிய அத்தநாயக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்குக் கிடைத்துள்ள விகிதாசாரம் உயர்வாக இருந்தாலும் அவர்களுக்கு கிடைத்துள்ள வாக்குகள் குறைவாக இருந்துள்ளனவென்று தெரிவித்துள்ளார்.

வியாழனன்று நடந்த தேர்தல் முடிவுகளை தாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென்று கூறிய அவர் தங்கள் கட்சி இது தொடர்பில் என்ன செய்யப் போகிறது என்பதைத் தெரிவிக்கவில்லை.

தேர்தலின் முன்னர் ஐ.தே. கட்சித் தலைவர்கள் வாக்காளர்களை நேரத்துடன் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்குகளைப் பதிவு செய்யும்படியும் தங்களை வெற்றிபெறச் செய்யும் படியும் கேட்டிருந்தார்கள். புதிய அரசை அமைக்கப்போவதாக அவர்கள் கூறிக் கொண்டார்கள். ஆனால் தமது கட்சியினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லையென்று அத்தநாயக்க இப்போது கூறுவதானது, அவர்களின் கோரிக்கைகளை ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவாளர்கள் நிராகரித்துவிட்டார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறார் என்பதாக அமைகின்றது.

துரதிஷ்டவசமாக அத்தநாயக்க இன்னொரு சர்ச்சையிலும் சம்பந்தப்பட்டவராய் இருக்கின்றார். இது மொனறாகலை தொகுதிக்கு அவரால் கையெழுத்திடப்பட்டவாக்காளர் அட்டை தொடர்பானது. வேட்பாளர் பட்டியலில் முதன்மை வகித்தவரான ரஞ்சித் மத்தும பண்டார என்பவர் ஜானக்க திஸ்ஸகுட்டியாராச்சி என்ற இன்னொரு வேட்பாளின் பெயரை பட்டியலில் இருந்து ரிப் பெக்ஸ் கொண்டு அழித்த விடயத்தில் சம்பந்தபட்டிருந்ததாகக் கூறப்பட்டது. இது உண்மையானால் இது ஒரு மிக மோசமான மோசடிசெயற்பாடாகும். இதன் காரணமாக ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க மொனராகல வாக்காளர்களுக்கு விசேட கோரிக்கையொன்றை விடுக்க வேண்டியிருந்தார். தங்கள் விருப்பு வாக்குகளை மத்தும பண்டாரவுக்கோ அவரது சகா ஆனந்த குமாரசிறிக்கோ போடவேண்டாம் என அவர் கேட்டுக்கொண்டார்.

இருந்தபோதிலும் மத்தும பண்டாரதான் அங்கு பெரும்பான்மை விருப்பு வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு எதிர் தரப்பு வேட்பாளர். அடுத்த நிலையில் ஆனந்த குமாரசாமிக்கு 14,120 வாக்குகள் பதிவாகியிருந்தன பட்டியலில் முதல் இடத்தில் இருந்த விக்கிரமசிங்கவால் ஆதரிக்கும்படி வாக்காளர் களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டவரான நிகால் சந்திரசிறி 4961 வாக்குகளுடன் நான்காம் இடத் திற்குத் தள்ளப்பட்டு தோற்கடிக்கப்பட்டார்.

### ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி

வியாழக்கிழமை தேர்தல் முடிவுகள் பற்றி ஜனாதிபதி ராஜபக்ஷ கருத்து வெளியிடுகையில் "இது ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி" என்றார். நாட்டில் அமைதியையும் இணக்கப்பாட்டையும் தொடர்ந்து முன்னேற்றும் கொள்கைகளை மக்கள் வரவேற்றுள்ளார்கள். இது அரசை ஊக்குவிக்கும் விடயமாகும் அபிவிருத்தியை உள் கட்டமைப்பு களுடன் சிறப்பாக முன்னெடுக்கவும் இனங்காணப்பட்ட துறைகளில் முதலீடு செய்யவும் இது எமக்கு ஊக்கமளிப்பதாகும். "தென்னாசியாவிலேயே பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தில் எமது நாட்டை ஒரு மத்திய பிரதேசமாக நாம் வளர்த்தெடுக்க முனைவோம்" என்றுகூறியுள்ளார்.

மாகாணசபைகள், மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களையடுத்து இப்பொழுது இந்த முடிவுகள் வந்திருப்பதானது இலங்கையில் ஜனநாயகம் முழுமையாக செயல் படுகின்றது என்பதையும் ஜனநாயக செயல்பாட்டில் எமது மக்கள் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளது என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

## நாட்டை முன்னேற்றிச் செல்ல மக்கள் அளித்துள்ள தீர்ப்பு என்று ஜனாதிபதி நம்பிக்கை

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் முகாமையாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்ஷ தமது கட்சியின் வெற்றி குறித்து தெரிவித்த கருத்து வருமாறு:-

இந்த வெற்றி நாம் முன்பே கூறியிருந் தது போல் ஒரு முக்கிய விடயத்தை எடுத்துக் காட்டுகின்றது. தேர்தலில் நாங்கள் கணனி மோசடி (ஜில்மாட்ஸ்) செய்கிறோம் என்ற நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டினை உண்மையற்றது என எடுத்துக் காட்டியுள்ளது.

தேர்தல் அலுவலகத்தில் கணனிகளில் செய்யப் பட்ட மோசடி காரணமாக ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ வெற்றியீட்ட முடிந்தது என ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க முன்பு தெரிவித்ததையே பசில் இவ்வாறு சுட்டிக் காட்டியிருந்தார்.

### இது மக்கள் அளித்த தீர்ப்பு

வியாழக்கிழமை நடந்த தேர்தலின் முடிவுகள் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பாக எடுத்துக் கொண்டு அரசமைப்பு மாற்றங்கள் போன்ற மாற்றங்களில் அரசு இறங்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

ஏனென்றால் வாக்காளர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்கள் வாக்களிக்கவில்லை இது ஜனநாயகத்திற்கு ஏற்பட்ட ஒரு அவமானம் என்று அவர் கூறினார். அவர் மேலும் கூறுகையில் மிக விரைவிலேயே ஊடக சுதந்திரம் மேலும் நசுக்கப்படவிருக்கின்றது. எதிர்க்கட்சியினரை ஓர் இயக்கமாக உருவாக்கி மக்கள் உரிமைகளை நிலைநாட்ட நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நாங்கள் போராட்டங்களை நடத்துவோம். என்று விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். (ப)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கும் கலந்துரையாடலும்

இணையத்தள குரு (web kuru) என அழைக்கப்படும் இணையத்துறைசார் வல்லுநரான திரு. சதீஸ் நவரட்ணம் அவர்களால் இத்துறையில் வேலை செய்பவர்கள், ஆர்வலர்கள்,மாணவர்கள்,வேலைதேடுபவர்களுக்கான விசேட கருத்தரங்கும் கலந்துரையாடல் ஒன்றும் எமது நிறுவனத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே இத்துறை சார்ந்த அனைவரும் பங்கு பற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இடம் :- IIS City Campus மண்டபம்

காலம் :-15.04.2010 மாலை 3.00மணி

விடயம் :-1.இணையத்தின் முக்கியத்துவமும் பயன்பாடும் பிரயோகமும்.
2.இணையத்தொழில் நுட்பமும் யுத்திகளும்
3.இத்துறைசார்ந்த வேலைவாய்ப்புக்கள்
4.இத்துறை சார் கல்வி, உயர்கல்வி
5.எமது பிரதேசமும் இணையதொழில்நுட்பத்தின் தேவையும்

அனுமதி இலவசம்

IIS CITY CAMPUS
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Email:iiscc@sltnet.lk Web: www.iis.edu.lk


## இறுதிப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகள்

கொழும்புத்துறை, ஏப். 12

அரியாலை 91 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவையொட்டி கிரிக்கெட், கரபந்தாட்டம், வலைப்பந்தாட்ட மாகாண, உள்ளூர்மட்ட இறுதிப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணிக்கும் அரியாலை சனசமூகநிலைய அணிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் இறுதியாட்டத்தில் அரியாலை சரஸ்வதி அணி வெற்றி பெற்றது.

மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற கிரிக்கெட் இறுதிப் போட்டியில் அரியாலை சரஸ்வதி அணியை எதிர்த்து குருநகர் கார்மேல் போய்ஸ் அணி மோதியது. இவ் ஆட்டத்தில் அரியாலை சரஸ்வதி அணி வெற்றிபெற்று சம்பியனானது.

அரியாலை சரஸ்வதி அணிக்கும் அரியாலை சனசமூக நிலைய அணிக்கும் இடையில் நடைபெற்ற உள்ளூர் ரீதியான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் அரியாலை சனசமூக நிலைய அணி வெற்றி பெற்றது.

மாவட்ட மட்டக் கரப்பந்தாட்டப் போட்டி ஆவரங்கால் மத்திய வி.கவுக்கும் ஆவரங்கால் இந்து இளைஞர் வி.கவுக்கும் இடையில் நடைபெற்றது. ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. அணி வெற்றியீட்டி சம்பியனானது.

மாவட்ட ரீதியான வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் 'ஏ' அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக 'ஏ' அணி மோதியது. தெல்லிப்பழை யூனியன் 'ஏ' அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது. (ஓ-135)


## காணி விற்பனைக்கு

யாழ். நகருக்கு சுமார் 4 Km தூரத்திலும் நல்லூர் கோயிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3 ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய 4¾ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் இரண்டாகப் பிரித்துக்கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்
தொ.பே.: 0772469015,
0725682849,
0786711952.

## விசேட மலிவு விற்பனை



புதுவருடப் பிறப்பை முன்னிட்டு
★ சாறி வகைகள்
★ சூட்டிங் வகைகள்
★ சேட் வகைகள்

ஏகாம்பரம் புடைவை மாளிகை
72 (9), பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2151


## கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள்
(சின்னமணி ஐயா)

எமது ஆலயத்தில் மகோற்சவக் குருவாகவும் விசேட தினங்களில் பிரதம குருவாகவும் இறைபணி புரிந்த சிவசிறி ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் (சின்னமணி ஐயா) அவர்களுக்கு எமது மனம் நெகிழ கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பரிபாலனசபை,
மண்கும்பான் வெள்ளைப்புற்றடி
ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.
(96530)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஏழாவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டுக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட

கௌரவ அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களைப் பாராட்டி அவர்களது சேவை எமது மக்களுக்கு மேலும் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
பணிப்பாளர்கள்,
கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி.
(சி/566505)


## விற்பனைக்கு

Yamaha PSR-E-213 ஓகன், ஸ்ரான் பேக்குடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: வைஷ்ணவி ரெடிமேட்ஸ்,
219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

யாழ்.நகரின் மத்தியில் இயங்கும் விடுதி ஒன்றிற்கு பராமரிப்பு வேலைகள் செய்வதற்கு 45 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் தேவை. 12ஆம், 13 ஆம் திகதிகளில் நேரில் வரவும்.
**Arrul Global Express,**
No. 1, Brown Rd, Navalar Rd,
Juncion Jaffna. 021 222 6113


## அன்னதான மண்டபத் திறப்புவிழா

கைதடி, ஏப். 12

கைதடி கலைநகர் அருள்மிகு கரவிடை அண்ணமார் ஆலயத்தின் அன்னதான மண்டபத் திறப்புவிழா இன்று திங்கட் கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் இ.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சமூக சேவையாளர் இ.திரவியமும்கலந்துகொள்வார். (க-201)


## Institute of computer Studies

யாழ் மண்ணில் புத்தூரில் புதிய உதயம்
I.C.S கணனியியல் கல்வி நிறுவனம்
தரம் : 01- A\L வரை மற்றும் ஏனைய மாணவர்களுக்கான கணனியியல் கற்கை நெறி மிக நவீன முறையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
பாட விதானம்
Computerized English courses
D.T.P.
computing hard ware
I.T
அனைத்து விதமான Diploma கணனியியல் கற்கை நெறிகளும் ஆரம்பமாகியுள்ளன.
உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்
பதிவுக்கட்டணம் இலவசம்
மாதக்கட்டணம் 400/= மட்டும்
சர்வதேசத் தரத்திலான சான்றிதழ்கள் வழங்கப்படும்.
முழு நேர or பகுதி நேர கணனி பெண் ஆசிரியர் தேவை
M.S Office, D.T.P, I.T தெரிந்த ஆசிரியர்கள் தேவை.
சுய விவரக் கோவையுடன் நேரில் வரவும்.

**Puttur west,**
Chunnagam Road, Puttur.
T.P.0213211982, FAX| 0214591625 E.mail:icsjaffna@gmail.com

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2012
கலை, வர்த்தக, கணிதப் பிரிவுகள் ஆங்கிலமொழி, G.I.T. வகுப்பும்
★ O/L DAY CLASS
★ Gr.1 முதல் O/L வரை
★ Gr. 6 TO 11 Eng. Medium
★ புலமைப் பரிசில் Gr. 5 (மாதிரிப் பரீட்சைகளுடன்)
★ I.C.T. செயன்முறைகளுடன்


## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் முத்துலிங்கம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் முத்துலிங்கம் (முன்னாள் சைக்கிள் கடை முத்துலிங்கம்) 10.04.2010 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கோணேஸ்வரியின் (ரஞ்சி - அச்சுவேலி) பாசமிகு கணவரும் துளசிதாஸ் (கனடா), ரேணுகா (பிரான்ஸ்), லதா (சுவிஸ்), அரிதாஸ்( நீர்கொழும்பு), லோகா (லண்டன்), யோகதாஸ் (பிரான்ஸ்), கோகிலதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலினி (கனடா), முருகானந்தராஜா(பிரான்ஸ்), குகநாதன் (சுவிஸ்), ரேணுகா (நீர்கொழும்பு) ஜெயரூபன் (லண்டன்), நிரோஷிகா (சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும் கீதன், யாதவி, லக்ஷனா, கீர்த்தனா, நிவேதனா, ஆதி சங்கர், சங்கவி, சுகன்யன், திவ்யன், திவிஷா, சாயிதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2010) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோவிலயம் அருகாமை, சுன்னாகம். தொ.பே. 0779586037

தகவல்: குடும்பத்தினர்
மருமகன் செளந்தரராசன்.
(96828)


இலங்கை சமூக பாதுகாப்புச் சபை
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு
SOCIAL SECURITY

## கணனி சகாசங்களும் கண்காட்சியும்

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இக் கணனிக்கண்காட்சியில் முண்ணனி உயர் கல்வி நிறுவனமான IIS CITY CAMPUS நிறுவனமும் அத்துடன் யாழ்மாவட்டத்தில் உள்ள பிரபல பாடசாலைகளும் பங்கேற்கின்றன.

இடம் :- யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
காலம் :- 14,15 ம் திகதி சித்திரை மாதம் 2010ம் ஆண்டு
நேரம் :- 8.30 தொடக்கம் 4.15 வரை

இக்கண்காட்சியை தொடர்ந்து நடைபெறும் பொதுஅறிவு,நுண்ணறிவுப் பரீட்சையில் பங்குபற்றும் மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் கணனி பயிற்சிநெறிகளை பயில்வதற்கான விண்ணப்ப படிவங்களை இக்கண்காட்சியிலே பெற்றுக்கொள்ள முடியும்

அனுசரணை

IIS CITY CAMPUS


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துடன் நாம் பேச்சு நடத்த வேண்டும் என்ற எமது முன்மொழிவை மக்கள் ஏற்றுள்ளனர்

நடந்து முடிந்த பொதுத் தேர்தல், அது குறித்த மக்கள் இயல்பு மற்றும் தமது எதிர்காலச் செயற்பாடுகள் குறித்து தமிழரசுக்கட்சியின் செயலாளரும்,கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா உதயனுக்கு வழங்கிய செவ்வியை இங்கே படியுங்கள்.

மாவை சேனாதிராசா உதயனுக்குச் செவ்வி

செவ்வி: எஸ்.ஸ்ரீகுமரன்

கேள்வி: நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிவாகை சூடியுள்ளது. அத்துடன் இலங்கை அரசியலில் மூன்றாவது பலமிக்க அணியாகவும் உள்ளது. இந்த வெற்றி குறித்து உங்களது பார்வை என்ன?

பதில்: நாங்கள் வெற்றி அடைந்தோம் என்று சாதாரணமாகச் சொல்வதைவிட பாரதூரமான நிலைமைகளின் மத்தியில் அவற்றை எதிர்கொண்டு இந்த வெற்றி யைச் சாதித்தோம் என்பதுதான் முக்கிய மானதாகும். விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடித்து வெற்றி பெற்ற நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரேநாடு ஒரே மக்கள் என்ற கோஷத்துடன் தமிழ் மக்களின் குரலை நசுக்கும் வகையில் செயற்பட்டு பல சுயேச்சைக் குழுக்களை இத் தேர்தலில் களமிறக்கி விட்டிருந்தார். அத்துடன் முழு அரச வளங்களையும் பயன்படுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் முழு வீச்சில் இத்தேர்தலில் பங்குபற்றியது.

மறுபுறத்தில் வன்னிப் போரில் பெற்ற மோசமான அனுபவங்களின் தழும்பு மறையாமல் இன்னமும் மோசமான பேரவலத்தில் வீழ்ந்து கிடக்கின்ற மக்களின் துயரங்கள் தீர்க் கப்படாத சூழலில் இத் தேர்தலை நாம் எதிர்கொண்டோம். மக்களின் மனநிலை தேர்தலுக்குத் தயாராக இல்லை. மக்களிடத்தில் போரிலும் சரி, ஜனநாயக ரீதியிலும் சரி எதையும் சாதித்து விடவில்லை என்ற எண்ணப்பாங்கு இருந்தது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்குச் சென்ற நிலை ஒருபுறம். நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் வாக்களிக்க முடியாதநிலை மறு புறம். இவ்வாறு பல்லாயிரக்கணக்கானோர் வாக்களிக்க முடியாத நிலையிலிருந்தனர். இவை யாவும் வாக்களிப்பு வீதம் குறையக் காரணமாக இருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் இரண்டு முக்கிய பகுதிகளைத் தனது தேர்தல் அறிக்கையில் முன் வைத்தது.

முதலாவது, தமிழர்கள் தனித்தன்மை வாய்ந்த தேசிய இனம், வடக்கு கிழக்கு இணைந்த மாநிலம், தமிழர்களின் தாயகம் என்ற ரீதியில் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையூடாக ஒரு தீர்வினை எட்டுவதற்கான எமது விரும்பத்தைத் தெரிவித்திருந்தோம். இந்தப் பேச்சுவார்த்தையில் திம்புக் கோட்பாடு மற்றும் ஒஸ்லோ உடன்படிக்கை ஆகியவற்றில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் அடிப்படையாகக் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்திருந்தோம்.

இரண்டாவது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதாகும். 20ஆண்டுகளாக இடம்பெயர்ந்துள்ள வலி. வடக்கு மக்கள், முஸ்லிம் மக்கள், அண்மைய போரில் இடம்பெயர்ந்துள்ள வன்னி மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும். அம்மக்களுக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் சர்வதேசத் தரத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த மக்களின் மீள் குடியேற்றத்துக்குத் தடையாக இருக்கும் உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படவேண்டும். போர் நிறைவடைந்த பின்னும் குவிக்கப்பட்டுள்ள இராணுவ பிரசன்னம் நீக்கப்பட்டு 1983இன் நிலைமைக்குத் திரும்ப வேண்டும். நீண்ட சிறைவாசம் அனுபவிப்போர், சரணடைந்த இளைஞர்கள் ஆகியோர் மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட வேண்டும். இவ்வாறு நாம் வைத்த முன்மொழிவுகளை மக்கள் ஏற்றுள்ளனர். அதற் கேற்ப வாக்களித்து வெற்றி பெறச்செய்துள்ளனர்.

## எம்மைத் தோற்கடிக்கவெனக் களமிறக்கப்பட்ட புதியஅணிகளையும் சுயேச்சைகளையும் மக்கள் தேர்தலில் நிராகரித்துள்ளனர்

### எம்மீதான குற்றச்சாட்டுகள் வேண்டுமென்றே சுமத்தப்பட்டவை

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை, தமிழ்த் தேசியத்தை விட்டு விட்டது, மாற்றானுக்கு விலைபோய் விட்டது, என்றெல்லாம் உங்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. ஆயினும் நீங்கள் வெற்றி பெற்றுள்ளீர்கள். இதன் மூலம் மக்கள் எவற்றை வெளிப்படுத்தியுள்ளனர் எனக் கருதுகிறீர்கள்?

பதில்: நீங்கள் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் வேண்டுமென்றே அபாண்டமாக எம்மீது சுமத்தப்பட்டன. இவை ஆதாரமோ,காரணமோ அற்ற குற்றச்சாட்டுக்களாகும். இவற்றின் பொய்மையை மக்கள் விளங்கிக் கொண்டுள்ளனர். இத் தேர்தலில் மக்கள் சில விடயங்களை உறுதிப்படுத்தியுள்னர்.

1.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் தமிழ் மக்களின் தலைமைத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

2.எமது தேர்தல் அறிக்கை மக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

3.எம்மைத் தோற்கடிக்க வேண்டுமென்பதற்காக களமிறக்கப்பட்ட புதிய அணிகளும் சுயேச்சைகளும் மக்களால் நிராகரிக்கப் பட்டுள்ளன.

4.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோல்வியடையச் செய்ய வேண்டுமென்ற மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணம் ஈடேறாமல் தடுக்கப் பட்டுள்ளது.

5.தமிழ் மக்கள் சார்பாக த.தே.கூட்டமைப்பால் முன் வைக்கப் பட்ட தேர்தல் அறிக்கையின் அடிப்படையில் செயற்பட மக்கள் அங்கீகாரம் அளித்துள்ளனர்.

### தேர்தல் அறிக்கையில் கூறியவற்றை எவ்வாறு நிறைவேற்றுவீர்கள்?

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் அறிக்கையில் கூறியுள்ள விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கு எத்தகைய நடவடிக் கைகளை மேற்கொள்ளவுள்ளது?



பதில்: தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது என்பது த.தே. கூவுக்கு மிகுந்த சவாலான விடயமாகும். நாம் விரைவில் எமது அமைப்பின் தேசிய மாநாட்டைக் கூட்டவுள்ளோம். அம்மா நாட்டில் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களை விவாதித்து பிரே ரணைகளாக முன்வைப்போம். அப்பி ரேரணைகளை இந்தியாவுக் கும் சர்வதேசங்களுக்கும் சமர்ப்பிப்போம். இந்தியாவும் சர்வதேசமும் இத் தேர்தலில் நாம் பெற்ற வெற்றியை ஏற்றுக் கொள்ளும் என்றே நம்புகின்றோம்.

அதேவேளை இலங்கை அரசுடன் எமது மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாம் பேச்சுவார்த்தைகளை நடத்துவோம். இலங்கை அரசு மக்களின் உடனடிப் பிரச்சினை கள் தொடர்பில் பேசித் தீர்வு காணாவிடினும் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் பேசாது விடினும் நாம் சாத்வீக வழியில் முன்னெடுப்பதைத் தவிர வேறு வழி இருக்காது என நினைக்கிறேன்.இதே வழிமுறைகளுடாக சர்வதேச சமூ கத்துடன் இராஜ தந்திரப் பேச்சுவார்த்தை களில் ஈடுபடவும் எண்ணியுள் ளோம். அதே நேரம் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மக்கள் அமைப்புக்க ளுடன் பேசவும் அவர்களது ஆலோசனைகளைப் பெறவும் எண்ணியுள்ளோம்.

இந்தப் பின்புலத்தில் எமது நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றி பெறுமென்றே நம்புகிறேன்.

### நெருங்கிச் செயற்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுடன் நெருங்கிச் செயற்படுவதில்லை என்றொரு குற்றச்சாட்டு உண்டு. இதற்கு உங்கள் பதில் என்ன?

பதில்: நாம் மக்களுடன் இருந்தமையாற்தான் மக்கள் எமக்கு வாக்களித்துள்ளனர். எனினும் மக்களி டம் அபிப்பிராயங்கள் இருக்கலாம். த.தே கூவின் வெற்றியானது எமது இலக்குகளை அடைய ஒரு புதிய அணுகு முறையையும் நடைமுறைக ளையும் தோற்றவித்திருக்கிறது என்றே கூறலாம். நேற்றுமுன்தினம் (சனி) யாழ்ப்பாணத்தில் வெற்றி பெற்ற த.தே. கூ. வேட்பாளர்கள் மக்களுடன் மிக நெருக்கமாக வேலை செய்வதற்கு பொருத்தமான வேலைத் திட்டங்களைச் செயற் படுத்துவதென்று தீர்மானித்தள் ளோம்.மக்களுடன் நம்பிக்கைய்யக் கட்டியெழுப்ப நாம் அனைத்து நடவடிக்கை களையும் எடுப்போம்.

கேள்வி: கூட்டமைப்பு இத்தேர்தலில் நாடாளாவிய ரீதியில் மூன்றாவது பலம் வாய்ந்த அணியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள போதும் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை முன்னைய தேர்தலில் பெற்றிருந்த நீங்கள், இத்தேர்லில் 13 ஆசனங்களையே பெற்றுள்ளீர்கள். இது வீழ்ச்சியில்லையா?

பதில்: இதை ஒரு வீழ்ச்சியென நான் கருதவில்லை. மக்களது குடிப்பரம்பல் 2004 இற்கும் 2010 இற்கும் இடையில் மாறியுள்ளது.அதுபோல அன்றிருந்த மக்களின் மனநிலையும் இன்றுள்ள மக்கள் மனநிலையும் ஒன்றல்ல. மக்களின் விரக்தி நிலை வாக்களிப்பு வீதத்தைக் குறைத்துள்ளது. பல மக்கள் வாக்களிக்க அச்சமடைந்த நிலையில் வாக்களிக்காது விட்டனர். அதேபோல இடம் பெயர்ந்த இலட்சக்கணக்கானோர் வாக்களிக்க முடியாது போயிற்று. பல இடங்களிலும் எமது ஆதரவாளர்கள் அச்சுறுத்தப்பட்டனர். இவையெல்லாம் எமது பிரதிநிதிகளின் எண்ணிக்கையை குறைத்துள் ளது. இதை ஒரு வீழ்ச்சியென நான் கருதவில்லை.

## தேசியக் கட்சிக்குரிய ஆதரவு நிரந்தரமானதல்ல!

### தேசிய கட்சிகளுக்குரிய ஆதரவு நிரந்தரமானதல்ல

கேள்வி: மறுபுறத்தில் மக்கள் தேசியக் கட்சிகளுக்கு ஆதரவளிக்கும் மனநிலை ஊக்கப்படுத்தப்பட்டுள்ளது எனக் கருதலாமா?

பதில்: உண்மையில் இன்றைய காலச்சூழல்தான் அக்கட்சிகளது வாக்கு வங்கியை நிறைத்துள்ளது. அரச அதி காரமும் வளங்களும் தாராளமாக பயன் படுத்தப்பட்ட, மக்களது அச்ச மனோ நிலையை சரியாகப் பயன்படுத்திப் பெற்றதே இந்த நிலைமை. முன்னரும் ஈ.பி.டி.பி. 9 ஆசனங்களைப் பெற்றி ருந்தது. மற்றவர்களுக்கு அப்போது வாய்ப்புக் கிடைக்கவில்லை. பின்னர் 2004 இல் இன்நிலைமை மாறியது. எனவே இன்றுள்ள நிலைமையைப் பல்வேறு புற நிலைமைகளோடு பொருத்திப் பார்த்தே நோக்க வேண் டும்.இந் நிலைமை நிரந்தரமெனவும் கூறமுடியாது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி பாடசாலை

(Maria Montessori Method)

| Class | Age | Time |
|---|---|---|
| Lower Nursery | 2½ - 3 | 8. 30 a.m 11.00 a.m |
| Upper Nursery | 3 - 4 | 8. 30 a.m 11.30 a.m |
| Pre - Grade | 4 - 5 | 8. 30 a.m 12.00 a.m |



100% ஆங்கிலத்தில் பயிற்சி

**பயிற்றுவிக்கும் முறைகள்**

* ஆங்கிலத்தில் பேச்சு பயிற்சிகள்
* (Audio & Video Visual) மூலமாக பாட்டு, கதைகள்
* கணனி தொடர்பான அறிவுசார் விளையாட்டுக்கள்
* பாரம்பரிய கதைகள், வரைதல், கைவேலைகள்
* இசைக்கருவி பயிற்சிகள் (Guitar, Keyboard)

100% எதிர்காலக் கல்வியில் வெற்றி

இன்றைய நவீன யுகத்திலே சிறு பிராயத்திலிருந்தே மாணவர்களின் ஆங்கில / தமிழ் அறிவை புதிய தொழில் நுட்பங்களுக்கேற்றவாறு விருத்தி செய்வதனூடாக எதிர்காலத்தில் அவர்கள் வளமான ஒரு வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்கமைவாக அவர்களை தயார்ப்படுத்தும் செயல் திட்டமே எமது முன்பள்ளிப் பாடசாலை

**BRITISH College of Higher Studies**

No.15,2/1, Sirambiyadi Lane,Off Stanley Road, Jaffna.
Tel: 021 2224550 HotLines: 0773501499 / 0777222422 Email: info@bchs.lk


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 08 ★ 02 ★ 1923



உதிர்வு 14 ★ 03 ★ 2010

## சவரிமுத்து சின்னத்துரை தேவசகாயம்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

''சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்''

கடந்த 14.03.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், நந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர்வளையம் மற்றும் துண்டுப்பிரசுரமூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும், யாழ். திருச்சிலுவை சுகநல நிலைய வைத்தியர்கள், அருட் சகோதரிகள், தாதிமார்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

மேலும் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்கான ஆராதனைகள் நாளை (13.04.2010) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் பங்குபற்றி ஜெபிக்குமாறும் அதனைத்தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறும் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

இல.28 நக்கா லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (96822)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# 32ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 15 * 03 * 1923



உதிர்வு 12 * 03 * 2010

## அமரர் முருகேசு சின்னத்தம்பி

அன்புத் தந்தையே!
எம் வாழ்விற்கு வழிதந்த
வலுவான கரமொன்றை இழந்தோம்!
எம் பாதைக்கு உரமிட்ட
நின் தோள்தன்னை இழந்தோம்!
எமக்காக உழைத்தந்து-எம்
உயிர்காத்த ஐயனை இழந்து
மாதமொன்று ஆனதையா!
எங்குதான் சென்றீர் எமைவிட்டு!
சித்தம் கலங்க சிந்தைதடுமாற
இன்னலில் ஏக்கத்தில் நெஞ்சம் நெகிழ
அஞ்சலி நாம் செய்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனை நாம் தொழுகின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்..
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.09, பவானி வீதி,
யாழ்ப்பாணம். (96666)

# சமய சந்நிதிகளில்

சங்கானை. ஏப்.12

சித்தன்கேணி ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் சங்காபிஷேக விழா இன்று திங்கட்கிழமை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பஜனைப் பாடல்களும் சைவ சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன. (201-29)

* * *

வடமராட்சி. ஏப்.12

அல்வாய் கிழக்கு, பெருங்கலட்டி தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி 21ஆம் திகதி அஷ்டோத்திர சதசங்காபிஷேகத்துடன் நிறைவுறும்.

இந்த உற்சவத்தை கெருடாவில் காட்டிமாரியம்மன் கோயில் குருவான கிரியாரத்தினம் சிவஸ்ரீபாலசுந்தரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைக்கவுள்ளார். (201-236)

* * *

தென்மராட்சி கிழக்கு. ஏப்.12

வரணி, சிட்டிபுரம் அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் இறுதிநாள் உற்சவம் இன்று திங்கட்கிழமை விசேட அபிஷேகம், அம்பாளுக்கான விசேட பூசைகள், குளிர்த்தி இடம்பெற்று அம்பாள் வீதி உலாவரும் நிகழ்வு இடம்பெறும். (201-122)

* * *

தென்மராட்சி கிழக்கு. ஏப்.12

வரணி வடக்கு, சிமிழ் அம்மன் ஆலய பங்குனித் திங்கள் இறுதிநாள் உற்சவ பூசை தினமான இன்று திங்கள் விசேட அபிஷேகம், பூசை என்பன இடம் பெறவுள்ளது. (201-122)

* * *

மாதகல், நுணசை முருகமூர்த்தி ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. எதிர்வரும் 27எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (201-29)

# பாராட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.12

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றத்தின் ஏற்பாட்டில் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரனின் மணி விழாவையொட்டிய பாராட்டுவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு கோப்பாய் பழையவீதி, நாச்சிமார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் சார்பில் வைத்திய கலாநிதி வை.தியாகராசா விழா நாயகனுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கவுள்ளார். (201)


## கார் விற்பனைக்கு

Nissan Presca, 1999, Full option இரண்டாவது உரிமையாளர், சிறந்த பராமரிப்பு, 1.3 மில்லியன்.

தொடர்பு: 0775136628

## German, Swiss Deutsch மொழி வகுப்புக்கள்

மேற்படி வகுப்புகள் வருகிற வைகாசி மாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

தொடர்புகளுக்கு:
MISS,Kajenthini.S
No-55,Somasundram Lane,
Chundukuly, Jaffna.
[யாழ்.கச்சேரிக்கு அருகாமையில்]
தொ.பே: 0771604823

## அரிசி விற்பனை

ரூபா 40/= இல் இருந்து ரூ 65/= வரையான குத்தரிசி, பச்சையரிசி, சம்பா என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

இடம்: சிவகணேசன் களஞ்சியம்,
163, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
[பழைய மீன்சந்தை அருகாமையில்]
தொ.பே: 0777283811

# Pre School வகுப்புகள்

(ஆங்கில மொழிமூலம்)

பாடசாலையில் ஆங்கில மொழிமூலம் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பாடசாலை பாடத்திட்டத்திற்கு அமைய ஆரம்பிக்கப்படுகிறது

**வகுப்புகள் : 1,2,3,4 & 5**

SUBJECTS *Maths, Enviorment Studies, English, Computer, Elocution.*

எமது புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கற்கைநெறிகளில் இணையும் மாணவர்களின் ஆங்கிலப் புலமை விருத்திசெய்யப்பட்டு அவர்களின் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளுக்கு எம்மால் உத்தரவாதம் அளிக்கப்படும்

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

No.15, 2/1, Sirambiyadi Lane,Off Stanley Road, Jaffna
Tel :021-2224550, 0777222422, 0714299935, 0773501499
Email :info@bchs.lk


# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 02 ★ 01 ★ 1950



உதிர்வு 14 ★ 03 ★ 2010

## அமரர் சுப்பையா பரிமளராசா

(கேவில் முள்ளியான்)

கடந்த 14.03.2010 அன்று சுகயீனம் காரணமாக இறைவனடி சேர்ந்த எங்கள் அன்பு அப்பாவின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.04.2010) திங்கட்கிழமை மு.ப.11.00 மணிக்கு கீரிமலை நகுலேஸ்வரர் தீர்த்தக்கரையிலும் நாளை (13.04.2010) செவ்வாய்க்கிழமை தற்காலிக முகவரியிலுள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைத்து அன்பு நெஞ்சங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

சபாபதிப்பிள்ளை வீதி,சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (96827) குடும்பத்தினர்.

# நன்றி நவிலல்

## திருமதி நிர்மலா ஸ்ரீகரன் (பரன்)

கடந்த 04.04.2010அன்ற காலமான எனது மனைவி திருமதி நிர்மலா ஸ்ரீகரன் (பரன்) அவர்களின் இறுதிச் சடங்கில் நேரில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் பத்திரிகை மூலம் அஞ்சலி செலுத்திய பளைப் பிரதேச செயலர், அவர்சார்ந்த உத்தியோத்தர், ஊழியர்கள்,கிளிநொச்சி மாவட்ட செயலக கிளைத் தலைவர்கள், பிரதேச செயலர்கள்,கிராம அலுவலர்கள் மற்றும் உத்தியோகத்தர், ஊழியர் அனைவருக்கும், யாழ். வைத்தியசாலை வைத்தியர்கள், மற்றும் தாதியர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர், நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தகவல்:
ஸ்ரீகரன் (பரன்)- கணவர்,
கிராம அலுவலர்,பச்சிலைப்பள்ளி
தொ.பே. 0776014885

# கண்ணீர் அஞ்சலி



எனது ஆத்மார்த்த குரு

## சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள்

சிவஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள் அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு மிகவும் துயரடைந்தோம். அவரின் ஆத்மா சாந்தி அடைய இறையருளை வேண்டுகிறோம்.

சாயி ஜீவானந்தன் மெல்போர்ண் ( குடும்பம்)
அவுஸ்திரேலியா. (96818) தொ.பே: 0212222715

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சின்னத்தம்பி கந்தையா

[ஓய்வுபெற்ற ஆசிரியர்]

பிறப்பு 14.07.1930 இறப்பு 15.04.2007

திதி: திரயோதசி

உங்களுடைய ஆத்மா சாந்தியும் அமைதியும் அடைய வீரபத்திரப் பெருமானையும் வைரவப் பெருமானையும் வேண்டுகின்றோம்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (96819) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பகாலத்தில் இப்பாடசாலை இயங்கியதாகக் கூறப்படும் திண்ணைப் பள்ளிக்கூடத்தின் இன்றைய தோற்றம்.

# சைவமும் தமிழும் தழைக்கப் பாடுபடும் யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயம்




சுகந்தன்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட இடப் பெயர்வு பெரும் முட்டுக்கட்டையாக அமைந்தது. தமது நிர்வாகத் திறமையினால் இப்பாடசாலையை அபிவிருத்திப்பாதைக்கு இட்டுச்சென்ற அதிபர்களை இங்கு நோக்குவோம். இப்பாடசாலையின் ஆரம்பகால அதிபர் எனும் பெருமையைப் பெறுபவர் மட்டுவிலைச் சேர்ந்த வேற்பிள்ளை நடராசா ஆவார். இவர் 1927-1947 வரையும் பின்னர் 1947ஆம் ஆண்டிலிருந்து 1968 வரையான காலப்பகுதி சு.விஜியரத்தினமும் 1968இல் எஸ்.பி.நடராசா சில மாதங்களும், பின்னர் 1968 இலிருந்து 1978வரையான காலப்பகுதியில் மு.பாஸ்கரதேவனும் 1978 இலிருந்து 1982 வரை க.மகேசனும் 1982 இலிருந்து 1992இற் கிடையில் கணேசலிங்கமும், இப்பொறுப்பை ஏற்றுள்ளனர். பின்னர் 1993 இலிருந்து 1996 வரையான காலப்பகுதியில் க.தங்கராஜாவும் 1996இலிருந்து 2004 வரையான காலப்பகுதியில் து.நடராசலிங்கமும் 2004 இலிருந்து 2009 வரையான காலப்பகுதியில் சி.மாணிக்கராஜாவும் பின்னர் 2009 இலிருந்து இன்றுவரை திருமதி மிமலாதேவி விமலநாதன் ஆகியோரது சிறந்த நிர்வாகத்தினாலும் ஆசிரியர்களது அயராத உழைப்பினாலும் எமது சமுதாயத்தின் வருங்கால சந்ததியினரை சிறந்த நற்பண்புடையவர்களாக உருவாக்கி வருகிறது என்றால் மிகையாகாது. தற்போது இப்பாடசாலையின் அதிபர் பதவியையேற்று மிகச்சிறந்த முறையில் வழி நடத்திவரும் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களிடம் உங்களது கல்லூரி வளர்ச்சியின் எதிர்காலத்திட்டம் பற்றி வினவியபோது.

இப்பாடசாலை ஆசிரியர்கள் மிகுந்த சிரத்தையுடனும்அக்கறையுடனும் பணியாற்றிவருவது பாராட்டத்தக்கதொன்றாகும் முக்கியமாக 1995ஆம் ஆண்டு இடப்பெயர்விற்குப்பின்னர் எமது மாணவர்களின் அடைவுமட்டம் வீழ்ச்சியடைந்த போதிலும் தற்போது வளர்ச்சி கண்டு வருகிறது. முக்கியமாக எமது மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்பு மட்டும் போதுமானதன்று. எனவே பெற்றோர்கள் கூடிய கவனமெடுத்துத் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.


அதேவேளை எமது ஜி.சீ.ஈ (சா/த) மாணவர்களின் அடைவுமட்டத்தை வருங்காலத்தில் அதிகரிக்கச் செய்வதற்கான முழுமுயற்சிகளையும் எடுத்துவருகின்றோம். அதன் மூலம் எமது பாடசாலையில் ஜி.சீ.ஈ (உ/த) பிரிவில் கலை, வர்த்தகத் துறைகளை சிறந்த முறையில் உருவாக்குவது எமது அவாவாகும். தற்போது உயர்தரவகுப்பில்கலைப்பிரிவில் ஒருவகுப்பைச் சிறந்த முறையில் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும் - என்றார்.

இப்பாடசாலை போதிய பௌதிக வளங்களைக் கொண்டு இயங்கி வந்தாலும் இப்பாடசாலையின் பெரிய குறையாகக் காணப்படுவது விளையாட்டு மைதானமே ஆகும். ஒருவருக்குக் கல்வி எவ்வளவிற்கு அவசியமோ அந்தளவிற்கு விளையாட்டும் அவசியமாகும்.

தற்போது இப்பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வளாகத்தில் நடத்தப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். நிறைவாக இத்தனை பாரம்பரியமும் தொன்மையும் வாய்ந்த இப்பாடசாலை எதிர்காலத்தில் வளர்ச்சிப்பாதையில்

*(முற்றும்)*

# மீண்டும் புத்துயிர் பெறுமா யாழ்ப்பாணக் கோட்டை?



யாழ்ப்பாணத்தில் காணப்படும் பல பழமைவாய்ந்த வரலாற்றுச் சின்னங்கள் சிறப்புமிக்கவையாகும். இன்றும் யாழிற்கு பெருமை சேர்ப்பவையா இவை காணப்படுகின்றன. அந்த வகையில் பல நூற்றாண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டையும் உள்ளடங்கும். இக் கோட்டைக்கு சிறப்பு மிக்க வரலாறு உண்டு. அதாவது கி.பி.1543ஆம் ஆண்டுகாலப் பகுதியில் முதன் முறையாக போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்தனர்.

கி.பி.1543ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி.1620ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த தமிழ் மன்னர்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் பெரும் யுத்தம் ஏற்பட்டது. எனினும் போர்த்துக்கேயரின் மூர்க்கத்தனமான நடவடிக்கைகளால் யாழ் மன்னர்கள் கைது செய்து கொலை செய்யப்பட்டனர். இறுதியில் யாழ்ப்பாணம் போர்த்துக்கேயர் வசமாகியது. அப்போது நல்லூரில் பெரியளவிலான கோயிலாகத் திகழ்ந்த நல்லூர் கந்தசுவாமிக் கோயிலின் தோற்றம், வானளாவிய ராஜகோபுரங்களுடன் கோட்டை போன்ற மதிற்சுவர்களுடன் தென்னிந்திய கோயில்களின் பாரம்பரிய வடிவில் அமைந்திருந்தது. இத்தோற்றம் போர்த்துக்கேயத் தளபதி கண்களை உறுத்தியது. உடனே அவன் தன் படைகளுக்கு நல்லூர்க் கோயிலை தரைமட்டம் ஆக்கும்படி உத்தரவிட்டான்.



இவன் உத்தரவின்படி கோயில் தரைமட்டமாக்கப்பட்டது.

அத்தோடு நின்றுவிடாமல் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட அனைத்து இந்து ஆலயங்களையும் அத்திபாரமே இல்லாமல் தரைமட்டமாக்கும்படி மீண்டும் தன் படையினருக்குப் போர்த்துக்கேயத் தளபதி உத்தரவிட்டான். சில நாள்களில் யாழில் காணப்பட்ட அனைத்து இந்துக் கோயில்களும் சிதைக்கப்பட்டு கற்குவியலாகக் காணப்பட்டன. இந்நேரம் போர்த்துக்கேயருக்கு இன்னொரு எண்ணமும் ஏற்பட்டது அதாவது பண்ணைக் கரையோரம் ஒரு பிரமாண்டமான கோட்டையைக் கட்டுவதே அவர்களின் திட்டமாக இருந்தது: திட்டமிட்டபடி கோட்டையைக் கட்டுவதற்கான இடத்தைத் தெரிவு செய்து வரைபடத்தை தயார் செய்தனர். பின்பு கோட்டை கட்டும்பணி ஆரம்பமானது. இதற்காக வேண்டிய பலவிதமான கற்களை முதலில் நல்லூர்க் கந்தசுவாமிக் கோயிலைச் சிதைத்ததன் மூலம் கிடைத்தவற்றைக்கொண்டு அத்திபாரமிட்டு கட்டடத்தை எழுப்பினர். பின்பு தரைமட்டமாக்கப்பட்ட ஏனைய ஆலயங்களிலிருந்து கற்களைப் பாரிய வண்டிகள் மூலம் பண்ணைக்குக் கொண்டுவந்து சேர்த்தனர்.

இன்னும் பலகற்கள் தேவைப்பட்டதால் அருகிலிருந்த தீவுகளிலிருந்து தோணிகள் மூலம் கற்களைக் கொண்டுவந்து சேர்த்தனர். கோட்டை கட்டும் வேலைக்காக யாழ்ப்பாண மக்களும் அடிமைகளாக்கப்பட்டனர். இரவு பகலாக நடந்த கட்டடப் பணியின் பலனாக கி.பி1625இல் பிரமாண்டமான கோட்டையை பண்ணைக்கரையோரத்தில் போர்த்துக்கேயர் உருவாக்கினர். அக் கோட்டை, இன்று அழிந்த நிலையிலுள்ள கோட்டை போன்ற தோற்றமின்றி சதுரவடிவிலேயே கட்டப்பட்டது. பல வசதிகளைக்கொண்டதாக உருவாக்கப்பட்ட இக்கோட்டை மொத்தத்தில் கம்பீரமும் பலமும் கொண்ட அதியற்புத கட்டட அமைப்பைக்கொண்டதாகக் காணப்பட்டது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் கட்டிய கோட்டை போன்று வேறு பகுதிகளிலும் கோட்டைகளைக் கட்டினர். ஆனால் இவை எவையும் யாழ்ப்பாணக் கோட்டை போன்று பிரமாண்டமானதாக இருக்கவில்லை என குறிப்பிடத்தக்கது.

கி.பி1657ஆம் ஆண்டில் அதாவது 32வருடங்களிற்குப் பின் யாழ்.கோட்டை மெருகூட்டிய தோற்றத்தில் காணப்பட்டதால் இக்கோட்டையை யாழ் மக்கள் இராஜவாசல் என்று அழைத்தனர். எனினும் போர்த்துக்கேயரால் நிரந்தரமாக இலங்கையை ஆட்சிசெய்ய முடியாமற்போனது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாபெரும் மென்பந்து கிரிக்கெற் போட்டி

யாழ்.மண்ணில் பிரபல நாளிதழ் "உதயன்" ஊடக அனுசரணையுடன் B.தர்மசேனன் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்கான மூளாய் விக்ரோறி வி.க. நடத்தும் மாபெரும் மென்பந்துக் கிரிக்கெற் சுற்றுப் போட்டி.

**போட்டி விதிமுறைகள்**

* போட்டியானது 6 பேரைக் கொண்ட 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டது.
* போட்டிகள் யாவும் வட்டு. மத்திய கல்லூரி மைதானத்தில் ( சங்கரத்தை Y.M.H.A.) இல் நடைபெறும்.
* யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றலாம்.
* போட்டிக் கட்டணம் 300/= மட்டும்.( விண்ணப்பப் படிவம் செலுத்தும் போதே போட்டிக்கட்டணம் செலுத்த வேண்டும்.
* விண்ணப்பப்படிவங்களை மூளாய் சிவாஸ் மில், யாழகம் (ஆஸ்பத்திரி வீதி) போன்ற இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
* விண்ணப்ப முடிவு திகதி 15.04.2010
* போட்டிகள் யாவும் 18.04.2010 இல் ஆரம்பமாகும்.

**பரிசு விவரம்**

* 1ஆம் இடத்தைப்பெறும் அணிக்கு ரூ.10,000 பணப் பரிசுடன் B.தர்மசேனன் ஞாபகார்த்த மாபெரும் வெற்றிக் கேடயம்.
* 2ஆம் இடத்தை பெறும் அணிக்கு ரூ.5000 பணப்பரிசுடன் வெற்றிக்கேடயம்.
* பெறுமதியான தொடர்நாயகன் விருது (Man of the Series)
* இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகன் விருது.

மேலதிக விபரங்களுக்கு: போட்டிக்குழு

**மூளாய் விக்ரோறி வி.க**

T.P. 0773400918 0772844917

E.mail: victorysportsclub@yahoo. com


# மாலைகட்டுதல், கோலம் போடுதல் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.12

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளில் தரம் 10, தரம் 11 மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட மாலை கட்டுதல், கோலம் போடுதல் போட்டிகளில் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:-

**தரம் 10 - மாலை கட்டுதல்**

முதலாம் இடம் - க.தவசுந்தரம் - சரசாலை ஸ்ரீகணேசாவித்தி, 2ஆம் இடம் - மு.அபிராமி - சாவகச்சேரி டிறிபேக், 3ஆம் இடம் - இ.யஜயந்திரா -உசன் இராமநாதன் ம.வி

**தரம் 11- கோலம் போடுதல்**

முதலாம் இடம் - சி.பிந்துஜன் -மிருசுவில் அ.த.க.பாட, 2 ஆம் இடம் - செ.நிஷாந்தினி - கச்சாய் அ.த.க.பாட, 3 ஆம் இடம் - க.டிலக்ஸனா - கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி,- கு.நிதுரஷணா - நாவற்குழி ம.வி. இவர்களைவிட ஒவ்வொரு பிரிவிலும் தலா ஏழு பேர் சிறப்புத் தேர்ச்சி, தேர்ச்சி பெற்றுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(04-207)


## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் 2¼ பரப்புக் காணி, 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

311/1, பலாலி வீதி, கோண்டாவில்,
021-222 8199, 0718475629.

## விற்பனைக்கு

**பனிசாரு பூங்கனிச் சோலை**

நல்ல இன தென்னம் நாற்றுக்கள், 1kg கொய்யா, பலா, கமுகு, மா,தேசி, தோடை, ஈரப்பலா மற்றும் அனைத்து வகையான பூங்கன்றுகளும் மிகவும் மலிவு விலையில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தொகையான எண்ணிக்கையில் விசேட விலைக் கழிவுடன் வழங்கப்படும்.


## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 12
திகதி - 10.04.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: Q — அதிர்ஷ்ட இலக்கம்: 10 — வெற்றி இலக்கம்: 9 9 5 7 9

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Q 10 9 9 5 7 9 | ரூ. 22,051,446.00 | - |
| 1 பரிசு | 10 9 9 5 7 9 | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 9 9 5 7 9 | ரூ. 100,000.00 | 02 |
| 3 பரிசு | 9 5 7 9 | ரூ. 10,000.00 | 26 |
| 4 பரிசு | 5 7 9 | ரூ. 1,000.00 | 225 |
| 5 பரிசு | 7 9 | ரூ. 50.00 | 2269 |
| 6 பரிசு | 9 | ரூ. 20.00 | 21974 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 9 9 5 7 | ரூ. 1,000.00 | 23 |
| 8 பரிசு | 9 9 5 | ரூ. 100.00 | 219 |
| 9 பரிசு | 9 9 | ரூ. 50.00 | 2292 |
| 10 பரிசு | Q | ரூ. 20.00 | 9062 |
| 11 பரிசு | Q 10 | ரூ. 100.00 | 1080 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,686,670.00

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ. 22,051,446.00

## பிரதிநிதிகள் தெரிவு

கொழும்பில் நடைபெறவுள்ள மக்கள் வங்கியின் இயக்குநர் சபைத் தெரிவுக் கூட்டத்தில் பொதுச்சபை உறுப்பினர்களாக யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கு பற்றவுள்ளனர்.

இதற்கான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் நிகழ்வு அண்மையில் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய அலுவலகத்தில்யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மக்கள்வங்கியின் யாழ். உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ். ஹென்றி, வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஆ.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் பின்வருவோர் பொதுச் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இராசரத்தினம் இராசாராம் (பொது முகாமையாளர், கடற்றொழில் சமாசங்களின் சம்மேளனம்), நா.சுந்தரலிங்கம் (தலைவர், வலி. கிழக்கு, தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்), நா.தவநாதன் (தலைவர், தெல்லிப்பழை ஐக்கிய வைத்திய சாலைச் சங்கம்), ஆ. செல்லத்துரை (தலைவர், யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்) சி.தேவகுமார் (பொதுமுகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்)




(04-135)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்டப் படையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட பெண்கள் கிரிக்கெட் தெரிவு அணியும் யாழ். மாவட்ட படையினரின் தெரிவு அணியும் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துரு சிங்கவுக்கு அறிமுகம் செய்யப்படுவதையும்-

அணி வீராங்கனைகள் பூவா தலையா போடுவதையும் போட்டியின் சில காட்சிகளையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:நேசன், தமிழினியன்)*

## தேசிய மட்டத்தில் விருது வென்ற யாழ். வீர, வீராங்கனைகளுக்கு பரிசளிப்பு

வலி.வடக்கு,ஏப்.12

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள், பெரு விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வில் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள்.

தேசிய மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களை மெய்வன்மைப் போட்டிகளில் பெற்ற அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த 19 வய துப் பிரிவில் கோலூன்றிப் பாய்தலில் வெற்றி பெற்ற எஸ். தனுஜா (2.8 மீற்றர்), பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த வி.ஹரிகரன் (19 வயதுப் பிரிவு), தட்டெறிதல் (42. 6 மீற்றர்)-

அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த கே.கணதீபன் (21 வயதின் கீழ்) கோலூன்றிப் பாய்தல் (3.80 மீற்றர்)-

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த எம். திருவீரன் (17 வயதுப் பிரிவு) கோலூன்றிப் பாய்தல் 3.40 மீற்றர்-

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த கே. ஹக்னோ அனோசன் (17 வயதுப் பிரிவு) கோலூன்றிப் பாய்தல் 3.25 மீற்றர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். வாகீசன் (21 வயதுப்பிரிவு) குண்டு போடுதல் 12.4 மீற்றர் ஆகியோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதனைவிட கோலூன்றிப் பாய்தலில் (19 வயதுப் பிரிவு) இரு விருதுகள் பெற்ற மகா ஜனாக்கல்லூரியைச் சேர்ந்த ரி.மோகுனாத் (3.40 மீற்றர்) பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகார வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர். ஸ்ரீதர்ஷன் 2.30 மீற்றர்

17 வயதின் கீழ் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். பத்மசந்திரா 2.20 மீற்றர் ஆர். ஜக்ஷனா 2.25 மீற்றர் இவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தேசியமட்ட பெருவிளையாட்டுப் போட்டிகளின் உடற்பயிற்சி போட்டியில் வெற்றிபெற்ற இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் பரிசில்கள் வழங்கப் பட்டன. (6-86)

## மரதன், சைக்கிளோட்டப் போட்டியில் பங்குபற்றுவோருக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.12

புத்தாண்டை முன்னிட்டு ஐ.ரி.என். தொலைக்காட்சி நிறுவனம் நடத்தும் ஆண்,பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டியில் பங்குபற்றுவோரை இன்று காலை 5.30 மணிக்கும் மரதன் ஓட்டப் போட்டியில் பங்குபற்றுவோரை முற்பகல்11 மணிக்கும் துரையப்பா விளையாரங்கிற்கு வருமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (6-23)

## யாழ்.மாவட்டத்தின் 15 பாடசாலைகளில் பயிற்சிக்கான ஆடுகளங்கள் அமைக்கப்படும்

### இலங்கைக் கிரிக்கெட் சங்கப் பணிப்பாளர் டி.சில்வா

வலி.வடக்கு,ஏப்.12

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பாடசாலைகளுக்கு இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் மூலம் பயிற்சிக்கான ஆடுகளம் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக கிரிக்கெட் சங்கத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான டி.எஸ்.டி. சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய நான்கு கல்லூரிகளுக்கும் 'அஸ்ரோ ரேவ் பிட்ச்' அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

அரியாலை கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல் லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கு சிமெந்திலான பயிற்சி ஆடுகளங்களும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (6-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## யாழ்.லீக்கின் உதைப்பந்தாட்டப் போட்டியில் ஊரெழு றோயல்,சென்மைக்கல் அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம் ஏப்12

யாழ். லீக்கின் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சென்மைக்கல், ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணிகள் வெற்றிபெற்றன.

யாழ் உதைப்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான சுற்றுப் போட்டி நடைபெற்று வருகின்றது.

இதில் கடந்த சனிக்கிழமை உரும்பிராய் மூன்று கோவில் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சென் மைக்கல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென் நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.இதில் சென்மைக்கல் விளையாட்டுக் கழகம் 2.1 எனும் கோல் கணக்கில் சென் நீக்கலஸ் விளையாட்டுக்கழகத்தை வெற்றி கொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சென்றொக்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் ஊரெழு றோயல் 6.0 எனும் கோல்கணக்கில் சென்றொக்ஸ் விளையாட்டுக்கழகத்தை தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு தெரிவானது. (6-23)

## யாழ்.மாவட்ட தாச்சி சம்பியனானது தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம்

வலி. வடக்கு- ஏப்.12

யாழ் மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகம் நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

மருதனார்மடம் கண்ணகி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக்கழகமும், தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் 4.1 புள்ளிகள் பெற்ற நிலையில் நிறைவடைந்தது.

இரண்டாது பாதி ஆட்டத்தில் கூட காளியம்பாள் விளையாட்டுக்கழகம் விளையாடி 3:1 புள்ளிகள் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழகம் 7:2 என்னும் புள்ளி அடிப்படையில் பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.. (6-86)



சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ். மத்திய கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் பரிசளிப்பு வைபவத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஞானப்பொன்ராஜா, யாழ். மத்தியகல்லூரி பிரதி அதிபர் பத்மநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலாவது, இரண்டாவது படங்களிலும்- ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்ட மத்திய கல்லூரி அணி [illegible] இணைந்து பரிசில் வழங்குவதையும் - வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணித் தலைவரிடம் வெற்றிக் [illegible] நான்காம் படங்களிலும் காணலாம். *(படங்கள்: தமிழினியன்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



எதிர்பாராத செலவுகள் இருந்தாலும், அதைச் சமாளிக்க வரவுகள் வரலாம். சொத்துக்கள் வாங்க, விற்க மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. தந்தை வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவீர்கள். விருந்து, விசேஷ நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். ஆதாயகர மான நாள்.

### இடபம்



எண்ணக் கனவுகள் நிறைவேறும் நாள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். பெண்கள் தொடர்பான வகையில் சந்தோஷ மான அனுபவங்களைப் பெறலாம். தாயின் உடல் நலனில் அக் கறை காட்டு வீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம்.

### மிதுனம்



நல்ல மனிதர் ஒருவர் உங்களின் வீட்டுக்கு வரலாம். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். உடன் பிறப் புக்களுடன் மனஸ்தாபம் வராமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல் வது நல்லது. குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிந்த ஒருவர் உங்க ளுக்கும் அறிமுகமாகலாம். சிவாலய வழிபாட்டின் மூலம் சிறப்பு பெறலாம்.

### கடகம்



அயலாரின் தொல்லைகளுக்கு ஆளாகலாம். ஆன்மீக விடயங் களுக்காகச் செலவு செய்வீர்கள். சில பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்கி விட்டு வருத்தம் அடைவீர்கள். சேமித்த பணத் திற்கு திடீரென செலவு வரலாம். வெளியூர் பயணங்கள் செல்ல போட்ட திட்டம் தள்ளிப் போகலாம். கோபம், வேகத்தை குறைக் கவும்.

### சிங்கம்



அமைதியாக செயற்பட்டு ஆறுதல் அடைய வேண்டிய நாள். வராமல் இருக்கும் கடன் மிகுதிகள் வசூலிப்பதில் அக்கறை காட்டு வீர்கள். உறவினர்கள் உங்களின் யோசனைகளை பாராட்டுவர். விலை உயர்ந்த பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து நடந்து கொள் வீர்கள்.

### கன்னி



வீடு, மனை வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறலாம். மனதில் ஓடிக் கொண்டிருந்த சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுப் பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வெளி யூர்களில் இருக்கும் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு முக் கிய விடயமாகப் பேசலாம். பெற்றோர் நலனில் அக்கறை காட்டு வீர்கள். அனுகூலமான நாள்.

### துலாம்



அரசியல் தொடர்புடையவர்கள் முன்னேற்றம் காண்பர். மருத்து வச் செலவுகளைத் தவிர்க்க உடல் நலத்தில் கவனம் அவசியம். மங்கல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கலாம். உறவினர்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவர். நீண்ட நாள்களாக சந்திக்காத ஒருவரை சந்திக்கலாம். கொண்டாட்டங்களில் பங்கேற் கலாம்.

### விருச்சிகம்



பல நாள்களாக நடைபெறாமல் இருந்த காரியம் ஒன்று இன்று திடீரென நடக்கலாம். கடன் விவகாரங்களை சாக்குப் போக்குச் சொல்லி சமாளிப்பீர்கள். மற்றவர்கள் உங்களைப் பார்த்து பொறா மைப் படும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கும். முக்கியமான ஒருவரைப் பற்றி மற்றவர்களிடம் விமர்சிப்பீர்கள். ஏமாற்றம் நேரும்.

### தனுசு



விரோதங்கள் விலகி பாசம் அதிகரிக்கும் நாள். எப்படி ஆகுமோ என பயந்த காரியம் ஒன்று விரைவில் முடிவுக்கு வரலாம். பெற் றோர் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர். வெளியூர் களில் இருந்து வரும் நல்ல செய்திகளைக் கேட்கலாம். நண் பர்களுக்கு தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். ஆனந்தமான நாள்.

### மகரம்



பிறரை நம்பி எந்தக் காரியத்தையும் செய்வதைத் தவிர்க்க வேண்டும். பண விவகாரங்களில் ஜாமீன் கொடுக்க வேண்டாம். சகோதரிகள் வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட் கலாம். குடும்பத்தில் சலசலப்புகள் வராமல் இருக்க பேச்சில் நிதா னத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். பழமையான விடயங்க ளில் நாட்டம் செல்லும்

### கும்பம்



எடுத்த காரியங்களை தங்கு தடையின்றி செய்து முடிப் பீர்கள். பற்றாக்குறை நிலைமை மாறி புதிய பணவரவுகள் வர லாம். அயலார் ஒத்துழைப்பு கிட்டும். சில வேலைகளை தாமத மாக தொடங்கினாலும், சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். உறவி னர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். குடும்ப பாசம் அதிகரிக்கும்.

### மீனம்



முன்யோசனை இல்லாமல் செய்த காரியம் ஒன்றால் பிரச்சினை உருவாகலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். பெற்றோருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் விலகும். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். தடை, தாமதம் நேரும்.


அனைவரையும் அழைக்கிறோம்

JAFFNA International TRADE FAIR 2010

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை 2010

2010 ஏப்பிரல் 18 முதல் 20 வரை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்

மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 7.00 வரை



சித்தாரா மற்றும் பிரபல கலைஞர்களின் இசை நிகழ்ச்சி

நவநாகரிகக் காட்சி / கைத்தொழில் கருத்தரங்குகள்

முதலீட்டு அரங்கம் / விசேட உணவுகள், குடிபானங்கள் முதலியன

ORGANISED BY: LEC LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED

FOR INFORMATION CONTACT:
4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mawatha, Colombo 03
Tel: 2390560-2 Fax: 2390563 E-mail: rizwan@saexhibitions.com
www.saexhibitions.com/jitf

IN ASSOCIATION WITH CCIY | JOINTLY ORGANISED BY FCCISL | SUPPORTED BY SRI LANKA CONVENTION BUREAU | SPONSOR Sri Lanka Telecom Mobitel We Care. Always.

PARTNER COUNTRY INDIA | OFFICIAL PRINT MEDIA | OFFICIAL RADIO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்றங்களால் குறிவைக்கப்படும் சிறிலங்கா!

அறுபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சுதந்திரமடைந்ததாகக் கூறப்படும் சிறிலங்கா, வரலாற்றில் என்றுமில்லாத அளவு சர்வதேச அழுத்தங்களுக்கு முகம்கொடுத்து நிற்கிறது.

சிறிலங்கா மேற்கொண்ட போருக்கு ஆதரவு வழங்கிய தரப்புகளில், இரு பெரும் சக்திகளான அமெரிக்காவும், பிரித்தானியாவும் இந்த அழுத்தத்தை வழங்குவதில் முன்நிற்கின்றன.


சரத் பொன்சேகா

நடைபெற்று முடிந்த போரில், ஆயிரக்கணக்கான (ஐ.நாவின் முன்னால் பேச்சாளரின் கருத்துப்படி இறுதிக் கட்டப் போரில் மட்டும் சுமார் 40 ஆயிரம் மக்கள்) கொல்லப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து சர்வதேச அழுத்தங்கள் படிப்படியாக ஆரம்பித்தன.

இதன் ஒரு கட்டமாக இலங்கைத் தீவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஷிலில் (Un Human Right Council) விசேட அமர்வொன்று இடம்பெற்றது.

இதனை மேற்கத்தேய நாடுகளே முன்மொழிந்ததுடன் அதில் அக்கறையும் செலுத்தியிருந்தன.

ஆனால், அன்றைய காலப்பகுதியில், இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதுவராக ஜெனிவாவில் பணியாற்றிய தயான் ஜயதிலக்க தனது இராஜதந்திர சாணக்கியத்தின் மூலம் அதனை முறியடித்திருந்தார்.

தயான் ஜயதிலக்க சிறிலங்காவினுடைய இராஜதந்திரிகளில் தனக்கென ஒரு தனிமுத்திரை பதித்தவர்.

அதேவேளை முன்னாள் ஜெனரல் சரத்பொன்சேகா கள முனையில் வழங்கிய பங்களிப்புக்கு நிகரான பங்களிப்பை சர்வதேச ரீதியில் வழங்கியவர்.

ஜெனரல் சரத்பொன்சேகாவை தேசிய கதாநாயகனாகவும், தயான் ஜயதிலக்கவை சிறிலங்காவின் சர்வதேச கதாநாயகனாகவும் சில மாதங்களுக்கு முன்னர் உள்நாட்டு ஊடகங்கள் வர்ணித்திருந்தன.

ஆனால் இன்று, சிறிலங்கா மேற்குலகிலிருந்து எதிர்நோக்கியுள்ள நெருக்கடியை சமாளிப்பதற்கு டயான் ஜயதிலக்க சிறிலங்காவின் இராஜதந்திரப் பணியில் நேரடியாக இல்லை.

மனித உரிமை மீறல் தொடர்பாக எழுகின்ற குற்றச்சாட்டுகளில், பிரதானமானதாகவும் சவால் மிக்கதாகவும் போர்க் குற்றச்சாட்டே முன்வைக்கப்படுகிறது.

அதனை மஹிந்த நிர்வாகம் அடியோடு மறுத்து வருகிறது. ஆனால், ஒரு காலத்தில், தேசிய கதாநாயகனாகப் பார்க்கப்பட்ட முன்னாள் ஜெனரல் சரத்பொன்சேகாவே போர்க்குற்றம் இடம்பெற்றதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இது மஹிந்த நிர்வாகம் கடும் நெருக்கடியை எதிர்கொள்வதற்கு வழிவகுத்தது.

ஏனெனில், 4ஆம் கட்ட ஈழப்போரின் முக்கியமான கட்டங்களிலிருந்து அது நிறைவடையும் வரை சிறிலங்காவின் இராணுவத் தளபதியாக ஜெனரல் சரத்பொன்சேகாவே இருந்தார்.

சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலாளரே போர்க் குற்றம் இழைத்தமைக்கான பொறுப்பெனவும், அது தொடர்பான விவரங்களை தான் சர்வதேச சமூகத் திடம் தெரிவிக்கத் தயார் எனவும் தடுப்புக்காவலில் வைக்கப்படுவதற்கு முன்னர் ஜெனரல் சரத்பொன்சேகா ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

அதேவேளை, போர் நடைபெற்று முடிந்த பிற்பாடு அம்பலாங்கொடையில் பேசும் போது, தனது படையினர் போரில் வெற்றிபெறுவதை உறுதிப்படுத்துவதற்காகத் தாம் போர் மரபுகளை மீறிச் செயற்பட்டதென்ற கருத்தை முன்னாள் ஜெனரல் சரத் பொன்சேகா தன் வாயாலேயே கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆக மொத்தத்தில், சிறிலங்காவின் ஆயுதப் படையினர் போர்க்குற்ற மீறல்களை நிகழ்த்தியிருக்கின்றனர் என்பதை அதில் தொடர்புடைய பொறுப்புமிக்க தரப்புகளே ஏற்றுக்கொண்டுள்ளன.

அதேவேளை, போர்க்குற்றம் இழைக்கப்பட்டு பெறப்பட்ட வெற்றியின் கதாநாயகர்களில் பிரதானமானவரும் மஹிந்த நிர்வாகத்துடன் இல்லை.

அத்துடன், அந்தப் போர்க்குற்ற மீறல்களை நியாயப்படுத்திய சிறிலங்காவின் சர்வதேச கதாநாயகனும், சர்வதேச ரீதியாக போர்க்குற்றச்சாட்டு முதன்மை பெற்றுள்ள தருணத்தில் மஹிந்த நிர்வாகத்துடன் இல்லை.

போர்க்குற்ற மீறல்களை போரில் ஈடுபட்ட இரு தரப்புமே மேற்கொண்டதாகக் கூறப்படுகின்ற போதும், அதில் மற்றத் தரப்பான விடுதலைப் புலிகளில் அதற்கு பொறுப்பான யாரும் உயிருடன் இல்லை.

ஆதலால், சிறிலங்காத் தரப்பினரே பொறுப்புக்குரிய பிரதான தரப்பாக மாறியுள்ளனர்.

அத்துடன், பாரிய போர்க்குற்றச் செயல்களை சிறிலங்கா ஆயுதப் படையினரே நிகழ்த்தியுள்ளனர் என்ற கருத்து சாட்சியங்களுடன் மேலோங்கி வருகிறது.

போர்க்குற்றச்சாட்டு விடயம் இன்றோடு அல்லது இன் னும் சிறிது காலத்தோடோ முடிவுக்கு வரப்போவதில்லை.

இனிவரும் காலத்தில்தான், அதனுடைய கூரியமுனை சிறிலங்கா மீது பாயவிருக்கிறது.

அதனடிப்படையில், போர்க்குற்றம் தொடர்பான பின்புலத்தை அலசி, அது எவ்வாறு இலங்கைத் தீவின் இன்றைய நிலைப்பாட்டோடு தொடர்புபடுகின்றது என்பதை ஆய்வுக்கு உட்படுத்துகிறது இந்தக் கட்டுரை.

பல நூற்றாண்டுகளாக நீதியை நிலைநிறுத்துவதற்கான மரபுகள் நிலவி வந்த போதும், இவை யாவும் முதல் மற்றும் இரண்டாவது முறையாக சர்வதேச சட்டங்கள் என 1899 மற்றும் 1907ம் ஆண்டுகளின் ஹேக் சமவாயங்களிலேயே (Hague Conventions) ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டன.

இவற்றின் தொடர்ச்சியாகவே ஜெனிவா சமவாயமும் (Geneva Convention) நோக்கப்படுகிறது.

நான்கு ஜெனிவா சமவாயங்களுக்கும் பொதுவான சரத்து 3 சர்வதேச சட்ட மரபுகளை பிரதிபலிக்கிறது.


கோத்தபாய

சட்டங்களை அல்லது போர் மரபினை மீறுகின்றமை போர்க் குற்றம் எனப்படும். படுகொலை செய்தல் அல்லது சர்வதேச தராதரங்களுக்கு புறம்பான வகையில் போர்க் கைதிகளைக் கையாளல், கைதுசெய்யப்பட்டவர்களை அல்லது நிபந்தனையின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை கொல்லுதல், தீயநோக்கோடு மாநகரங்களை, நகரங்களை மற்றும் கிராமங்களை அழித்தல் போன்ற விடயங்கள் போர்க் குற்றத்துக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

போர்க்குற்றங்களின் நவீன கால கோட்பாட்டு அபிவிருத்தியாக 1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் 8ஆம் திகதி வெளியிடப்பட்ட லண்டன் பட்டயத்தை (London Charter) அடிப் படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நூரன்பேர்க் தேர்வாய்வு (Nurembery Trials) காணப்படுகிறது.

அத்துடன், குறித்த பட்டயம் சமாதானத்திற்கு எதிரான குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றம் ஆகியவற்றையும் வரையறை செய்கிறது.

சிறிலங்கா மீதான போர் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டுவரப்படும் 'வீற்றோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்திருந்தன.

அதேவேளை, சிறிலங்கா மீதான போர்க்குற்றச் சாட்டுக்கள் விசாரிக்கப்பட வேண்டும் என எந்தவொரு அரசும் இதுவரை இராஜதந்திர காரணங்களுக்காக தனித்து முறையிடவில்லை.

அதனால், சிறிலங்கா அரசு இழைத்த போர்க்குற்றச் சாட்டுக்கள் நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்துக்கோ (International Court of Justice - ICJ) அல்லது போர் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு பொறுப்பான தனிநபர்கள் இதுவரை ஆக்கபூர்வமான முறையில் குற்றச்சாட்டுக்கு உட்படுத்தப்படாமையால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கோ (International Criminal Court - ICC)செல்லும் வாய்ப்பையும் பெறவில்லை.

ஆயினும், இவை எதிர்காலத்தில் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன.

நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்தில் முதலாவது முறைப்பாட்டை பிரித்தானியா 1947 மே 22 ஆம் திகதி அல்பானியாவுக்கு எதிராக மேற்கொண்டிருந்தது.

அதே பிரித்தானியாவே, இன்று சிறிலங்கா தரப்பு மேற்கொண்ட போர் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும் என முன்நிற்கிறது. அதேவேளை, இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக நீதிபெறும் இன்னொரு மார்க்கமாக, இத்தாலியில் ஸ்தாபிக்கப்பட்ட நிரந்தர மக்கள் நீதிமன்றம் (Perment Peoples Tribunal) திகழ்கிறது.

இது அரசுகளிலிருந்து அப்பாற்பட்டதாகவும், சுயாதீனமான ஒரு கட்டமைப்பாகவும் இயங்குகிறது. இந்த நிரந்தர மக்கள் நீதிமன்றமே, சிறிலங்கா அரசு மேற்கொண்டதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணையைக் கடந்த ஜனவரி மாதம் அயர்லாந்து தலைநகர் டப்ளினில் நடத்தியது.

விசாரணையின் முடிவில், சிறிலங்கா அரசு போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் அநீதியை இழைத்துள்ளதாகத் தீர்ப்பு வழங்கியது. இந்த அமைப்பு, உலகின் முதலாவது இனப்படுகொலை யான ஆர்மேனியா இனப்படுகொலை (Genocide) தொடர்பான முக்கியத்துவம் மிகுந்த தீர்ப்பை 1984 ஏப்ரல் 16 இல் வழங்கியிருந்தது.

ஆகவே, சிறிலங்கா அரசு தொடர்பாக நிரந்தர மக்கள் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு முக்கியத்துவம் மிக்கது எனக் கருதலாம்.

அந்தத் தீர்ப்பில், சிறிலங்கா அரசு போர்க்குற்றம், மனித குலத்திற்கு எதிரான குற்றம் ஆகியவற்றை புரிந்ததாகவும், சிறிலங்கா அரசு மீதான இனப்படு கொலை தொடர்பான முறைப்பாடுகளுக்கு மேலதிக விசாரணை தேவை மற்றும் சமாதானப் பேச்சுகள் முறிவடைந்தமைக்கு சர்வதேச சமுகமே பொறுப்பு, குறிப்பாக அமெரிக்காவும் பிரித்தானியாவுமே இந்தப் பொறுப்பினை பகிர்ந்துகொள்ள வேண்டுமென தெரிவித்திருந்தது.

இந்தத் தீர்ப்பு வெளியாகி சுமார், இரண்டரை மாதங்கள் கழிந்த நிலையில், கடந்த காலத்தில் சிறிலங்காவுக்கு ஆயுதங்களை வழங்கியதற்காக பிரித்தானியா மனவருத்தம் தெரிவித்துள்ளதோடு, எதிர்வரும் காலப்பகுதியில் சிறிலங்காவுக்கு ஆயுதங்கள் வழங்கப்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாக அறியவருகிறது.

அத்துடன், ஐ.நா செயலாளர் நாயகம் சிறிலங்காவில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவை, சிறிலங்கா அரசின் மறை முகச் செயற்பாடுகள் காரணமாக அணிசேர நாடுகள் (Non - Aligned Movement) ஆரம்பத்தில் எதிர்த்திருந்தன.

ஆனால், தற்போது தமது நிலைப்பாட்டை மாற்றி அந்த விசாரணைக்குழுவுக்கு தமது ஆதரவினை தெரிவித்துள்ளன.

இதில், பிரித்தானியாவின் வகிபாகத்தால் சிறிலங்கா தரப்புகள் சினம்கொண்டுள்ளன.

அதேவேளை, மனித உரிமை நிலைகள் மோசமடைந்து வருவதால், சிறிலங்காவுக்கான ஜி.எஸ்.பி பிளஸ் (GSPT) சலுகை இடைநிறுத்தப்பட்டது. இதிலும் பிரித்தானிய முக்கிய பங்கு வகித்தது.

இவை சிறிலங்கா அரசின் மீது சர்வதேச ரீதியாக அதிகரித்து வரும் நெருக்கடியை கோடிட்டுக் காட்டுகின்றன.


தயான் ஜயத்திலக்க

அதேவேளை, பர்மாவில் (மியான்மார்) நிகழ்த்தப் பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணை நடத் தப்பட வேண்டும் என பிரித்தானியா அண்மையில் அறிவித்திருந்தமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இது, சீனாவுக்கு விரும்பத் தக்கதல்ல. ஆயினும், எதிர்ப்புகளை ஒரு புறம் தள்ளியபடி, பிரித்தானிய முக்கியமான ஒரு நகர்வை துணிகரமாக மேற்கொள்கிறது.

அதேவேளை, சிறிலங்கா தொடர்பாக சீனா தொடர்ந்தும் ஆதரவு நிலைப்பாட்டையே எடுக்கும் என எதிர் பார்க்க முடியாது.

சீனாவின் அரசியல், இராணுவ, பொருளாதார நலன்களை கவனத்திற்கொள்ளும் போது, ஈரானுடன் ஒப்பிடுமிடத்து சிறிலங்கா சீனாவுக்கு ஒரு சிறிய பகுதிதான்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் ஈரானுக்கு எதிராக அண்மையில் மூன்று தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த தீர்மானங்களை சீனா எதிர்க்கவில்லையென்பது முக்கியத்துவம் மிக்கது.

இதில், மேற்குலகின் இராஜதந்திரம் செல்வாக்கு செலுத்தியது. ஆகவே, மேற்குலகால் சிறிலங்காமீது முன்னெடுக்கப்படும் போர் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு சீனா எதிர்ப்புத் தெரிவிக்காத தன்மை தோன்றக்கூடிய சாத்தியப்பாடுகள் முன்னரைவிட தற்போது அதிகமாகத் தென்படுகின்றன.

அதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்சிலில் சிறிலங்காவுக்கு எதிரான தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது அதனை முறியடிக்கத் துணைபுரிந்த இந்தியா, தற்போது அணிசேரா நாடுகள் எடுத்துள்ள நிலைப்பாட்டிற்கு எதிராக இதுவரை எத்தகைய நடவடிக்கைகளிலும் இறங்காமல் உள்ளமை கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

இது, இந்தியா இலங்கைத் தீவு தொடர்பாக எடுக்க இருக்கும் கொள்கைமாற்றம் ஒன்றிற்கான ஆரம்பப் புள்ளியா என்ற வினாவை எழுப்புகிறது.

அத்துடன், இராணுவப் பயிற்சிகள் தொடர்பாகவும், அதில் சிறிலங்காவிலும், அமெரிக்காவிலும் குறித்த நாட்டுப் படையினர் பங்குபற்றுவது தொடர்பாக உருவான முறுகல் நிலை உச்சநிலையை தொட்டுநிற்கிறது. இது, சிறிலங்கா, பிரித்தானியாவுடன் மட்டுமல்ல அமெரிக்காவுடனும் முரண்பாட்டு நிலையை தொடர்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

ஆகவே, அமெரிக்காவும் பிரித்தானியாவும் முதன்நிலை வகிக்கும் சர்வதேச சமூகத்தோடு, குறிப்பாக மேற்குலகோடு சிறிலங்கா அரசு வேண்டத்தகாத விளைவுகளை உண்டாக்கக்கூடிய முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

மேலே கூறப்பட்ட பல புள்ளிகளையும் ஒன்றாக இணைக்கும் போது ஒரு கோலம் உருவாகிறது.

இந்தக்கோலம், சிறிலங்கா வரலாற்றில் என்றுமில்லாத நெருக்கடியை சர்வதேச ரீதியாக எதிர்கொள்ளப்போகிறது என்பதற்கான குறிகாட்டியாகும்.

இதனை ஈழத்தமிழ் மக்கள் எவ்வாறு கையாளப் போகிறார்கள் என்பது அவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் காத்திரமான பங்கை வகிக்கும்.

- நன்றி: 'புதினப் பலகை'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## உயிரியல் | பகுதி - I

### பல்தேர்வு வினாக்கள்

01. உயிரியல் கல்வி கற்பது பற்றிய பின்வரும் கூற்றுக்களில் தவறானது எது?
    1) உயிர்ப்பல்வகைமை பற்றி விளங்கிக்கொள்ளலாம்.
    2) மனித உடல் அதன் தொழிற்பாடுகளை விளங்கிக்கொள்ளலாம்.
    3) இயற்கை வளங்களின் முகாமையை விளங்கிக்கொள்ளலாம்.
    4) பேண்தகு உணவுற்பத்தியை விளங்கிக்கொள்ள முடியாது.
    5) நோய்களைப் பற்றியும் அதற்கான காரணங்களையும் விளங்கிக்கொள்ளலாம்.

02. விலங்குகளில் காணப்படும் பின்வரும் தொடர்புகளில் இறங்குவரிசையில் சரியானது எது?
    1) மூளை, அங்கத்தொகுதி, நரம்புக்கலம், நரம்பு இழையம்.
    2) அங்கத்தொகுதி, கலக்குடித்தொகை, நரம்பிழையம், மூளை.
    3) அங்கி, அங்கத்தொகுதி, இழையம், கலம், அங்கம்.
    4) நரம்புத்தொகுதி, மூளை, நரம்பிழையம், நரம்புக்கலம்.
    5) அங்கத்தொகுதி, இழையம், மூளை, நரம்பிழையம், நரம்புக்கலம்.

03. பின்வருவனவற்றுள் எது புரதமல்ல?
    1) ஈமோகுளோபின். 2) இலிப்பேசு. 3) இன்சுலின்.
    4) ஈஸ்ரோஜன். 5) பிறபொருள் எதிரி.

04. பின்வரும் கட்டமைப்பு - தொழிற்பாடுகளில் பிழையானது எது?
    1) கொல்கி உபகரணம் - சுரப்புக்களைப் பொதியாக்கல்.
    2) நுண்புன்குழாய் - தசைச்சுருக்கம்.
    3) இலைசோசோம் - கலச்சமிபாடு.
    4) இரைபோசோம் - புரதத்தொகுப்பு.
    5) புன்கரு - இரைபோசோம் தொகுப்பு.

05. சயனைட்டின் (Cyanide) அனுசேபச் செயற்பாட்டைப் பாதிக்கக்கூடியது,
    1) இழைமணி. 2) இலைசோசோம்.
    3) அகக்கலவுருச் சிறுவலை. 4) பெரொக்சிசோம்.
    5) இரைபோசோம்.

06. கலமென்சவ்வின் பாய்மச் சித்திர மாதிரியின் கட்டமைப்பில் புரதம் பற்றிச் சரியானது,
    1) இரு தொடர்ச்சியான புரதப் படையமைப்பாகக் காணப்படும்.
    2) நீர் நாட்டமுள்ள புரதப்படை வெளிப்புறமாக மட்டும் காணப்படும்.
    3) பொஸ்போ இலிப்பிட்டுப் படையில் புரதம் பல்வண்ணமாக அமைந்திருக்கும்.
    4) புரதப்படை கலமென்சவ்வின் வெளிமேற்பரப்பை இனங்காண உதவும்.
    5) எழுந்தமாகக் காணப்படும் பாய்மச் சித்திர மாதிரியில் புரத முனைவாக்கமில்லை.

07. பின்வரும் அனுசேபச் செயற்பாடு இலற்றிக்கமில நொதித்தலுக்கும், கலச் சுவாசத்திற்கும் பொதுவானது எது?
    1) கிளைக்கோ பகுப்பு. 2) பைருவேற் ஒட்சியேற்றம்.
    3) கிரெப்பின் வட்டம்.
    4) இலத்திரன் இடமாற்றுகைச் சங்கிலி.
    5) பைருவேற் இலற்றிக்கமிலமாகுதல்.

08. பின்வரும் அனுசேபச் செயற்பாடுகளில் எதில் $CO_2$ அதிகளவு உருவாக்கப்படும்?
    1) கிளைக்கோ பகுப்பு. 2) கிரெப்பின் வட்டம்.
    3) இலத்திரன் இடமாற்றுகை சங்கிலி.
    4) இலற்றிக்கமில நொதித்தல். 5) அற்ககோலுக்குரிய நொதித்தல்.

09. பின்வரும் செயன்முறைகளில் கல்வின் வட்டத்தில் (Calvin Cycle) நடைபெறாதது எது?
    1) காபன் பதித்தல். 2) ஒட்சிசன் வெளியேறல்.
    3) $O_2$ பயன்பாடு. 4) NADPH பயன்பாடு.
    5) RUBPமீள புத்துயிர்ப்பு.

10. பின்வருவனவற்றுள் பிழையானது எது?
    1) அழுத்தமான அகக்கலவுருச் சிறுவலை வலையுருவ குழாயுருப்பையமைப்பு.
    2) அழுத்தமற்ற அகக்கலவுருச் சிறுவலை மென்சவ்வு பொஸ்போ இலிப்பிட்டு தொகுக்கும்.
    3) கொல்கி உபகரணம் லைசோசோம் உருவாக்கம்.
    4) கிளையொட்சிசோம் தாவரக்கலத்தில் மட்டும் காணப்படும்.
    5) பெரொக்சிசோம் ஒளிச்சுவாசத்தில் ஈடுபடும்.

11. பின்வருவனவற்றுள் எது மனித உடலில் மிகப்பெரிய அளவில் சேமிப்பாக இருக்க முடியாது?
    1) இலிப்பிட்டு. 2) கிளைக்கோஜன்.
    3) இரும்பு. 4) விற்றமின் C
    5) விற்றமின் A

12. புரதங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் பிழையானது எது?
    1) புரதங்கள் உயர் வெப்பநிலையில் இயல்பு மாற்றமடையும்.
    2) புரதங்கள் அமினோவமில பல்பகுதியங்களாகும்.
    3) புரதங்கள் பையூரற்றின் சோதனைப் பொருளுடன் சிவப்பு நிறம்.
    4) புரதங்களில் கட்டமைப்பு புரதவகைகள் நான்கு ஆகும்.
    5) புரதங்களில் உள்ள அமினோ அமிலத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட அமைனோ கூட்டம் இருக்கலாம்.

13. நியூக்கிளியோரைட்டு தொடர்பாக பிழையானது எது?
    1) ADP ஒரு நியூக்கிளியோரைட்டு ஆகும்.
    2) NAD இல் ரைபோஸ் வெல்லம் காணப்படும்.
    3) FAD ஒரு துணைநொதியமாகும்.
    4) கிரெப்பின் வட்டத்தில் நியூக்கிளியோரைட்டுக்கள் தாழ்த்தப்படும்.
    5) ஒளித் தாக்கத்தில் நியூக்கிளியோரைட்டு உருவாகும்.

14. உயிருள்ள கலங்களில் நடைபெறும் உயிரிரசாயன மாற்றங்களில் அவசேபத்துக்குரிய தாக்க எது?
    1) காபனீரொட்சைட்டு குளுக்கோசாக மாறுதல்.
    2) அமினோ அமிலம் புரதமாக மாறுதல்.
    3) கொழுப்பு கொழுப்பமிலமாக மாறுதல்.
    4) குளுக்கோசு மாப்பொருளாக மாறுதல்.
    5) அமோனியா யூரிக்கமிலமாக மாற்றமடைதல்.

15. DNA மூலக்கூறு பற்றி சரியானது எது?

## SPECIAL GUIDE FOR 2010 A/L SCIENCE STUDENTS

    1) வெப்பநிலை 90°C இல் அமைப்பழிவுக்குள்ளாகும்.
    2) பிறப்புரிமைத் தகவல்களைத் தீர்மானிப்பது மூலச்சோடி ஐதரசன் பிணைப்பு.
    3) புரோக்கரியோட்டாக்களில் தனி வட்டமான தனியிழையாகக் காணப்படும்.
    4) மூலக்கூறின் மூலகங்களின் தொடர்ச்சி குறிப்பிட்ட இயல்புக்குப் பொறுப்பானது.
    5) மூலக்கூறின் சுருளி அமைப்பு இயல்பைத் தீர்மானிக்கும்.

16. A எனும் தாவர இனத்தின் இருமடிய எண்ணிக்கை 12, B எனும் தாவர இனத்தின் இருமடிய எண்ணிக்கை 16, A, B என்பவற்றில் இருந்து C எனும் புதிய இனம் அன்னிய பல்மடியமாக (Allopolyploid) உருவாகின்றது. C இன் இருமடிய எண்ணிக்கையாக அமையக்கூடியது,
    1) 12 2) 14 3) 16 4) 28 4) 56

17. சுயாதீனமாக பரம்பரை அலகுகள் தொடரக்கூடிய மிகப்பெரிய அலகாக இருக்கக்கூடியது எது?
    1) குடித்தொகை. 2) இனம். 3) சாதி.
    4) கணம். 5) இராச்சியம்.

18. பின்வருவனவற்றில் எது கலன் தாவரங்கள் எல்லாவற்றிலும் காணப்படும் தனிச் சிறப்பியல்பாக அமையாது?
    1) வித்து தோன்றல். 2) பூ காணப்படல்.
    3) காழ்க்கலன் மூலகம். 4) இரட்டைக் கருக்கட்டல்.
    5) சூலகம் பழமாகுதல்.

19. பின்வருவனவற்றின் எது பிழையானது?
    1) Cnidaria - உடல் பொலிப்பு, மெதுசா உருவம்.
    2) Platyhelminthes - முதுகு, வயிற்றுப்புறம் தட்டையான திண்ம உடல்.
    3) Nematoda - உடலின் உடற்குழி விருத்தி.
    4) Annelida - துண்ட சோடிக் கழிநீரகம்.
    5) Echinodermata - திரவக்கலன் தொகுதி.

20. மனிதன் ஏனைய பிறைமேற்றாக்களில் இருந்து தோன்றுவதற்கு முதலாவது காரணமாக அமைந்தது,
    1) ஆயுதமாக்கல். 2) மொழியாக்கல்.
    3) மூளை பெரிதாக்கல். 4) நிமிர் நிலையேற்படல்.
    5) தொழில்நுட்ப வளர்ச்சி.

21. இருசொற் பெயரீடு பற்றி பிழையானது எது?
    1) இருசொற் பெயரீட்டு முறையை முதலில் பிரேரித்தவர் Carols Linnaeus.
    2) அங்கி ஒன்றின் பெயரிடல் மூன்று பகுதிகளைக் கொண்டது.
    3) அங்கியின் முதலில் சாதிப்பெயரும் அடுத்து இனத்துக்குரிய Epithet இடப்படும்.
    4) அங்கியின் முதலில் எழுதும் சாதிப்பெயரின் முதல் எழுத்து Capital Letter
    5) அங்கியின் இருசொற் பெயரீடு ஆங்கில எழுத்தால் கொடுக்கப்படும்.

22. பங்கசுக்களில் அடங்குபவையில் பிழையானது எது?
    1) Chytridomycota - இலிங்க முறையில் சவுக்குமுளை அமைப்பு உருவாகும்.
    2) Zygomycota - இலிங்க முறையில் நுகவித்து உருவாக்கும்.
    3) Ascomycota - இலங்க முறையில் கோணிவித்தி உருவாக்கும்.
    4) Basidomycota - இலிங்க முறையில் சிற்றடிவித்தி உருவாக்கும்.
    5) யாவற்றிலும் இலிங்கமில்முறை, இலிங்கமுறை இனப்பெருக்கம் உண்டு.

23. Monocotyledon இல் இருந்து Dicotyledon வேறுபடுவது,
    1) ஒருவித்திலை கொண்டிருத்தல்.
    2) நார்வேர்த்தொகுதி கொண்டிருத்தல்.
    3) கலன்மாறிழையம் காணப்படாமை.
    4) பூவுறை அல்லி, புல்லி என வேறுபாடு.
    5) சமாந்தர நரம்பமைப்பு காணப்படல்.

24. பின்வருவனவற்றில் சரியானது எது?
    1) Amphibian, Reptilian, Aves என்பவை அகவெப்பமுடையவை.
    2) Reptilian, Aves, Mammalian என்பவை அகக்கருக்கட்டல் உடையவை.
    3) Amphibian, Reptilian, Aves என்பவை குடம்பிப்பருவம் கொண்டவை.
    4) Amphibian, Raptilian, Aves என்பவை இரு இதய அறைகளை உடையவை.
    5) Amphibian, Reptilian, Aves என்பவை யூரிக்கமிலம் கழிவாக அகற்றும்.

25. விலங்குக் கூட்டங்களில் அழிவு ஏற்பட்ட காலங்களில் பிழையானது,
    1) Trilobites - Permian 2) Ammonites - Devonian
    3) Dinosaurs - Cretaceous 4) குடல் அங்கி - Cambrian
    5) மேற்கூறிய யாவும் பிழையானவை.

26. உள்நிலைக் காப்பு அல்லாதது,
    1) சரணாலயம். 2) மீள உட்புகுத்தல்.
    3) தேசிய பூங்கா. 4) பிறப்புரிமை மூல விருத்தி மையம்.
    5) இயற்கை ஒதுக்கு.

27. தவறானது எது?
    1) வைரசுக்கள் யாவும் கட்டுப்பட்ட ஒட்டுண்ணிகள்.
    2) பங்கசுக்கள் யாவும் பிறபோசணிகள்.
    3) நுண்ணங்கிகள் யாவும் கண்ணுக்குப் புலப்படாதவை.
    4) பக்றீரியாக்கள் நான்கு வகை போசணையுடையவை.
    5) பங்கசுக்கள் யாவும் இடப்பெயர்ச்சிப் புன்னங்கமற்றவை.

28. வளிமண்டலக் காப்பு தொடர்பான முக்கிய வரைவேடு,
    1) ரம்சார் சமவாயம். 2) பேசல் சமவாயம்.
    3) CITES சமவாயம். 4) மபோல் சமவாயம்.
    5) வியன்னா சமவாயம்.

29. பின்வரும் Taxa இல் கடலுக்குரியது,
    1) Cnidaria 2) Annelida 3) Arthropoda
    4) Mollusca 5) Echinodermata

30. பின்வருவனவற்றுள் தவறானது,
    1) அதிகூடிய உயிர்ப் பல்வகைமை உடையது பிறப்புரிமைப் பல்வகைமை ஆகும்.
    2) உள்நிலைக் காப்பு மூலம் இலங்கையில் உள்ள அநேக உள்நாட்டு இனங்கள் காப்புச் செய்யப்படும்.
    3) புவியில் உயிரின அழிவுக்கு மனிதன் காரணமாவான்.
    4) உயிருள்ள வளங்கள் மனித உபயோகம் எப்போதும் இன அழிவுக்கு வழி வகுக்கும்.
    5) சமவாயங்கள், வரைவேடுகள் உயிரின காப்புக்கு உதவும்.

(13ஆம் பக்கம் பார்க்க)


ஆசிரியர்: R.ஈஸ்வரதாஸன் B.Sc (Biology), PG Dip in Edu, MEd, MPhil
கொ/இந்துக் கல்லூரி, கொழும்பு-04.
தொ.பே.இல: 077-7291877

2010 உயர்தர மாணவர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு பெறுமதிமிக்க படைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. குளுக்கோசு சுவாச அடிப்பொருளாக இருக்கும்போது காற்றிற் சுவாசத்தின் பிரதான கட்டங்கள் சரியான தொடரில் கீழே தரப்பட்டுள்ளன. இக்கட்டங்களை அவதானித்து விடை தருக.




1) மேலே A, B, C, D கட்டங்களைப் பெயரிடுக. EKC நடைபெறும் இடங்களைத் தருக.
.............................................................................
2) மேலே A, B, C, D என்பவற்றில் தேறிய விளைவுகளைத் தருக.
.............................................................................
3) D எனும் கட்டத்தில் ஈடுபடும் இரு நியூக்கிளியோரைட்டுக்களைப் பெயரிடுக.
.............................................................................
4) காற்றின்றிய சுவாசம் என்பதால் யாது விளங்குவீர்?
.............................................................................
5) விலங்குகளில் நடைபெறும் காற்றின்றிய சுவாசத்தின் தாக்கத்தை ஒரு படியில் எழுதுக.
.............................................................................

02. 1) ஒளித்தாக்கம் என்னும் பதத்தை விளக்குக.
.............................................................................
2) ஒளித்தாக்கம் நடைபெறும் இடங்களைப் பின்வருவனவற்றில் தருக.
1. EKC ..........................................
2. PKC ..........................................
3) ஒளித்தாக்க விளைவுகளைத் தருக.
.............................................................................
4) நீரின் ஒளிப்பகுப்புத் தாக்கத்தை ஒரு வரியில் தருக.
.............................................................................
5) $C_4$ தாவரங்களில் ஒளிச்சுவாசம் நடைபெறாமல் இருப்பதற்கு எவ் அம்சங்கள் காணப்படுகின்றன?
.............................................................................

03. 1) உயிர் பல்பகுதியம் என்பதால் யாது விளங்குவீர்?
.............................................................................
2) பின்வருவனவற்றின் பிரதான மூலகங்களையும், அவற்றின் பிரதான தொழில் ஒவ்வொன்றையும் தருக.

| | மூலகம் | தொழில் |
|---|---|---|
| 1. பெக்ரின் | ...................... | ...................... |
| 2. கொலஸ்ரோல் | ...................... | ...................... |
| 3. RNA | ...................... | ...................... |

3) பின்வரும் புன்னங்கங்களில் காணப்படும் சேதனச் சேர்வைகளின் பிரதான கூட்டத்தைத் தருக.
1. இரைபோசோம் ..................................
2. இலைசோசோம் ..................................
3. கிளையொட்சிசோம் ..................................
4) பின்வரும் தொழில்களை ஆற்றும் கலப்புன்னங்கங்களைக் குறிப்பிடுக.
1. கல இறப்பில் தற்பகுப்பு ....................
2. கலச்செயற்பாட்டிற்கான கரைய பதார்த்த சேமிப்பு ....................
3. கிளைக்கோ லிப்பிட் தொகுப்பு ....................
4. கலத்தில் பிரசாரணச் சமநிலை பேணல் ....................
5. கலத்தில் Ca++ அயன் சேமிப்பு ....................
5) குழிய வன்கூடு எனும் பதத்தை விளக்குக.
.............................................................................


04. 1) நொதியம் என்றால் என்ன?
.............................................................................
2) நொதியத்தில் காணப்படும் மூன்று துணைக்காரணிகளைக் குறிப்பிட்டு அவற்றின் உதாரணம், தொழில் ஒவ்வொன்று தருக.

| துணைக்காரணி | உதாரணம் | தொழில் |
|---|---|---|
| 1. .................. | .................. | .................. |
| 2. .................. | .................. | .................. |
| 3. .................. | .................. | .................. |


3) கீழே பட்டியற்படுத்தப்பட்ட நொதியங்கள் ஒவ்வொன்றுக்கும் நொதியத் தாக்கத்துக்குரிய பொருத்தமான அடிப்பொருளையும், ஈற்று விளைவுகளையும் பெயரிடுக.

| நொதியம் | அடிப்பொருள் | ஈற்று விளைவுகள் |
|---|---|---|
| 1. RUBP Carboxylic | .................. | .................. |
| 2. Catalase | .................. | .................. |
| 3. Invertase | .................. | .................. |

4) நொதியத் தாக்கவீதத்தைப் பாதிக்கும் விதத்தைக் காட்டும் வரைபுகளைப் பின்வரும் நிபந்தனையில் வரைக.
1. வெப்பநிலை



2. கீழ்ப்படைச் செறிவு



5) ஆய்வுகூடத்தில் வெப்பநிலை எவ்வாறு நொதியத் தாக்கவீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் என்பதைக் காட்டுக.
.............................................................................

05. 1) பாகுபாடு என்றால் என்ன?
.............................................................................
2) அங்கிகளைத் தொகுதிகளாக்கும் (Systematically) பாகுபாட்டு முறையை முதலில் உருவாக்கியவர் யார்?
.............................................................................
3) இருசொற் பெயரீடு என்பதால் யாது விளங்குவீர்?
.............................................................................
4) மனிதனின் விஞ்ஞான ரீதியான பெயரீட்டைத் தருக.
.............................................................................
5) விஞ்ஞான ரீதியான பெயரீட்டின் பிரதான நன்மை யாது?
.............................................................................

06. 1) அங்கிகளை ஐந்து இராச்சியங்களாகப் பிரிப்பதற்கு பயன்படும் பிரமாணங்கள் மூன்றும் எவை?
.............................................................................
2) பின்வரும் இயல்புகளைக் கொண்டிருக்கும் பிரதான இராச்சியம் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

| இயல்பு | இராச்சியம் |
|---|---|
| 1. ஒரு கல செலுலோசுக் கலச்சுவர் | .................. |
| 2. ஒருகல கைற்றின் கலச்சுவர் | .................. |
| 3. பலகல செலுலோசு கலச்சுவர் யாவும் இடப்பெயர்ச்சியற்றது | .................. |
| 4. பலகல செலுலோசு கலச்சுவர் அற்றது இடப்பெயர்ச்சியடையக்கூடியது | .................. |

3) பின்வரும் அங்கிகளுக்குரிய Phylum களைத் தருக.
1. Amoeba ..................................
2. Chlamydomonas ..................................
3. Sargassam ..................................
4. Agaricus ..................................
5. Pinus ..................................
4) இருகிளைச் சாவி என்றால் என்ன?
.............................................................................
5) உதாரணங்கள் தரப்பட்டுள்ளன.
பாம்பு, மண்புழு, தவளை, கடல் அனிமனி, வண்ணத்துப்பூச்சி

1. a) ஆரைச்சமச்சீர் உடையவை - A
 b) ஆரைச்சமச்சீர் அற்றவை - B
2. a) கால்கள் உடையவை - 3
 b) கால்கள் அற்றவை - 4
3. a) சிறகு உடையவை - B
 b) சிறகு அற்றவை - C
4. a) உடல் செதில்களால் மூடப்பட்டது - D
 b) உடல் செதில்களால் மூடப்படாதது - E

மேலே உள்ள இருகிளைச்சாவியின் A, B, C, D, E அங்கிகளைப் பெயரிட்டு அவற்றின் Class ஐத் தருக.

| அங்கி | Class |
|---|---|
| A | .................. |
| B | .................. |
| C | .................. |
| D | .................. |
| E | .................. |

07. 1) இன அழிவு என்பதால் யாது விளங்குவீர்?
.............................................................................
2) பின்வரும் விலங்குகளின் அழிவுக்காலம் யாது?

| விலங்கு | அழிவுக்காலம் |
|---|---|
| 1. Trilobites | .................. |
| 2. Ammonites | .................. |
| 3. Dinosaurs | .................. |

3) இனங்களின் இயற்கை அழிவின் இரு பிரதான முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.
.............................................................................
4) உள்நிலைக் காப்பு என்றால் என்ன?
.............................................................................
5) உள்நிலைக் காப்பு முறைகள் ஐந்து தருக.
.............................................................................

08. 1) எச்ச இனம் என்பதால் யாது விளங்குவீர்?
.............................................................................
2) இலங்கையில் வாழும் எச்ச இனம் ஒன்று தருக.
.............................................................................
3) இலங்கையில் அதியுயர்ந்த இனப் பல்வகைமையைக் காட்டும் விலங்குக் கூட்டம் யாது?
.............................................................................
4) IUCN செந்தரவுப் புத்தகத்தில் ஆபத்து எதிர்நோக்கிய உள் இனம் (Endangered) என்பதால் யாது விளங்குவீர்?
.............................................................................
5) ஒரு மாணவன் தனது வீட்டுத்தோட்டத்தில் உடல் இரு பிரிவு, நான்கு சோடி கால்கள், உடல் புறத்தே துண்டுபட்ட ஒரு விலங்கைஅவதானித்தான். இவ் விலங்கின் வகுப்பு, கணம் என்பவற்றைத் தருக.
வகுப்பு ..................................
கணம் ..................................

(நிறைவுற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37வருடங்களாக O/L பரீட்சைப் பெறுபேறுகளில் சாதனை படைத்த ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த நிறுவனத்தில்

O/L DAY CLASS

ஏப்ரல் 14ல் ஆரம்பம். அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

The Express Institute
Irupalai, Kopay.


## 19ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 ★ 01 ★ 1939

உதிர்வு 12 ★ 04 ★ 1991



### துரைராஜா கோணேஸ்வரி

ஆண்டுகள் மறைந்தாலும் கண்ணீர்
நிற்கவில்லை அம்மா
நாம் வாழும் காலங்கள் வரை
உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது

95, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (95793)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டதனில் நீங்கா நினைவுகள்

அன்னை மடியில் 1925 ★ 11 ★ 30

பரந்தாமன் திருவடியில் 2008 ★ 04 ★ 03



### அமரர் கார்த்திகேசு சின்னத்தம்பி

(தர்மகர்த்தா, மல்வில் கிருஷ்ணன் கோயில், இயக்கச்சி)

திதி: 12.04.2010

அன்பினால் வழிகாட்டி
வாழ வைத்த தெய்வமே!
ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
ஆறாது எம் துயர்
ஆத்ம சாந்திக்காக பரந்தாமனை
வேண்டி நிற்கின்றோம்.

சங்கத்தானை, சாவகச்சேரி. (95908)

நீங்காத நினைவுடன்: குடும்பத்தினர்.

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 ★ 05 ★ 1951

உதிர்வு 12 ★ 04 ★ 2001



அருட்திரு பற்றிக்
### இம்மானுவேல் (குணேன்)
குருத்துவம்: 19.05.1978

"சிலுவையில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

54/3, புனித அன்னாள் கோயில் முன் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

என்றும் மறவாத: அன்ரு மாமி, அக்கா, மைத்துனர், லண்டனில் வசிக்கும் மருமக்கள் குடும்பம்.

## யாழ்.கொழும்பு பயணத்திற்கு

யாழ்.கொழும்புச் சொகுசு வான்சேவை. உங்கள் இல்லத்திற்கு வந்து ஏற்றி உரிய இடத்தில் சேர்க்கப்படும். ஒருவர் கட்டணம் ரூபா 1000/=

தொடர்பு: 0213008238, 0779770027

## விற்பனைக்கு

HX-XXXX தொடர் - இலக்கம் கொண்ட நல்ல நிலையில் உள்ள முச்சக்கரவண்டி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு -0774220713/4

# நகை உற்பத்தி நிலையத்தில் திருட்டு

யாழ்ப்பாணம்.ஏப்.12

சாவகச்சேரி, கச்சாய் வீதியில் உள்ள ஆபரண உற்பத்தி நிலையத்தின் கூரை ஓடுகளைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்து ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம் பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-207)

## இறுதிப் போட்டி இன்று

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக் கூடைப் பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலையும் மோதவுள்ளன.

பிற்பகல் 4 மணிக்கு ஆண்களுக்கான போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மோதவுள்ளது. (50-23-86)

## கூட்டம்

வரணி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பழைய நிர்வாகத்தின் ஆவணங்கள் அனைத்தும் சமர்ப்பிக்கப்படுவதுடன் புதியநிர்வாக சபையும் தெரிவு செய்யப் படவுள்ளதால் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளார். (201)

## யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
### பழைய மாணவர் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2010

* தலைமை: திருமதி சிவமலர் அனந்தசயனன் (அதிபர்)
* இடம்: பாடசாலை மண்டபம்
* காலம்: 25.04.2010 ஞாயிற்றுக்கிழமை
* நேரம்: மு.ப 9.30 மணி

அனைத்து உறுப்பினர்களும் தவறாது சமுகந்தரவும். உறுப்பினர்கள் நடப்பு ஆண்டுக்கான சந்தாவைச் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளவும். பிரேரணைகளை 21ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

திருமதி சி.அனந்தசயனன் (அதிபர்), தலைவர்.

திரு.சி.கபிலைமகான், திரு.சி. தேவகுமாரன் இணைச் செயலாளர்கள்.

## மீள் கேள்வி கோரல்கள்

### இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு பெருந்தெருக்கள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை
### கந்தசாமி கோயில் - கழுதைப்பிட்டி வீதி புனர்நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்
### அரசாங்க அதிபரின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

1. யாழ். மாவட்டத்தில் வேலணை பிரதேசத்தில் பின்வரும் புனர்நிர்மாண வேலைகளுக்கான மூடிய கேள்வி கோரல்களை மாகாணப்பணிப்பாளர் கேள்விச் சபையின் சார்பாக மாகாணப்பணிப்பாளர், வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 761, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

கந்தசாமி கோவில் - கழுதைப்பிட்டி வீதி புனரமைப்பு, 1.0 - 1.6 கி.மீ
கந்தசாமி கோவில் - கழுதைப்பிட்டி வீதி புனரமைப்பு, 1.6 - 2.0 கி.மீ
கந்தசாமி கோவில் - கழுதைப்பிட்டி வீதி புனரமைப்பு, 2.0 - 2.6 கி.மீ
கந்தசாமி கோவில் - கழுதைப்பிட்டி வீதி புனரமைப்பு, 2.6 - 3.45 கி.மீ

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 23.04.2010 அன்று முற்பகல் 10 மணியுடன் முடிவடையும்.

கேள்விப்பத்திரங்களைத் தயாரிப்பதற்குரிய படிவங்களைப் பின்வரும் காரியாலயங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

I. மாகாணப்பணிப்பாளர் வ-கி (வ) அலுவலகம், கடற்கரை வீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.
II. பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 15.04.2010 தொடக்கம் 21.04.2010 வரை மீள் அளிக்க முடியாத வைப்புத் தொகையான 750 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்திப் பெற வேண்டும்.

2. தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் M 07 / C 08 தரத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

3. கேள்வி கோரல் ஆவணங்கள் பின்வரும் அலுவலகங்களில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

I. மாகாணப்பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
II. பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

4. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

5. கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை ரூபா 50,000 அவற்றிற்குரிய பாதுகாப்புப் பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக்கூடிய பாதுகாப்புப் பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

6. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் 761, கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள மாகாணப்பணிப்பாளர் வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

7. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக மாகாணப்பணிப்பாளர் வ-கி (வடக்கு) வீதி, அபிவிருத்தி அதிகாரசபை, 761, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. மேலதிக விவரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவுசெய்து தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|
| மாகாணப்பணிப்பாளர் வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். | 021-222-2517 |
| அல்லது பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம். | 021-222-2968 |

மாகாணப்பணிப்பாளர் வ-கி (வடக்கு),
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

(சி/566695)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.06.1990

* விடுதலைப் புலிகளின் பெயர்ப்பட்டியலில் இருந்து நூறுபேரைத் தெரிவு. மாகாணப் பொலிஸ் துறைக்கு நியமிக்கும் திட்டம் விடுதலைப் புலிகளின் கோரிக்கையையடுத்து இடைநிறுத்தம்.
* வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டாலும், விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைத்தால்தான் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுமென பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

02.06.1990

* வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குப் பேச்சுக்கள் மூலமே தீர்வு காண்பதற்கு அரசு உறுதிபூண்டிருப்பதாக விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களுடனான பேச்சு வார்த்தையின் போது ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவிப்பு.
* சிங்கள மன்னர்களது ஆட்சிக் காலத்தில் கூட இந்திய இராணுவத்தினர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டதுண்டு. இந்திய அமைதிப் படை நிபந்தனைகளுடன் இங்கு வந்தது. அதன்படி வெளியேறியது என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.கருத்துத் தெரிவிப்பு.

03.06.1990

* விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்கள் கொழும்பில் வைத்து முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுடன் வடக்கு- கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வு.
* தேசிய ஒற்றுமைக்கு அரசமைப்புக்கான ஆறாவது திருத்தம் இடைஞ்சலாக இருப்பதாகத் தீர்மானிக்கப்பட்டால் அது அகற்றப்படத்தான்வேண்டும் என பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தெரிவிப்பு.

04.06.1990

* அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான சட்ட மூலத்தை தனி நபர் பிரேரணையாக ஈரோஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதையே அரசதரப்பு விரும்புவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிப்பு.
* இந்தியாவில் விரைவாகப் பரவிவரும் 'எயிட்ஸ்' நோய் இலங்கையிலும் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதாக கொழும்பு மருத்துவ வட்டாரங்கள் அச்சம் தெரிவிப்பு.

05.06.1990

* மாகாணசபையைக் கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கும் விதத்தில் விசேட சட்டமூலம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என அரசு விடுதலைப் புலிகளுக்கு உறுதியளித்துள்ளதாகத் தெரிவிப்பு.
* வடக்கு, கிழக்கு பகுதிகளின் எல்லைப் புறங்களிலிருந்து வெளியேறிய நாலாயிரம் சிங்களக் குடும்பங்கள் மீண்டும் அதே இடத்தில் குடியேற விரும்பாததால் அவர்களை வேறு மாவட்டங்களில் குடியமர்த்த அரசு முடிவு.

06.06.1990

* அரசுக்கு எதிரான சதி முயற்சி வழக்கொன்றில் எதிரியாகவுள்ள ஈ.பி. ஆர்.எல்.எவ் இயக்க செயலதிபர் பத்மநாபா மீது கொழும்பு மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பிப்பு.
* அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கான தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதைத் தாங்கள் தாமதப்படுத்தியிருப்பதாக ஈரோஸின் ஈழவர் ஜனநாயக முன்னணி தெரிவிப்பு.

07.06.1990

* வடக்கு - கிழக்கு மாகாணசபையைக் கலைத்து தேர்தலை நடத்துவதற்கு வசதியாக சட்டமூலமொன்றை உடனடியாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருவதென அமைச்சரவை முடிவு.
* எம்பிலிப்பிட்டி, பொலநறுவைக் காட்டுப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடம்பெற்ற மோதலில் தீவிரவாத இயக்க உறுப்பினர்கள் 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அரசு அறிவிப்பு.

08.06.1990

* தென்னிலங்கையில் உள்ள 19 புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களில் பாரிய குற்றங்களைச் செய்யாத இளைஞர்களுக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுக் கொடுக்க புனர்வாழ்வு அமைச்சு ஏற்பாடுகளைச் செய்து வருவதாகத் தெரிவிப்பு.
* விடுதலைப் புலிகள் தேசிய நீரோட்டத்தில் இணைய சகலரும் உதவ முன்வர வேண்டும் என அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன வேண்டுகோள்.

09.06.1990

* அடுத்த மாதம் கொழும்புக்கு விஜயம் செய்யும் வேளையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் இலங்கை அரசின் அனுமதியுடன் ஈழத் தமிழக குழுக்களின் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிவிப்பு.
* வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்காக அரசு அவசரச்சட்டம் கொண்டு வந்தால் அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்ய ஈ.பி.ஆர்.எல்.எவ். சட்ட ஆலோசனை செய்து வருவதாகத் தெரிவிப்பு.

10.06.1990

* விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்புப் படைகளுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தி ஈழப்பிரதேசத்தில் சமாதானத்தைத் தொடர்ந்து பேணச் செய்வது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ள ஜனாதிபதியின் அவசர பணிப்பின் பேரில் நீதி அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீது யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரிவிப்பு.
* தமிழர் தேசிய சுயநிர்ணய மாநாடு நடத்த தமிழக அரசு தடைவிதிப்பு; தடையை மீறியதாக நெடுமாறன் கைது.

11.06.1990

* மாகாண சபையைக் கலைப்பது தொடர்பான சட்டமூலம் நாளை மறுதினம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிப்பு.
* தமிழ் மக்களுக்கு நியாயமான, நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்குச் சிங்களப் பெரும்பான்மையினருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் நோக்கிலேயே நாம் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு.

12.06.1990

* மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங் களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில் பொலிஸாரும் இராணுவத்தினருமாக மொத்தம் 19 பேர் பலியானதாகத் தெரிவிப்பு.
* மட்டக்களப்பு,அம்பாறை மாவட்டங்களில் எட்டு பொலிஸ் நிலையங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றி தம்வசம் வைத்திருப்பதாகத் தெரிவிப்பு.

13.06.1990

* கிழக்கு மாகாணத்தில் இன்று நண்பகல் 12 மணிமுதல் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வருமெனத் தெரிவிப்பு. விடுதலைப் புலிகளின் தலைவர்களுக்கும், நீதி அமைச்சர் ஏ.ஸி. எஸ். ஹமீத்துக்கும் இடையில் இதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* கிழக்கில் இலங்கை விமானப்படையினரின் விமானக் குண்டு வீச்சு மற்றும் படையினரின் ஷெல்,பீரங்கித் தாக்குதல்கள் காரணமாக 40 இற்கும் அதிகமான பொது மக்கள் பலியானதாகத் தெரிவிப்பு.

14.06.1990

* கிழக்கில் தொடர்ந்தும் கடும்சண்டை, யுத்த நிறுத்தமொன்றைக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி. படையினரின் தாக்குதல்கள் காரணமாக நூற்றுக்கணக்கான பொது மக்கள் உயிரிழந்ததாகத் தெரிவிப்பு.
* வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அநேகமாக சகல பொலிஸ் நிலையங்களும் விடுதலைப் புலிகள்வசம் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரிவிப்பு.கல்முனை,கல்குடா இராணுவ முகாம்களும் விடுதலைப்புலிகள் வசம் வீழ்ச்சி.

15.06.1990

* விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தமொன்றைக் கொண்டு வருவதற்கு அரசு பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு. இம்முயற்சி தொடர்பாக அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீத் யாழ்ப்பாணம் விரைவு.
* கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் நான்காவது நாளாக விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் கடும் 'மோதல் தொடர்வதாகத் தெரிவிப்பு.

# குடாநாட்டில் சித்த மருத்துவத்தை மேம்படுத்துவதற்கு விசேட திட்டம்

கொழுப்புத்துறை, ஏப். 12

யாழ். மாவட்டத்தில் சித்த மருத்துவத் துறையை மேம்படுத்தும் நோக்கில் யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச்சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளதாக சங்க முகாமைப் பணிப்பாளர் டாக்டர் கு.ஸ்ரீகணநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச்சங்கத்தின் கோண்டாவில் வளாக கட்டடத் தொகுதியின் ஒரு பகுதியை நீண்ட கால குத்தகைக்கு பெற்றுத் தந்தால் அங்கு மூலிகை உற்பத்தித் தோட்டம், இயந்திரசாதன உதவியுடன் சித்த மருந்துகள் மற்றும் தோஸ்ஸி பன்டேஜ் உற்பத்தி ஆகியவற்றை மேற்கொள்ளலாம் என்று கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதே வேளை வடக்கு மாகாண ஆளுநரிடமிருந்து மருந்து வகைகளை அரைப்பதற்கான இயந்திர சாதனங்களைப் பெற்றுத் தருவதாக வடமாகாண கைத்தொழில் திணைக்களப் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

விளான் பகுதியில் சித்த மருத்துவப் பற்பொடி தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதுடன் மூலிகைப்பயிர் செய்கை, மூலிகை பதனிடுதலை ஆரம்பிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மருத்துவ உற்பத்திகளை மாவட்டத்திற்கு வெளியே கொண்டு சென்று விற்பனை செய்யக்கூடிய வாகனமொன்றை பெற்றுக்கொள்ள உதவுமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி கோரிக்கைகளை சுதேச மருத்துவத்துறையின் மாகாணப்பணிப்பாளர், வடமாகாண கூ. அபிவிருத்தி ஆணையாளர், திட்டமிடல் பணிப்பாளர், வடமாகாண சபை பிரதம செயலாளர், சுதேச மருத்துவத்துறை அமைச்சின் செயலாளர்,அரச அதிபர், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோரிடம் தமது சங்கம் சமர்ப்பிக்கவுள்ளதாக யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க முகாமைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(க-135)

# மீளக்குடியமர்ந்த 15 குடும்பங்களுக்கு தாவடியில் புதிய வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம். ஏப். 12

தாவடி பத்திரகாளி கோயில் வீதியில் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு 15 வீடுகள் அண்மையில் கையளிக்கப்பட்டுள்ளன.

513 ஆவது பிரிகேட்டின் 8 லட்சம் ரூபா நிதிப்பங்களிப்புடனும் வர்த்தகர்களின் பங்களிப்புடனும் கட்டப்பட்ட 15 வீடுகளே அண்மையில் பிரிகேடியர் கேணல் பிரதீப் சில்வா தலைமையில் நடந்த நிகழ்வின்போது வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு தாவடி வீரகாளி அம்மன் ஆலய விசேட பூசை வழிபாட்டினைத் தொடர்ந்து இந்த வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன. இதன்போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் சுப்பிரமணியம் லீலா கிருஷ்ணன் வீட்டு உரிமையாளர்களுக்கான சாவிகளை வழங்கினார்.

தொடர்ந்து ஏனையவர்களுக்கான வீடுகளின் சாவிகளை 513 ஆவது பிரிகேட் படைப்பிரிவின் பிரிகேடியர் கேணல் பிரதீப் சில்வா , உடுவில் சிவில் அதிகாரி மேஜர் அமரசிங்க- மானிப்பாய் மற்றும் கூழாவடி இராணுவ முகாம் கட்டளை அதிகாரி ஆகியோர் வழங்கினர்.

தொடர்ந்து புத்தாண்டினை முன்னிட்டு 513 ஆவது பிரிகேட் இராணுவ அதிகாரிகளினால் மீளக்குடியமர்ந்த பிள்ளைகளுக்கு புத்தாண்டு பரிசுப் பொதிகள் வழங்கப்பட்டன.

(04-302)

# கலாசார மண்டபப் பணிகளைப் பூர்த்தியாக்க 25மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்க

## அமைச்சருக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் கடிதம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

வலி.தென்மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நவாலியிலுள்ள கலாசார மண்டபத்திற்கு இரண்டாம் கட்ட புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள 25 மில்லியன் ரூபா ஒதுக்கித் தரவேண்டும்.

இவ்வாறு சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி எழிலரசி அ.யோகநாயகம் அவரச கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய், நவாலிப் பகுதியில் கலாசார மண்டபம் ஒன்றை அமைப்பதற்கு 2007ஆம் ஆண்டு 5மில்லியன் ரூபா சமூக சேவைகள் அமைச்சினால் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுவந்தன. பின்னர் நிதியின்மையினால் குறித்த திட்டம் பூர்த்தியாக்கப்படவில்லை.

இத்திட்டம் முழுமைபெற மேலும் 25மில்லியன் ரூபா தேவைப்படுவதனால் அதற்கான ஒதுக்கீட்டினைப் பெற ஆவன செய்யுமாறு' பிரதேச செயலர் இக்கடிதத்தில் கேட்டுள்ளார்.

மேற்படி கடிதத்தின் பிரதிகள் அரசாங்க அதிபர் க.கணேஷ், மானிப்பாய் பிரதேசசபை செயலாளர் திருமதி. பு.சிவலிங்கம், நவாலி ஹேமலதா ஞாபகார்த்த சனசமூக நிலையத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை கடந்த 5ஆண்டுகளுக்கு முன்னர் கலாசார மண்டபம் அமைப்பதற்கான காணியை வடபிராந்திய சத்திய சாய் இணைப்பு குழுத்தலைவர் இரா. வசந்தசேனன் இலவசமாக மானிப்பாய் பிரதேச சபைக்கு வழங்கியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(04-302)

# குறிகாட்டுவானிலேயே குமுதினி தொடர்ந்தும் நிறுத்தி வைப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 12

நெடுந்தீவுக்கான படகுச் சேவையில் ஈடுபட்டிருந்த குமுதினிப்படகு திருத்த வேலைகள் எதுவுமின்றி குறிகாட்டுவான் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி படகு பழுதடைந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. ஆனால் இப்படகு திருத்த வேலைகளுக்காக காரைநகருக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் ஏற்கனவே அறிவித்திருந்தார். தற்போது நீண்ட நாள்களாக இந்தப்படகு குறிகாட்டுவான் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதோடு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரச அதிபருக்குத் தவறான தகவலை வழங்கியிருக்கலாமெனப் பொதுமக்கள் சந்தேகிக்கின்றனர். (க-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக் காட்சியகம்

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு நவ நாகரிக ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்

**Style Park**

Perfect Collection



**ஸ்ரைல் பார்க்**

யாழ்.நகரில் குறைந்த விலையில் மங்கையர் மனம் நிறைந்த ரகங்கள், நிகரில்லாத்தரங்கள், அழகிய புடைவைத் தினுசுகளின் றெடிமேட் சாம்ராஜ்ஜியம்

இல.171, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். No:171, K.K.S. Road, Jaffna. T.P: 8383


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11 ★ 06 ★ 1940



மறைவு
07 ★ 04 ★ 2009

### சிவதாசன் சிவகுணநாயகி

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு இன்று (12.04.2010) திங்கட்கிழமை கீரிமலை நகுலேஸ்வர ஆலய மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

சங்கரப்பிள்ளை சிவதாசன்
கணவர் (முன்னாள்
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்.மாவட்டம்,
முன்னாள் பனை அபிவிருத்திச்
சபைத் தலைவர்)

'மங்களகிரி',
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

## களையோடையில் பங்குனித்திங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.12

நவாலியில் பிரசித்தி பெற்ற இயற்கைபிட்டி களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் அன்னதான நிகழ்வு இன்று திங்கட் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலய பிரதம குரு கந்தையா நாகேந்திரம் தலைமையில் விஷேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

யாழ்.குடாநாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இந்த நிகழ்வுகளில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

(04-302)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
19.10.1958

மறைவு
04.04.2008

### அமரர் சதாசிவம் இரத்தினபாலா

திதி: 12.04.2010.

கண்கள் பல உனைத்தேட
காணாமல் காலனுடன் புன்னகை
பூத்த முகத்தோடும் மறைந்தாயே
நினைக்க முடியாத கணப்பொழுதில்
அமைதியாய் மரணத் திரையில்
மௌனமாய் சென்று விட்டாயே
ஆண்டு பல சென்றாலும் உங்களது
பசுமையான நினைவுகள் என்றென்றும்
எம்மோடு இரண்டறக்கலந்திருக்கும்

தகவல்:
மனைவி:இ. ஜசிந்தாராணி,
பிள்ளைகள்: துஷ்யந்தி, டானியல்,
விஜியந்தி (இத்தாலி).

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(96744)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
21 ★ 09 ★ 1935



உதிர்வு
13 ★ 03 ★ 2010

### திருமதி புவக்கீன்பிள்ளை செபமாலை அம்மா

நிலையில்லாத இவ்வுலகில்
நிலைத்திருக்கும் உங்கள் உறவால்
நினைவிழக்க முடியாமல்
நீந்துகின்றோம் கண்ணீரிலே
மனமுள்ள நாள் வரையில்
நிழல் கொண்ட பூமியிது
நாமிருக்கும் நாள்வரையில்
நீங்கள் இருப்பீர்கள் எமது மனத்திரையில்

கடந்த 13.03.2010யேசுவின் திருவடியினை அடைந்த எமது குடும்பத் தலைவியின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

16/2,சென் அன்ரனிஸ் வீதி,
பாஷையூர்.

தகவல் - புவக்கீன்பிள்ளை (கணவர்)

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ ஸ்ரீனிவாச நாகேந்திரக்குருக்கள் (சின்னமணி ஐயா)

(ஆதீன கர்த்தா, புங்குடுதீவு சிவன் ஆலயம்)



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட புங்குடுதீவு சிவன் ஆலயம், மதுரையம்பதி மீனாட்சி சுந்தரேஸ்வர ஆலய தர்மகர்த்தாவுமாகிய சிவஸ்ரீஸ்ரீனிவாச நாகேந்திரக் குருக்கள் (சின்னமணி ஐயா) 09.04.2010 வெள்ளிக்கிழமை இரவு புங்குடுதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஸ்ரீ ஸ்ரீனிவாசக்குருக்கள் - சாரதா அம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான சிவன் ஆலய ஆதீனகர்த்தா மீனாட்சி சுந்தரேஸ்வரக்குருக்கள் - பரமேஸ்வரி அம்மா தம்பதிகளின் மருமகனும் ஸ்ரீமதி லோகேஸ்வரி அம்மாவின் அன்புக்கணவரும் சிவஸ்ரீ அருணோதயக்குருக்கள், ஸ்ரீமதி ஹர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தினேஷ்சர்மா, சுபாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவகஜன், சிவப்பிரியன், தனஞ்செயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஸ்ரீமதிபரமேஸ்வரி அம்மா (கனடா), சிவஸ்ரீ ரகுநாதக்குருக்கள் (ரகுமணி ஐயா), சிவஸ்ரீ சண்முகநாதக்குருக்கள் (கனடா), பிரம்மஸ்ரீ திருஞானசம்பந்தசர்மா, ஸ்ரீமதி கிருஸ்ணலீலா சிவஸ்ரீ சர்வானந்தக்குருக்கள் (கனடா), ஸ்ரீமதி மீனலோசனி, சிவஸ்ரீகுகனேசக்குருக்கள் (கனடா), பிரம்மஸ்ரீ ஆனந்தசர்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவஸ்ரீகுமாரசாமிக்குருக்கள், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் அன்பு சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2010) திங்கட்கிழமை பகல் ஒரு மணி அளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் வட்டாரம், புங்குடுதீவு
தொ.பே: 021 321 0038

தகவல்: மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை நிலை பொது தகுவலு அதிகாரசபை (Srilanka Sustainable Energy Authorty) இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள மக்களுக்கு சிக்கன அடுப்புகள் வழங்கும் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் முகாமைத்துவப் பணிப்பாளர் சந்தன சமரசிங்க பயனாளி ஒருவருக்கு சிக்கன அடுப்பு வழங்குவதை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள் : லக்ஸ்மன்)

### வேம்படி, யாழ். மத்திய கல்லூரிக்கு இடைப்பட்ட

# மாணவர்கள் செல்லும் முக்கிய வீதியில் ஆபத்தான கழிவுநீர் வாய்க்கால்

யாழ்ப்பாணம்,ஏப்.12

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலைக்கும் இடைப்பட்ட வீதியில் காணப்படும் கழிவு நீர் வாய்க்கால் மிகவும் ஆபத்தான ஒன்றாக இருந்துவருகிறது. இந்த வீதியால் செல்லும் மாணவர்களும் பொதுமக்களும் மிகவும் எச்சரிக்கையாகவே ப்யணஞ்செய்கின்றனர்.

கடந்த பல வருடங்களாக இந்தக் கழிவு நீர் செல்லும் வாய்க்காலின் பாதுகாப்புத் தட்டுக் கள் உடைந்து சிதைந்து போய்க் காணப்படு கின்றன. வீதியின் இருமருங்கும் உடைந்து சேதமடைந்துள்ளது.

நாளாந்தம் ஆயிரக்கணக்கான மாணவர்களும் பொதுமக்களும் சென்று வரும் இந்த வீதியின் கழிவு நீர் வாய்க்கால் உடைந்துள்ளதால் துர்நாற்றமும், சகிக்க முடியாமலும் இருக்கிறது.



சம்பந்தப் பட்டவர்கள் இவற்றைக் கருத்திலெடுத்துப் பாடசாலைகள் விடுமுறை விடப்பட்டிருக்கும் இந்தத் தருணத்தில் வாய்க்காலைத் திருத்தினால் மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-86)

## நாச்சிமார் கோயில் நடைபாதைக் கடைகளுக்கு மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தீவைப்பு!

வலி.வடக்கு,ஏப்.12

மோட்டார் சைக்கிளில் வந்த விஷமிகளினால் தென்னிலங்கை நடைபாதை வியாபாரிகளின் பொருள்கள் தீயிட்டு எரிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக அமைக்கப்பட்டு இருந்த நடைபாதை வியாபாரிகளின் பொருள்களே இவ்வாறு தீயிடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் திடீரென நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர்களின் பொருள்களின் மீது மண்ணெண்ணெயை ஊற்றி தீப்பந்தத்தைக் கொளுத்தி எறிந்து விட்டு மோட்டார் சைக்கிளில் மின்னல் வேகத்தில் தப்பி ஓடியுள்ளார்கள்.

அயலில் உள்ளவர்கள் தீயை அணைக்க முயன்றனர். அத்துடன் யாழ்.மாநகர சபைத் தீயணைப்புப் பிரிவினரும் தகவல் அறிந்து உரிய இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆனாலும் பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகின. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறையிடப்பட்டுள்ளது.

(04-க-86)

## இணுவில் சிவகாமி அம்மன் ஆலய சமய அறிவுப்போட்டி முடிவுகள்

வண்ணை,ஏப்.12

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இளந்தொண்டர்சபை நடத்திய சமய போட்டிகளின் பரிசளிப்பு அண்மையில் நடந்தது.

யாழ். பல்கலைக்கழக வர்த்தகத்துறை பேராசிரியர் க.தேவராசா மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

சமய அறிவுப்போட்டிகளில் வெற்றிவாகை சூடிய மாணவர்களின் பெயர் விவரங்கள்:

பாலர் பிரிவு

ஆண்டு - 2

சி.கர்சிகை, கு.தேனுஷா (இருவரும்) பரராசசேகரப்பிள்ளையார் அறநெறிக் கழகம்), அயுர்சிகா (ஆஞ்நேயர் அறநெறிக் கழகம்)

ஆண்டு 3

சி.பிரகலாபன்,தோ.சிவரூபன், ஆரார்த்திகன் (மூவரும் பரராசசேகரப்பிள்ளையார் அறநெறிக்கழகம்)

கீழ்ப்பிரிவு

ஆண்டு 4

தே.கஜீபன், வி.ஹரிகரன் (இருவரும் பரராசசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை), நம்மியா (ஆஞ்நேயர் அறநெறிக் கழகம்)

ஆண்டு 5

அ.வாகீஸ்வரன், இ.சங்கீர்த்தனா, இ(..) வரும் பரராசசேகரப்பிள்ளையார்), ச.சா(..) (ஆஞ்நேயர் அறநெறிக் கழகம்)

மத்தியபிரிவு

ஆண்டு - 6

க.சஜிந்தா (பரராசசேகரப் பிள்ளையார்),ரமதுவியா (ஆஞ்நேயர் அறநெறிக் கழகம்), ந.பகீரதன் (பரராசசேகரப் பிள்ளையார்)

ஆண்டு -7

கி.கிருத்திகா, கௌரீசன், பவித்திரா (மூவரும் இளந்தொண்டர் சபை),

ஆண்டு -8

க.கருணாகரன் (சிவகாமி அறநெறி), க.சர்ஜனன் (இளந் தொண்டர் சபை), செ.கீதாங்கிளி (சிவகாமி அ.நெ)

மேற்பிரிவு

ஆண்டு -9

ந. சுகிர்தா (பரராச சேகரப் பிள்ளையார்)

ஆண்டு - 10

ச.யதுசா, (இளந்தொண்டர் சபை), அ.தர்சிகரூபன் (பரராசசேகரப் பிள்ளையார்) (160)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் தொடர்ந்தும் அசௌகரியங்களை எதிர்நோக்கும் ப.நோ.கூ.சங்கம்

கொழும்புத்துறை,ஏப்12

உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வரும் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத் தலைமையகம் மற்றும் மொத்தக் களஞ்சிய நிலையம் என்பன பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் திரையரங்காக இருந்து பின்னர் களஞ்சியத் தொகுதியாக மாற்றப்பட்ட கட்டடத்திலேயே தற்போது மேற்படி சங்கத்தின் தலைமையகமும் இயங்கி வருகின்றது. எனவே உரிய முறையில் தலைமைச் செயலக கட்டடத் தொகுதியின் திருத்த வேலைகளுக்கு ஐந்து லட்சம் ரூபா தேவைப்படுவதாகவும் காலக்கிரமத்தில் தலைமைச் செயலகம், கிராமிய வங்கி என்பவற்றை இங்கு இயங்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் சங்கப் பொது முகாமையாளர் சி.நாகேந்திரன் தெரிவித்தார்.

அதேவேளை, சங்க வாகனங்களை அங்கு நிறுத்தி வைப்பதற்கான அனுமதி இன்னமும் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து கிடைக்கப் பெறாமையினால் சங்கத்தின் செயற்பாடுகளில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் கூறப்படுகின்றது. (04-க-135)



சுன்னாகம் - கந்தரரோடை - கட்டுடை ஊடாக நவாலி வடக்கிற்கான குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்இவை.

இந்த நிகழ்வில் யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, பசுமைப்புரட்சியாளர் வை.செகராஜசிங்கம், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிராம அதிகாரி அ.தனபாலரத்தினம், உள்ளூராட்சி உதவியாளர் இ.கிருஸ்ணகுமார், பாடசாலை அதிபர் இரா.வசந்தகுமார் ஆகியோர் இணைந்து மங்கள விளக் கேற்று முதலாவது படத்திலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொதுதாங்கி நீர்த்திட்டத்தை திரை நீக்கம் செய்வதனை இரண் டாவது படத்திலும், யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் க.முதலியார் வரவேற்புரை நிகழ்த்துவதை இறுதிப்படத்திலும் காணலாம்.

(படங்கள்: இரா.சதா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோயாளர்களைப் பார்வையிடும் நேரங்களில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்.12

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

பொது மக்கள், நோயாளர்களின் உறவினர்கள், நோயாளருக்கு உணவு வழங்க வருப வர் கள் ஆகியோர் நோயா ளர்களைப் பார்வை யிடும் நேரங்களிலேயே எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் காலை 6 மணி தொடக்கம் 6.30 வரையும், மதியம் 12 மணி முதல் 1 மணி வரையும், மாலை 4.30 மணி முதல் 5.30 வரை மட்டுமே நோயாளர்களைப் பார்வையிட முடி யும்.

இதே வேளை மட்டுப்படுத்தப்பட்டளவு பார்வையாளர்கள் வருவது சிறந்த சேவையை வழங்க உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### மாணவர் கலந்துரையாடல்

தேசிய கல்வியியற் கல்லூரி ஆங்கில பாட கற்கை நெறிக்கு நேர் முகப் பரீட்சைக்குத் தோற்றி தெரிவு செய்யப்படாத மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று திங்கட் கிழமை காலை 9 மணிக்கு கே.கே.எஸ். வீதியில் உள்ள ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகத்தில் இடம்பெறவுள்ளதாக ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (1)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2112 திகதி 10-04-2010

ஆங்கில எழுத்திற்கும் D

வெற்றி எண்கள் 22 47 54 69

போனஸ் இல: 50

ஜக்பொட் பரிசு ரூ. 15,373,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 167231 | 20/- | 3,344,620/- |
| 2 இல | 11862 | 100/- | 1,186,200/- |
| 3 இல | 252 | 1,000/- | 252,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6507 | 40/- | 260,280/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 525 | 1,000/- | 525,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 15,373,400/- | - |
| 1 இல + போனஸ் இல | 7932 | 100/- | 793,200/- |
| 2 இல + போனஸ் இல | 377 | 500/- | 188,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 339 | 200/- | 67,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | | | 8,203,100/- |
| தங்க நாணயங்களின் பெறுமதி | 10 | | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 195068 | | 8,803,100/- |

ஆலீந்தயே வாசனா வெற்றியாளர்கள்

தங்கக்காசு வெற்றியாளர் - S.S. விரசிங்க - அனுராதபுரம்.

கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - W.P.W. ஜயவீர - இபுல்கொடை.

2 தங்க நாணயங்கள் வெற்றி பெற்ற டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| வவுனியா | 301817500-3-08 |
| பதுளை | 301811292-4-43 |
| பொலன்னறுவை | 301806414-3-06 |
| அம்பாந்தோட்டை | 301805688-0-29 |
| குருணாகல் | 301806249-5-48 |
| கொழும்பு | 301823702-2-42 |
| கம்பஹா | 301822334-2-42 |
| கேகாலை | 301823812-9-38 |
| மாத்தளை | 301806629-0-23 |
| களுத்துறை | 301810654-5-25 |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 15,829,775/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



# விற்றுத் தீர்த்தல்



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு புத்தம் புதிய புடைவைகள் - 25% முதல் 50% வரை விலைக்கழிவுடன் விற்றுத் தீர்த்தல்

- சாறி வகைகள்
- ஸ்கேட் அன் பிளவ்ஸ், கவுண் வகைகள்
- பேபி சூட், பேபி FROCK வகைகள்
- GENTS T.சேட்ஸ், GENTSசேட்ஸ்,ரவுசர் வகைகள்

மற்றும் பிறின்றட் துணிவகைகள்

நேற்று 11.04.2010 தொடக்கம் 16.04.2010 வரை விற்றுத்தீர்த்தல்

லிங்கம் சில்க்ஸ் பிளவ்ஸ் பீஸ் கடைக்கு அருகில்.

இல: 23, நவீன சந்தை,மேல்மாடி, யாழ்ப்பாணம்.

(சி/566654)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமநல நிதியைப் பிணையாகக் கொண்டு தோட்டத் தொழிலாளருக்கு வீட்டுக்கடன்

## தேசிய முதலீட்டு வங்கியின் தலைவர் தெரிவிப்பு

கண்டி, ஏப். 12

பெருந்தோட்டப் பகுதித் தொழிலாளர்களது சேமநல நிதியை பிணையாகக் கொண்டு வீடமைப்புக்கடன் ஒன்றை வழங்க தேசிய முதலீட்டு வங்கி முன் வந்துள்ளது என அதன் தலைவர் திலின் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டி ரோயல் மோல்ட் விடுதியில் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இன்று நடைமுறையில் இரு வகையான தொழிலாளர் சேமநல நிதி காணப்படுகிறது. இதில் ஒன்று சாதாரணமாக அரச சார்பு நிறுவனங்கள், நியதிச் சீபைகள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பொதுத்துறை ஊழியர்களது சேமநல நிதியாகும்.

மற்றது பெருந்தோட்டப் பகுதி தோட்டத் தொழிலாளர் சேமநல நிதியாகும். இதில் அரசு சார்பான துறையாளருக்குப் பல வரப்பிரசாதங்கள் உள்ளன.

இருப்பினும் பெருந்தோட்டத் துறையினருக்கு அந்தளவு வாய்ப்புகள் இல்லை. இருப்பினும் குடியிருப்புப் பிரச்சினை அவர்களுக்கு உண்டு. அந்த அடிப்படையில் ஒரு வீட்டைக் கட்டுவதற்கு அல்லது கொள்வனவு செய்வதற்கு அல்லது திருத்தி அமைப்பதற்கு தோட்டத் தொழிலாளர்கள் சக்தியின்றி உள்ளனர். இவர்களுக்கு உதவும் வகையிலே இத்திட்டம் முன்வைக்கப்படுகிறது.

இதன்படி ஊழியர் சேமலாப நிதியில் 50 முதல் 75 சதவீதம் வரையில் கடனாகப் பெறமுடியும். இதற்குப் பிணையாக தமது சேமலாப நிதிக் கணக்கையே வைத்துக் கடன்பெறமுடியும்.

ஆவணங்களைச் சமர்ப்பித்து இரண்டு தினங்களில் இக்கடன் வழங்கப்படும். 15 வருட தவணை அடிப்படையில் ஐந்து லட்சம் ரூபா வரையில் கடன் பெற முடியும். சாதாரணமாக ஒரு லட்சம் ரூபாவை கடனாகப் பெறும் ஒருவர் அதை 120 தவணைகளில் மீளச் செலுத்துவ தாயின் மாதாமாதம் ஆயிரத்து 710 ரூபா செலுத்த வேண்டும்.

தொழிலாளரின் நலன் கருதியே இவ்வாறான கடன் திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது - என்றார்.

இக்கூட்டத்தில் மத்திய மாகாண பிரதி தொழில் ஆணையாளர் பாலித அபயதிலக, உதவிப்பொது முகாமையாளர் ஆர்.பி.யூ. பத்திரன உட்படப் பலர் உரையாற்றினர்.

இவ்வேலைத் திட்டத்தின் அழைப்பாளர் தியாகராஜா நன்றி உரையாற்றினார். (ஸி)




# கேகாலை போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சால் பல்வேறு வசதிகள்

கேகாலை, ஏப். 12

கேகாலை போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சினால் பல்வேறு வசதிகள் செய்துகொடுக்கப் பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இவ்வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறவரும் கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த நோயாளர்கள் பலரும் தேவையான வைத்திய சிகிச்சைகளை இடையூறின்றிப் பெறமுடிகிறது என்றும் கூறப்படுகின்றது.

மகப்பேற்றுப்பிரிவு, சத்திரசிகிச்சைப் பிரிவு மற்றும் உள் - வெளி நோயாளர் பிரிவுகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதுடன், பிரஸ்தாப பிரிவுகளுக்கு அவசியமான வைத்திய உபகரணங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஸி)

# வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாதவர்களால் உரிமையாளர் கொலை; பணம்,நகை கொள்ளை

## பலாங்கொடையில் சம்பவம்

இரத்தினபுரி, ஏப். 12

பலாங்கொடை - வெவல்ஹின்னகமயில் வீடொன்றுக்குள் புகுந்த இனந் தெரியாத மூவர் உரிமையாளரைக் கொலை செய்தபின் வீட்டில் இருந்த பணம், நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என பலாங்கொடைப் பொலி ஸார் தெரிவித்தனர்.

46 வயதான இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொலை செய்யப் பட்டுள்ளார்எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் பற்றி பொலிஸார் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பத்து மணியளவில் குறித்த வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்த மூவர் உரிமையாளரை கூரிய ஆயுதத்தால் குத்தியபின் அறையொன்றுக்குள் இழுத்துப் போட்டுள்ளனர்.

அப்போது கூக்குரலிட்ட அவரது மனைவிக்கு கொலை அச்சுறுத்தலை விடுத்த அவர்கள் வீட்டிலிருந்த பணம், நகைகள் அனைத்தையும் கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

பலாங்கொடை நீதிவான் நாமல் பலல்ல சம்பவ இடத்தில் மரண விசாரணையை நடத்தியபின் சடலத்தை பலாங்கொடை வைத்தி யசாலையில் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் சந்தேகநபர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகள் தொடர் கின்றன.

# பதுளையில் மிளகுச் செய்கை ஊக்குவிப்பு

பதுளை, ஏப். 12

பதுளை மாவட்டத்தில் உள்ள பெருந்தோட்டப் பிரதேசங்களில் மிளகுப் பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டு வருவதுடன், அதனை மேலும் விருத்தி செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என விவசாய மற்றும் ஏற்றுமதி பயிர்ச்செய்கை அமைச்சின் அதிகாரி எஸ்.பி.யு. எஸ்.கே. ரணவீர தெரிவித்தார்.

பெருந்தோட்ட பிரதேசத்தில் உற்பத்தியாகும் மிளகுக்கு நல்ல விலையும், கிராக்கியும் ஏற்பட்டு வருகின்றதெனக் குறிப்பிட்ட அவர், ஹாலிஎல, உனுகல, பசறை எல்டெப், டெமேரியா, பதுளை குமின் ஸ்டவுன், பண்டாரவளை ஆகிய தோட்டங்களிலேயே இப்பயிர்ச்செய்கை தொடங்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

சுமார் 26 ஏக்கர் காணியிலேயே இப் பயிர்செய்கை தொடங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மிளகுச் செய்கைக்கான விதைகள், கன்றுகள் தேவையான உதவிகள் அமைச்சினாலேயே வழங்கப்படுகிறது என்றும் அவர் மேலும் தெரித்தார். (ஸி)

# இறக்காமம் கிராமங்களில் நாற்பது வீடுகள் நிர்மாணம்

மட்டக்களப்பு, ஏப். 12

இறக்காமம் 7ஆம் பிரிவிலுள்ள குடிவில், மாணிக்கமடு, நல்லதண்ணிமலை ஆகிய மூன்று கிராமங்களில் இருப்பிட வசதி யற்றவர்களுக்கு யு.என்.டி.பி. நிறுவனம் 40 வீடுகளை அமைத்துக் கொடுக்க நிதி ஒதுக் கீடு செய்துள்ளது எனத் தெரிவிக்கப் படுகின்றது.




குடிவில் பகுதியில் 18 வீடுகளும், மாணிக்கமடுப் பகுதியில் 16 வீடுகளும், நல்தண்ணி மலைப் பகுதியில் 6 வீடுகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன. வீடொன்றிற்குச் சுமார் 6 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு, அத்திபார வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. யு.என்.டி.பி. நிறுவனத்திற்கு இந்த மூன்று கிராம மக்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர் எனக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வீ.யோகராஜா தெரிவித்தார். (ஸி)

# மிருக வைத்தியர் - ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரல்

திருகோணமலை, ஏப். 12

மிருக வைத்தியர்கள், மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் ஆகிய பதவிகளுக்குரிய வெற்றிடங்கள் நிரப்பும் ஏற்பாட்டில் ஆள்சேர்ப்புச் செய்யப்படவுள்ளது - என்று கால்நடைவள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சுனிமல் சேனாரட்ண அறிவித்துள்ளார்.

இதற்கென, மிருக வைத்தியப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை 30.04.2010ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், த.பெ. இல: 13, கெட்டம்பே, பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்க முடியும்.

மிருக வைத்தியர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட மிருக வைத்திய விஞ்ஞானத் துறையில் நான்கு வருடப் பட்டப்படிப்பும், மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட மிருக வைத்திய விஞ்ஞானத்துறையில் நான்கு வருடப் பட்டப் படிப்பு முதலாம் வகுப்பில் அல்லது 2ஆம் வகுப்பில் உயர் மட்டத்தில் சித்தி பெற்றிருத்தலும் தகமைகளாகக் கொள்ளப்படுகின்றன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போர் இதற்கென விண்ணப்பிக்க முடியாது. அத்துடன், ஆள்சேர்ப்புச் செய்வதற்கான பொதுவான தகமைகளாக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தில் 20 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். முதுமாணிப் பட்டம் பெற்ற விண்ணப்பதாரர் தொடர்பில் உச்ச வயதெல்லை 40 ஆகும். மிருக வைத்தியர் பட்டதாரிகள் இலங்கைக் கால்நடை வைத்திய சபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸி)

# கணனி அச்சு இயந்திரம் பெற்றோர்களால் கையளிப்பு

ஏறாவூர் அலிஹார் தேசிய பாடசாலையில் கல்வி பயிலும் ஜீ.சீ.ஈ.சாதாரண தர வகுப்பு மாணவர்களின் பெற்றோர்கள் பாடசாலைக்குக் கணினி அச்சு இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

ஜீ.சீ.ஈ. சாதாரண தர வகுப்பு மாணவர்களின் அடைவு மட்டத்தை மேம் படுத்துவதற்காக அமுல்படுத்தப்பட்டு வரும் விஷேட திட்டத்திற்குப் பயன்படுத்தும் வகையில் இந்த உபகரணம் பெற்றோர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் யு.எச்.முகம்மதிடம் பெற்றோர்கள் இதனைக் கையளித்துள்ளனர். இந்தப் பாடசாலையில் கல்வி பயிலும் ஜீ.சீ.ஈ.சாதாரண தரத்தைச் சேர்ந்த சுமார் 250 மாணவர்களின் பெறுபேறுகளை மேம்ப டுத்துவதற்கான விஷேட வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டுள்ளது எனப் பிரதி அதிபர் ஏ.நூறு முகம்மது தெரிவித்தார். (ஸி)

# பழுதடைந்த பாண் விற்றவருக்கு அபராதம்

அம்பாறை, ஏப். 12

பேக்கரி மற்றும் ஹோட்டல்களில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்படுவதால் இது குறித்துப் பொது மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் - என்று களுவாஞ்சிக்குடி சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

அண்மையில் இது தொடர்பாகக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டபோது, பூஞ்சணம் பிடித்து பழுதடைந்த நிலையில், 19 இறாத்தல் பாண் களுவாஞ்சிக் குடி சந்தைக்கு முன்பாகவுள்ள கடை ஒன்றிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டு, வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் கமலக்கண்ணன், குறித்த கடை உரிமையாளரை 10ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறும், இனிவரும் காலங்களில் இவ்வாறான பழுதடைந்த பொருள்களைக் கடையில் விற்பனை செய்யக் கூடாது எனவும் தெரிவித்தார். (ஸி)

# வெருகல், சூரநகர் கிராமத்தில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பம்

சேருவில, ஏப். 12

தேசநிர்மாண தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் கீழான 'மீள் எழுச்சி'த் திட் டத்தின் மூலம் வெருகல் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கென வெருகல் பிரதேசத்தின் 'சூரநகர்' கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்ட நடவடிக்கையாக இரு கிராமிய வீதிகள் புனரமைப்புச் செய்யப் படவுள்ளன. அத்துடன், 5 விவசாயப் பொதுக்கிணறுகள் பயிர்ச்செய்கைக்கென விவசாயிகளுக்கு அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன.

ஒரு விவசாயக் கிணற்றை ஆகக் குறைந்தது 5 விவசாயிகள் பயன்படுத்தக் கூடிய விதமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தி வேலைகள் மக் கள் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் வெருகல் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் தலைமையில், பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே பிரதேச செயலாளர் கிராம மக்கள் பிரதிநிதிகளிடம் இது தொடர்பான சம்மதத்தைக் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில், உதவி பிரதேச செயலாளர் பி.பிரதீபன், திட்டமிடல் பணிப்பாளர் என்.நவநீதன், பிரதேசசபைத் தலைவர் எஸ்.சௌந்தரராஜன், காணி உத்தியோகத்தர் ஜீ.ரவிராஜன், தொழில்நுட்ப அலுவலர் ஆர்.ரமேஸ், கிராமசேவையாளர் ரூபன் உட்படப் பொது அமைப்பின் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். (ஸி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சை - 2009;
# சில பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள்

2009ஆம் ஆண்டு டிசெம்பரில் நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகின. இதில் சிறந்த பெறுபேற்றினை எய்திய மாணவர்களின் விவரத்தை சில பாடசாலைகள் அனுப்பி வைத்துள்ளன. அந்தப் பெறுபேறுகள் இங்கு பிரசுரமாகின்றன..

**யாழ்.சென். பற்றிக்ஸ் கல்லூரி**

*தமிழ் மொழி மூலம்*

எம். விந்துசன் -9ஏ, எம். றஜீவன் -8ஏ, பி, எம். தயான்ரோ - 5ஏ,3பி,சி, எ.எஸ். சைலஸ் - 4ஏ,4பி,சி, எம். டிலான்ரோ- 4ஏ,3பி, 2சி, கே.சியாம்சங்கர் - 4ஏ,2பி,3சி, ஜே.எம். அலஸ்ரின் -4ஏ,பி,2சி,2எஸ், இ.ஜெனாத் - 4ஏ,பி,3சி,எஸ், எஸ். கவிசாந்த்-4ஏ,2பி,2சி,எஸ், எ.அஜித்தார்- 4ஏ,பி,3சி,எஸ்

*ஆங்கில மொழி மூலம்*

டி:மிக்கிபோல்-9ஏ, எஸ்.எஸ்.ஜே.நிதர்சன்-9ஏ, டி.சஞ்சீவ்-8ஏ,பி, ஜே.ஜே.திவ்வியானந்த் -6ஏ,3பி, ஜே.ஏ. நிசாந்தன்-5ஏ, 4பி, ரி.விமலக்சன் - 5ஏ,3பி,சி, ஏ.ஜே.எம்.பிரசாந்தன்-5ஏ,2பி,சி.எஸ், எம்.கெறிக்சன் -5ஏ,பி, 2சி,எஸ், பி.ஏ.ஆர்.திவாகரன் -4ஏ,3பி,சி.எஸ், ஜே.ஏ.அலன்ராஜ்- 4ஏ,2பி,3சி

**கொக்குவில் இந்துக்கல்லூரி**

*தமிழ் மொழி மூலம்*

வைத்தியநாதன் விசாகன் - 8ஏ, பி, சுகுமாரி சிறிபாலன் -8ஏ, பி, தயானந்தன் டினேஸ்குமார் - 8ஏ,சி, ஆதி. சத்தியமூர்த்தி- 7ஏ,2பி, தனபாலசிங்கம் கஜேந்திரன்- 7ஏ,பி,சி, சத்தியானந்தன் சஞ்சீவன் -7ஏ,பி,சி, செல்லையா சுவேந்திரன் -7ஏ,பி,சி, விஜயநாதன் நிரோஜன்- 7ஏ,பி,சி, பரமநாதன் தர்சிகன்-6ஏ,2பி,எஸ், மகாலிங்கம் விஸ்ணுசரன்- 6ஏ,பி,2சி, மகிந்த மகாலிங்கம்-6ஏ,பி,2சி, தனபாலசிங்கம் கேமதர்சன்- 6ஏ,பி,சி,எஸ், மகேந்திரராசா கீர்த்திகன்- 5ஏ,3பி,சி, விதுனா சிவஞானசிங்கம் -5ஏ,3பி,சி, பாவியா செல்வராசா- 5ஏ,3பி,எஸ், பிரியங்கா அமிர்தகுலசிங்கம்- 5ஏ,2பி,2சி, ரகுநாதன் சசிக்குமார்- 5ஏ,3சி,எஸ்.

*ஆங்கில மொழி மூலம்*

இரத்தினகோபால் நிதர்சன்-8ஏ,பி, பாலகிருஷ்ணர் கஜலக்சன்-7ஏ,2பி, தர்மினி தளையசிங்கம்-6ஏ,2பி,எஸ், தருமராசா சிறிகுமார் -6ஏ,பி,சி,எஸ், தயானந்தன் தெய்வதவராஜா-5ஏ,4பி, சிவசுப்பிரமணியம் கீரன் - 5ஏ,2பி, 2சி, நவலட்சனாபாலகிருஷ்ணன் -5ஏ,பி,சி,எஸ்

**தெல்லிப்பழை,மகாஜனக் கல்லூரி**

ரவீந்திரமூர்த்தி துசாந்தன்-9ஏ, சச்சிதானந்தசிவம் வேணிலன் -8ஏ, பி, ஜெயநாதன் ஜெயக்கமலம்- 7ஏ,2பி, மதியாபரணம் அஜந்தன் - 7ஏ,பி,சி, புனிததயாபரன் திவாகரன்- 7ஏ,பி, எஸ், கீர்த்திகா ஞானகுருநாதன் -6ஏ,2பி,சி, தில்லைநாதன் அரன்ராஜ் -5ஏ,4பி, கிருபாமூர்த்தி நிரேஸ் - 5ஏ,3பி,சி, கஸ்தூரி தர்மராசா- 5ஏ,2பி,2சி, இராசதுரை கஜீபன்- 5ஏ,2பி,2சி, ரதீபனாஅகிலலோகநாயகம்- 5ஏ, 2பி,2சி, செல்வநொயிலின் செல்வராசா- 5ஏ,பி,2சி,எஸ்.

**யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

எஸ். திலீப் -5ஏ,பி,2சி, எஸ், எஸ்கஸ்தூரன் - 4ஏ, 2பி,2சி, எஸ், ரி.கம்சத்வனி- 4ஏ,பி,2சி,2எஸ், ஜெ.மதிவதனி -3ஏ,3பி,3சி, கே.கிருஷ்ணமேனன்-3ஏ,பி, 4சி,எஸ், பி.கவிதா -2ஏ,பி,4சி,2எஸ், ரி. கோடீஸ்வரன் -2ஏ,பி,4சி, ரி.தர்சிகன் - 2ஏ,பி,2சி,4எஸ், கே.சஸ்கீர்த்தனன் - 2ஏ, சி, 3எஸ், எஸ்.கஜீபன்- ஏ,3பி,4சி,எஸ், எஸ்.பவிதா- ஏ,3பி, 2சி,2எஸ், பி.பிரதீபன்- ஏ,2பி,5சி,எஸ், பி.ஜிந்துஜா - ஏ, 2பி,3சி,2எஸ், ஆர்.பிரசாந்தி- ஏ,2பி,சி,2எஸ், எஸ். நிலானி- ஏ,பி,2சி,3எஸ்.

**நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்**

*தமிழ் மொழி மூலம்*

பிரியா விஸ்வலிங்கம் -7ஏ,2பி, முருகானந்தம் அபிராம் - 6ஏ, 2பி,சி, கனகரட்ணம் நிரோஷன்- 6ஏ,2பி,எஸ், சிவநாதன் அருண்குமார் - 5ஏ,3பி,சி, பிரதீபா தனபாலசிங்கம்-5ஏ,பி, 2சி,எஸ், சூசைப்பிள்ளை வித்தகன் -5ஏ,சி,எஸ், கந்தையா அருண் -4ஏ,5பி, கந்தவனம் தர்ஷநாத் - 4ஏ,4பி, எஸ், நடராசா சர்மிலன்- 4ஏ,2பி,3சி, நல்லகுருநாதன் டினாளன்- 4ஏ,பி,4சி, குகரூபன் ஐங்கரன்- 4ஏ,3சி,எஸ், சிவலிங்கம் பிரகாஷ்- 4ஏ,பி,2சி

*ஆங்கில மொழி மூலம்*

சிவயோகநாதன் துவாகரன்- 5ஏ,4பி, வானுஜா கஜேந்திரன்-5ஏ,2பி,2சி, பரமநாதன் ஹரிதர்ஷன்-5ஏ,2பி,சி,எஸ், ஆதித்தியா நேசராசா -4ஏ,3பி,2சி, ஞானகௌரி செல்வராசா -4ஏ,பி,4சி, கலைவாணி விஜயராஜா - 4ஏ,பி,4சி, அருளானந்த சிவம்மோகன்லால் -4ஏ,பி,4சி, விநோதா கைலாயப்பிள்ளை -4ஏ,4சி,எஸ்.

**மானிப்பாய் இந்துக்கல்லூரி**

ஸ்ரீ.கவிப்பிரியன்- 8ஏ,பி, சி.தனஞ்சயன் -7ஏ, 2பி, க. பானுசர்மா- 6ஏ,3பி, க.ஜெல்சின் - 5ஏ, 3பி,சி, ஜெ.லக்சன்- 5ஏ,பி,2சி, த.கனிசாந்த்-4ஏ ,2பி,3சி. சிவநேசன் -4ஏ, 3பி,சி,எஸ், சி.நிலக்சன்- 4ஏ,2பி,2சி, எஸ். டிலக்சன்- 3ஏ,3பி, 3சி, கோ.தனுபரன்- 3ஏ, 2பி,3சி,எஸ், ந.லக்சன் -3ஏ,பி,3சி, 2 எஸ், ப.யுதிஷ்ரன் -3ஏ,4பி,ல. கபிலஜீவன் 3ஏ,3சி, 3எஸ்,

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

த.தர்சனா-8ஏ,பி, சொ.தருமதன்-7ஏ,2பி, ப.சுயந்த-7ஏ,பி,சி, தே.இராகவி- 4ஏ, 4பி,எஸ், சு.ஆதவன் -4ஏ,4பி,எஸ், ம.கோகுலன்- 4ஏ,3பி,சி,எஸ், க.பிரகாஷ்-4ஏ,3பி, சி,எஸ், தி.லகீதா- 4ஏ, 2பி,2சி,எஸ், பா.கஜேந்திரன்- 4ஏ, 2பி,சி,2எஸ், இ.டன்சிகா- 4ஏ,பி,3சி,எஸ், த.கிரிஷாந்த் -3ஏ, 3பி,3சி, த.மயூரன்- 3ஏ,5பி, சி.சுயந்திரன் -3ஏ,4பி,சி,எஸ், க.அனுசியன்-3ஏ,2 பி,2எஸ், ச.தர்ஜினி- 3ஏ,பி,3சி,எஸ்.

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

நாராயணி வெற்றிவேல்- 8ஏ,பி, ரூபினி நாகராஜா- 7ஏ.2பி, செந்திகா பழனிநாதன்- 7ஏ,2பி, அகல்யா தனபாலசிங்கம் -7ஏ.சி.எஸ், சுமஸ்கலை பேரின்பநாதன்- 7ஏ.பி.சி, மயூரா யோகேஸ்வரன்- 6ஏ.2பி.சி, சுதர்சினி சுதர்சன்- 6ஏ,பி,2சி, லக்சுமி குணபாலன்- 6ஏ,2பி,சி, திலக்ஷனா சதாணந்தசிவம்- 6ஏ,பி,சி,எஸ், பிரவீணா பரமேஸ்வரன்- 5ஏ,4பி, சாகித்தியா செல்வராசா- 5ஏ,2பி,2சி, துளசி உமாகரன்- 5ஏ,2பி,சி,எஸ், வினோஜா சிறிதரன் -5ஏ,பி,3சி, அனுசுயா கணேசலிங்கம்- 5ஏ,3பி,சி, தனுசியா சிறிதரன் - 5ஏ, 3பி, எஸ், தனுரேகா செல்வசிங்கம் - 5ஏ,பி, 2சி,எஸ், கௌதமி ஜெகதீஸ்வரன்- 4ஏ,3பி,சி,எஸ், மயூரி பரமலிங்கம்- 4ஏ, 3பி,2சி, பிரவீணா மகேந்திரராசா -4ஏ, 2பி,சி,2எஸ், றொசானி தேவராசா- 4ஏ,3பி,சி,எஸ், தாரணி புவேந்திரன்- 4ஏ,3பி, சி,எஸ்,கஜாந்தினி சிவஞானச் செல்வன்- 4ஏ,3சி,எஸ், கென்சிகா தங்கராஜா-4ஏ,2பி,3சி, மிதுனா கேதீஸ்வரன்- 4ஏ,2பி,3சி, சாயினி ராஜரட்ணம்- 4ஏ,பி,சி,எஸ், அனுசா ராஜமகேந்திரன்- 4ஏ,4பி,சி, வரலக்சுமி நவரத்தினசிங்கம்- 4ஏ,4சி,எஸ், சுபிஜா சிவலிங்கம்- 4ஏ,4பி,சி, வேதசொரூபி ஸ்ரீதரன் -4ஏ,3பி,3சி, ஆரணி செல்வராசா- 4ஏ,2பி,2சி,எஸ், அபர்ணா கிருஸ்ணகுமார்- 4ஏ,2பி,3சி, அஜிதா கிருஷ்ணகுமார்-4ஏ,2பி,3எஸ், மயூரி ரமேஸ்-4ஏ,2சி,3எஸ், குகன்யா செல்வராஜா -4ஏ,பி,4சி, கேசனா சற்குணலிங்கம்- 4ஏ,பி,3சி,எஸ்.


உத்தியோக பூர்வ முடிவுகள் — சுப்பிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 544 — திகதி 2010/04/10

சுப்பர் இலக்கம்: 02 — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 13 33 37 50

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 24,485,873.60 விகிதம் | — |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000,000.00 விகிதம் | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 50,000.00 விகிதம் | 06 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 2,000.00 விகிதம் | 198 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 1,000.00 விகிதம் | 401 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாய் இருப்பின் | ரூ. 100.00 விகிதம் | 9,904 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் ஏனைய 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 50.00 விகிதம் | 5,718 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 20.00 விகிதம் | 143,417 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியாய் இருப்பின் | ரூ. 30.00 விகிதம் | 22,997 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசு தொகை ரூ. 6,931,550.00

சுப்பர் பரிசு சொகுசு ஜீப் வண்டியுடன் மீதி தொகை பணமாக

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ 24,676,616.80

தேசிய லொத்தர் சபை — www.nlb.lk



VACANCIES

Lecturers-ICT

Degree Holders with One year teaching Experience or Professional Qualifications with 03 years teaching Experience

Instructors-ICT

Higher National Diploma Or Diploma Holders with One year Experience

Salary- Negotiable

*Forward your application with name of two non related referees within 10 Days to*

Regional Director
ESoft Computer Studies(Pvt) Ltd.
Regional Head Office-North
114,Navalar Road, Jaffna.

வடமராட்சி, தென்மராட்சியில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ESOFT — ESOFT Computer Studies (Pvt) Ltd. #1 in Sri Lanka for BCS & BIT T.P: 021 222 4142 web:www.esoft.lk



யாழ் நகரில் British College of Higher Studies ஏற்பாட்டில்

வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர் யுவதிகளுக்கு 100% வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தரும்/உறுதிப்படுத்தும் முகமாக அவர்களின் ஆளுமையை விருத்திசெய்யும் **(Personality Development)** பயிற்சிப் பட்டறைகள் **(Work shops)**

**இப் பயிற்சி நெறியில் உள்ளடங்குபவை**

- நேர்முகத்தேர்வினை எவ்வாறு எதிர் கொள்வது?
- அங்கு கேட்கும் கேள்விகளுக்கு எவ்வாறு பதிலளிப்பது?
- எப்படியான ஆயத்தங்களிற்கமைய் உங்களைத் தயார்படுத்துவது?
- உங்களிடம் உள்ள ஆவணங்களை எவ்வாறு முறைமைப்படுத்துவது?
- அலுவலகத்தில் பேசக்கூடிய ஆங்கிலமும், அதற்கான உரையாடற் பயிற்சிகளும்
- முகாமைத்துவம் (Management)
- மனிதவளப் பயன்பாடுகள் ( Human Resource Management)
- அலுவலகப் பிரயோகத்திற்கான கணினிப் பயிற்சிகள் (Ms.Windows, Ms Word, Excel, Power Point, Accounting)

பயிற்சியின் முடிவில் தரம் வாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்

**பயிற்சிப் பட்டறைகள் : 15 மணித்தியாலங்கள்**

சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களிலும் நடாத்தப்படும்

பயிற்சிப் பட்டறையில் பங்குபெறும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் உங்களின் பதிவுகளை தாமதமின்றி முன்கூட்டியே பதிவு செய்து உங்கள் நேரஅட்டவணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இப் பயிற்சிப் பட்டறையில் பயிலும் அனைவருக்கும் எமது நிறுவனத்தினால் சுயவிபரக்கோவை (Bio-Data) தயாரிக்கப்பட்டுத் தொழில் வங்கியிலும் (Jop Bank) இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

**British College of Higher Studies**

No. 15, Sirambiyadi Lane (Off Stanley Road), Jaffna.

web: www.bchs.lk Email:info@bchs.lk Tel: 021-2224550, Mobile:0777222422, 0714299935, 0773501499



புலமைப்பரிசில் சந்தர்ப்பம்

மூன்று வருட செயற்கை அவயவ பயிற்சிநெறி

Sri Lanka School of Prosthetics and Orthotics (SLSPO)
(Two year of academic training & one year of clinical training)
Prosthetics/ Artificial Limbs & Orthotics/ Supportive Braces

*விண்ணப்பதாரியின் அடிப்படைத் தகைமை:*

க.பொ.த.சாதாரண தரம்:
பொது விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம் அல்லது தமிழில் திறமைச் சித்தியுடன் இரு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தி.

க.பொ.த.உயர்தரம்:
பௌதிகவியலில் திறமைச் சித்தி உட்பட விஞ்ஞானப்பிரிவில் 3பாடங்களில் சித்தி

வயது:
ஏப்ரல் 30, 2010 திகதியன்று 18-30 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

வலுவிழந்தவர்கள் மத்தியில் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணிபுரியக் கூடியவராகவும், பயிற்சிக்கால முடிவில் யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தில் பணிபுரியத் தயாராகவும் இருத்தல் வேண்டும். வலுவிழந்தவர்களும் பெண்களும் விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றனர். விண்ணப்பத்துடன் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரதியும் இணைக்கப்படுவதுடன், தொலைபேசி இலக்கமும், கடித முகவரியும் குறிப்பிடப்பட வேண்டும். நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மட்டும் கடிதம் மூலம் அறிவிக்கப்படும்.

மாணவர்களுக்கான கல்விச்செலவு மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி என்பன SLSPO வினால் வழங்கப்படும்.

கற்கைநெறி ஆங்கிலத்தில் இடம்பெறும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினம் 20 ஏப்ரல் 2010.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
இல.05, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2574
(A) மின்னஞ்சல்: jaipurj@sltnet.lk.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 26.03.2010 அன்று நடைபெற்ற பொதுப்பட்டமளிப்பு விழாவில்,
**பாலசுந்தரம் அரவிந்தன்**
M.B.B.S பட்டம் பெற்றமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அம்பன் வரசித்தி விநாயகப் பெருமானின் அருளாசியுடன் அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று இனிதே வாழ எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

| | சித்தப்பாமார் | சித்திமார் |
|---|---|---|
| அம்பன், | தர்மசிறி (சுவிஸ்) | மோகனரதி (சுவிஸ்) |
| குடத்தனை. | ஜெயராசசிங்கம் | கலாரதி |
| | வசந்தகுமார் | சிவரதி |
| | | ரதிதேவி |

[96834]

## ‘ஐ.ஐ.எஸ் சிற்றி கம்பஸ்’ நிறுவன தகவல் தொழில்நுட்பக் கண்காட்சி

இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில் ‘‘ஐ.ஐ.எஸ். சிற்றி கம்பஸ்’’ நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பிரபல பாடசாலைகள் இணைந்து நடத்தும் தொழில்நுட்பக் கண்காட்சியும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் புதன் கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இக்கண்காட்சியில் விசேட அம்சமாக கண்காட்சியின் பின் பாடசாலை மட்டத்தில் பொது அறிவு, நுண்ணறிவு பரீட்சையும் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிப் பரீட்சையில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சியை ஆர்வமுள்ள அனைவரும் பார்வையிட்டு பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-10)

### கரம்பன் கோஷ்டி மோதலில் 4 பேர் காயம்

கரம்பன் கிழக்கு ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையே நடந்ததாகக் கூறப்படும் மோதலில் நால்வர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டடுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த அதே இடத்தைச் சேர்ந்த வை.நிர்மலன் (வயது - 28), ஜெபற்றிக்(வயது-30) ஜெ.தயானந்தன் (வயது-22) பி.ஜெனூர்திகா (வயது 30) ஆகிய நால்வரும் நேற்றிரவு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஒ-16-78)

## வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியில், வைரவர் கோயிலுக்கு அருகில் 2 பரப்புக் காணி சகல வசதிகளுடனான வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0779215114
0774348680

## ஒன்று பட்டு வென்று தந்தமைக்கு நன்றி



எமது கட்சிக்குப் பேராதரவு தந்து ஐவரைத் தேர்ந்தெடுத்து தமிழ்த் தேசியத்தைப் பாது காத்தமைக்காகவும் கணிசமான விருப்பு வாக்கை எனக்களித்து எனது அரசியல் பிரவேசத்தை அங்கீகரித்தமைக்காகவும் எனது அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் இரா. சிவசந்திரன்
இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்.
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

(சி/566575)

## சோதிடம்



இந்தியாவில் புகழ்பெற்ற சோதிடர் எட்டயபுரம் எஸ். சந்திரபோஸ் அவர்களால் ஜாதகம், கைரேகை, பொருத்தம் மற்றும் அனைத்து சோதிடங்களும் மிகத்துல்லியமாகப் பார்க்கப்படும்.
காலை 7 மணிமுதல் மாலை 6 மணிவரை பார்க்கப்படும்.

தொடர்பு : 0778752163

414, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(96826)

## கண்ணீர் அஞ்சலி

‘‘சின்னமணி ஐயா’’ என்று அன்போடு அழைக்கப்பட்ட பெருமதிப்பிற்குரிய
**சிவஸ்ரீ ஸ்ரீநிவாசநாகேந்திரக் குருக்கள்**
அவர்கள் இறைபதம் அடைந்த செய்திகேட்டு, பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ. தேவதாஸ் (ஆசிரியர்),
சரஸ்வதி அக்கடமி,
பிரதான வீதி,புங்குடுதீவு-2.

பா. ரவீந்திரன்,
ரவி கடை,
புங்குடுதீவு-1.

(96841)

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிப்பிள்ளை பார்வதி



கோப்பாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பார்வதி 09.04.2010 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னாச்சி தம்பதியினரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, சின்னத்துரை மற்றும் கோபால், சரஸ்வதி (கனடா), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், ஜெயராணி,ஜெயராசா, இந்துமதி, செல்வராசா (கனடா), சிவராசா (கனடா), தேவராசா (கனடா), திலகராசா (அமெரிக்கா), புஸ்பலதா (கனடா), தவராசா (கனடா), சாந்தி (கனடா), ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும், வீரகத்தி, கமலகுமாரி, கேதீஸ்வரநாதன், ஸ்ரீரஞ்சினி, கேதீஸ்வரி, கோமதி, அனித்தா, ஞானி, தேவகி, கிருபன், ஜெந்திரன் ஆகியோரின் அருமை மாமியாரும், கிருஷ்ணவேணி, அரவிந்தன் (கனடா), மயூரா, கிருத்திகா, செந்தூரி, தாரணி, கீதாஜெயன், சர்மிஜா, பிரதீபன் (லண்டன்), கிருபாலினி, சுபாஸ்னி, கமலதீபன், அக்ஷரா, சிந்துஜெயன், சயந்தன், லாவண்யா, ஹரீஸ், ஹரிணி, கார்த்திகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2010) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாரியம்மன் வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல்:
த. ஜெயராசா (மகன்)
(ஒளியருவி பந்தல் சேவை).

(96836)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ




## யாழ்ப்பாணம் - வண். வட மேற்கு கேசாவில் முத்துவிநாயகர் தேவஸ்தானம் சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா

காலம் : 12.04.2010 திங்கட்கிழமை
நேரம் : பி.ப. 3 மணி

### நிகழ்ச்சி நிரல்

1) தலைமையுரை
2) ஆசியுரை
ஆலய பிரதம குரு
நல்லை ஆதீன முதல்வர்
ஆறு. திருமுருகன்
3) கலைஞர்கள் கௌரவிப்பு
சிற்பத்தேர் நிர்மாணிப்பு
விஸ்வப் பிரம்மஸ்ரீ ரதகலாஞானி ஸ்தபதி
செல்லையா பாலச்சந்திரன்
(ஸ்ரீ காளிகா சிற்பாலயம்)
‘பூம்பொழில்’
இல. 1201, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
4) நன்றியுரை



கேசாவில் முத்துவிநாயகர் தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்.

ஆலய அறங்காவலர் சபை.


**ULTRA TECH COMPUTER SOLUTIONS**

No - 365 Kandy Road
Sangathanai,
Chavakachcheri.

0213734588
TP 0779907627
0779037482

Email:- ultratech87@hotmail.com

சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு தென்மராட்சியில்
அனைத்து கணனி மற்றும் கணனிப்பாகங்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்

LCD Monitor 15"17" 19"
Computer Table
Woofer Items
Headphone
Web camera
Printer
Scanner
KeyBoard, Mouse
Network Items

CRT Monitors
Black 17"
White 17"

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
கணனி வாங்குபவர்களுக்கு
4GB penDrive Free

2.6 intel Dule core processor
Mother board intel support
1GB Ram
HDD 250
DVD Writer
Monitor 17"
Keyboard,mouse
UPS

49750/=

நீண்டகால உத்தரவாதத்துடன்...


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் விரோதி வருஷம் பங்குனித்திங்கள் 21 ஆம் நாள் (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை
சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர்

### ஸ்ரீமதி நாகலட்சுமி அம்மா சண்முகரட்ண சர்மா

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| 13.04.2010 | செவ்வாய்க்கிழமை | மு.ப 10 மணிக்கு | தசாகம் |
| 15.04.2010 | வியாழக்கிழமை | மு.ப. 10 மணிக்கு | ஏகோதிஸ்டம், மாசிகம் |
| 16.04.2010 | வெள்ளிக்கிழமை | மு.ப. 10 மணிக்கு | சபிண்டீகரணம் |
| 17.04.2010 | சனிக்கிழமை | மு.ப. 10 மணிக்கு | கிருஹயக்ஞம் |
| | | பகல் 12 மணிக்கு | சமாராதனை |

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் சமாராதனையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உதயகிரி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

பிரம்மஸ்ரீ சண்முகரட்ண சர்மா (கணவர்),
பிரம்மஸ்ரீ ரவிச்சந்திர சர்மா குருக்கள் (மகன்)
France : 0033145432957
0094324917824.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தை எழுச்சிமிகு சக்தியாக்கவே 'நாம் தமிழர்' அரசியல் கட்சியாக மாற்றம்

## அக்கினிப்புயல் சீமான் தெரிவிப்பு



சென்னை, ஏப். 12

எழுச்சிமிகு சக்தியாக தமிழின மக்களை ஒன்றுபடுத்தவே நாம் தமிழர் இயக்கம் அரசியல் கட்சியாக மாறுகிறது - என்று அந்த இயக்கத் தலைவரும் இயக்குநருமான சீமான் கூறியுள்ளார்.

இதுகுறித்து தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு -

'நாம் தமிழர்' இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றும் தமிழின எழுச்சி அரசியல் மாநாடு மதுரையில் மே 18 இல் நடைபெறுகிறது. இது தமிழர்களுக்கான அரசியல் கட்சியாகத் தொடங்கப்படுகிறது.

இந்திய தேசியம், திராவிடம் என்ற பெயர்களில்தான் இதுவரை தமிழகத்தில் கட்சிகள் உள்ளன. தமிழினத்திற்கென்று ஓர் அரசியல் கட்சியைத் தொடங்க வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகிவிட்டது.

ஈழத்தில் முன்பிருந்ததைவிடவும் அதிகமாக தமிழன் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறான். உலகம் முழுவதும் 12 கோடி தமிழர்கள் இருந்தும் ஈழத் தமிழனுக்கு உதவ முடியவில்லை.

இலங்கைக் கடற்படையால் நாள்தோறும் தமிழக மீனவர்கள் நடுக்கடலில் சித்திரவதைப்படுகின்றனர். இதுவரை 500 தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மத்திய, மாநில அரசுகள் அவர்களைப் பாதுகாக்க எந்த முயற்சியும் செய்யவில்லை. அவர்களுக்கு ஆதரவாக எச்சரிக்கை விடுவதற்குக்கூட அரசுகள் முயலவில்லை.

பல்வேறு உலக நாடுகள் இலங்கை அரசு போர்க் குற்றம் செய்திருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆனால், இந்திய அரசு இந்த விடயத்தில் மௌனமாக இருக்கிறது. இந்நிலையில் தமிழ் இனத்திற்கென்று, மொழிக்கென்று அரசியல் கட்சி அமைக்க வேண்டியது அவசியம். தமிழர்களை ஆள்பவர்கள் தமிழன் துயரப்படும்போது உதவவில்லை. எனவே, தமிழரைப் பாதுகாக்க ஓர் அரசியல் கட்சி தேவை.

இந்தக் கட்சியின் கொடி, தமிழின தேசத்திற்காக உலகின் பல நிலப்பரப்புகளை வென்று மாபெரும் தமிழ்த் தேசப் பேரரசை நிலைநாட்டிய அருண்மொழித்தேவர் என்ற ராஜராஜசோழன் ஏந்திய கொடி, தொழில்நுட்ப வளர்ச்சியே இல் லாத காலத்தில் கல்லணையை நிறுவி சாதனை படைத்த கரிகால சோழன் ஆகியோர் ஏந்திய கொடி.

நாங்கள் வசதியாக வாழ்வதற்காகக் கட்சி தொடங்கவில்லை. திராவிடக் கட்சிகளுடன் கூட்டணி அமைக்க மாட்டோம். அப்படியொரு நிலை ஏற்பட்டால், கட்சியைக் கலைத்துவிட்டு திரைத்துறைக்குச் சென்று விடுவேன். தமிழின அமைப்புக்கள் விரும்பினால், அவர்களைத் தேர்தலில் சேர்த்துக் கொள்வோம்.

கட்சி தொடங்கிய பின்னர், ஊர் ஊராகச் சென்று இளைஞர்களிடம் தமிழின உணர்வுகளைப் பரப்புவோம். அரசியல் வகுப்புகள் நடத்தி, இளைஞர்களை வழிநடத்துவோம். பெரியார், பூலித்தேவன், ரெட்டைமலை சீனிவாசன் போன்ற தமிழினத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பெயர்களில் படிப்பகங்களைத் தொடங்குவோம்.

உடற்பயிற்சிக் கூடங்களை அமைத்து, இளைஞர்களைத் தனித்திறன் மிக்கவர்களாக வளர்த்தெடுப்போம். இளைஞர்களை மது, புகையிலை போன்ற தீயசெயல்களில் இருந்து மீட்டெடுப்போம் - என்றார்.

## புலித் தலைவரை பின்பற்றும் விஜய்



விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் பயன்படுத்தி வந்த 'என் உயிரினும் மேலான தமிழ் மக்களே' என்ற மந்திர வார்த்தையை எல்லா மேடைகளிலும் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார் நடிகர் விஜய்.

மக்கள் மன்றத்தில் பேசும்போதும், எழுதும்போதும் 'என் உயிரினும் மேலான தமிழ் மக்களே' என்ற வார்த்தையைப் பயன்படுத்தச் சொல்லியிருக்கிறாராம் அவரது அப்பா.

இந்த வார்த்தை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் பயன்படுத்தி வந்த மந்திர வார்த்தை. பெரும் போராளி ஒருவர் உபயோகப்படுத்திய இந்த வார்த்தைக்கே ஒரு ஈர்ப்பு உள்ளது என்றெல்லாம் கூறினாராம் அவரது அப்பா. இதை யடுத்து எல்லா மேடைகளிலும் இதைப் பயன்படுத்த தொடங்கியிருக்கிறார் விஜய்.

## இந்தியச் செய்திகள்

# வழக்கை வாபஸ் வாங்குமாறு சிங்கமுத்து தம்மை மிரட்டுகிறார் என்கிறார் வடிவேலு



சென்னை, ஏப். 12

''வழக்கை வாபஸ் வாங்கும்படி நடிகர் சிங்கமுத்து என்னை ஆட்களை வைத்து மிரட்டுகிறார்'' - என்று நடிகர் வடிவேலு பரபரப்புக் குற்றச்சாட்டை தெரிவித்துள்ளார்.

சிரிப்பு நடிகர்கள் வடிவேலுவுக்கும், சிங்கமுத்துவுக்கும் இடையே நில மோசடி தொடர்பாக பிரச்சினை ஏற்பட்டது. இதுகுறித்து இருவரும் ஒருவர் மீது ஒருவர் வழக்கு தொடர்ந்து உள்ளனர்.

இந்த நிலையில், 'நாங்க புதுசா' என்ற நகைச்சுவை படம் எடுத்து வரும் தயாரிப்பாளர் கண்ணன் என்பவர், நடிகர் வடிவேலு மீது சென்னை பொலிஸ் கமிஷனரிடம் நேற்று முன்தினம் முறைப்பாட்டு மனுக் கொடுத்தார். 'நான் எடுக்கும் சினிமாவில், நடிகர் சிங்கமுத்துவும் நடித்து வருகிறார். அவரை வைத்துப் படம் எடுப்பதால் வடிவேலு ஆள்களை வைத்து மிரட்டுகிறார்' என்று அந்த முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து நடிகர் வடிவேலு கூறியவை வருமாறு -

சாலிக்கிராமத்தில் உள்ள எனது அலுவலகத்துக்கு எதிரில் கண்ணன் என்பவர் வசித்து வருகிறார். அவர் யார் என்றே எனக்கு தெரியாது. நான் அவரை பார்த்ததே இல்லை. அவர் சிங்கமுத்துவுக்கு நண்பராம்.

கடந்த 7 ஆம் திகதி கண்ணன் வீட்டுக்கு சிங்கமுத்து வருகிறார் எனக் கூறியிருக்கிறார். அவரை வரவேற்பதற்கு வாசலில் 50 பேரை நிறுத்தி, 10 ஆயிரம் சரவெடி வெடித்திருக்கிறார்கள். 'சிங்கமுத்து வாழ்க' என்று கோஷம் போட்டு இருக்கிறார்கள்.

அப்போது, எனக்கு போன் வந்தது. சிங்கமுத்து ஆள்களை வைத்து, பட்டாசு வெடித்து ரகளை செய்து கொண்டிருக்கிறார் எனச் சொன்னார்கள். உடனே நான் பொலிஸில் முறைப்பாடு செய்யும்படி என் உதவியாளர்களிடம் கூறினேன். அவர்களும் பொலிஸில் முறைப்பாடு கொடுத்தனர்.

அதன் பிறகு, நேற்றுமுன்தினம் அதே இடத்தில் 'சிங்கமுத்து காரில் உட்கார்ந்து இருக்க, கண்ணன் என்பவர் எனது அலுவலகத்துக்குள் கையில் ஆயுதத்துடன் நுழைந்து, 'ஏன்டா பொலிஸில் முறைப்பாடு செய்தீர்கள்?' என்று என் அலுவலகத்தில் இருந்தவர்களை மிரட்டியிருக்கிறார். இதைத்தொடர்ந்து அவருக்கும், என் உதவியாளர்களுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்டு, கைகலப்பு நடந்திருக்கிறது.

இதற்கெல்லாம் காரணம் சிங்கமுத்துதான். அவர் மீது நான் தொடர்ந்த வழக்கை வாபஸ் பெறும்படி பல விதங்களில் இவ்வாறு ஆள்களை வைத்து மிரட்டி வருகிறார் - என்றார்.

# ஜன்னல் வழியாக எச்சில் துப்பியவர் மின்சாரம் பாய்ந்து பரிதாப மரணம்!

மும்பை, ஏப். 12

வீட்டு ஜன்னலுக்கு வெளியிலுள்ள மின்சாரக் கம்பி மீது எச்சில் துப்பியவர் மின்சாரம் பாய்ந்து பரிதாபமாகப் பலியான சம்பவம் மும்பையில் நடந்துள்ளது.

மும்பையைச் சேர்ந்தவர் முகமது. இவரது வீடு, விரார் பகுதியில் உள்ளது. அடுக்குமாடிக் குடியிருப்பில் வசித்து வந்தார். இவர், புகையிலை போடும் பழக்கம் உடையவர். சமீபத்தில் ஓய்வு நேரத்தில் வீட்டிலிருந்த இவர், புகையிலை மென்று கொண்டிருந்தார். அப்போது அவரது மனைவி, குடிப்பதற்காக கோப்பி கொண்டு வந்தார். கோப்பி குடிப்பதற்காக, வாயில் உள்ள எச்சிலை ஜன்னல் வழியாக வெளியே துப்பினார்.

இந்த எச்சில், ஜன்னலுக்கு கீழ் உள்ள மின்சாரக் கம்பி மீது விழுந்தது. இந்த மின் கம்பிகள், ரயில் போக்குவரத்துக்கு பயன்படும் உயரழுத்தமுள்ள மின்சாரத்தை தாங்கிச் செல்பவை. இதனால், மின் கம்பி மீது எச்சில் துப்பிய முகமது மீது எச்சில் வழியாகவே உயர் அழுத்த மின்சாரம் பாய்ந்தது. ஜன்னலுக்கு வெளியே, தூக்கி இழுக்கப்பட்டு கீழே விழுந்தார். பின்னர் அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பரிதாபமாக உயிரிழந்தார்.

# காங்கிரஸின் வாக்கு வங்கி அரசியலால் இந்தியாவின் பாதுகாப்புக்குப் பேராபத்து

## பா.ஜ.க. தலைவர் கட்கரி குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 12

காங்கிரஸ் கட்சியின் வாக்கு வங்கி அரசியலால் இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது - என்று பா.ஜ.க. அகில இந்தியத் தலைவர் நிதின் கட்கரி தெரிவித்தார்.

சென்னை மயிலாப்பூர் மாங்கொல்லையில் சனிக்கிழமை இரவு நடைபெற்ற பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் பேசிய போதே அவர் இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

நக்ஸலைட்டுகளால் நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்புக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு பயங்கரவாதிகளுக்கு ஆதரவான போக்கை கடைப்பிடித்து வருவதே இதற்குக் காரணம்.

உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டும் நாடாளுமன்றத்தை தாக்கிய அப்சல் குரு தூக்கிலிடப்படவில்லை. டில்லியில் பொலிஸ் அதிகாரி சர்மாவைக் கொன்ற பயங்கரவாதிகளை காங்கிரஸ் பொதுச்செயலாளர் சந்தித்து ஆதரவு தெரிவிக்கிறார். காங்கிரஸின் இந்த நடவடிக்கைக்கு வாக்கு வங்கி அரசியலே காரணம். இதனால் இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் பொருளாதாரம் மேம்பாடு அடைய வேண்டுமானால் தொழில் துறையும், விவசாயத் துறையும் வளர்ச்சி அடைய வேண்டும். அதற்கு மின்சாரம் மிகவும் அவசியம்.

இந்தியாவில் இப்போது 55 ஆயிரம் மெகாவோட் மின்சாரம் பற்றாக்குறையாக உள்ளது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் 2 ஆண்டுகளில் இந்தியாவை மின் பற்றாக்குறை இல்லாத நாடாக மாற்றுவோம்.

நான் தாவர பொருள்களில் இருந்து மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களை வைத்துள்ளேன். அதன் மூலம் 20 மெகாவோட் மின்சாரம் உற்பத்தியாகிறது. எனவே, என்னால் இதனை உறுதியாகக் கூற முடியும்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தை எட்டும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். ஆனால் பணவீக்கம்தான் இரட்டை இலக்கத்தை எட்டியுள்ளது.

நாக்பூர் நகரில் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்த [illegible] தொண்டனை நிதின் கட்கரி பா.ஜ.க. தலைவராக முடிகிறது. இதுதான் பா.ஜ.கவின் சிறப்பு.

காங்கிரஸ் கட்சியில் தலைவர் பதவி என்பது நேரு குடும்பத்துக்கு ஒதுக்கப்பட்டு விட்டது. மன்மோகன் சிங், பிரணாப் முகர்ஜி, சிதம்பரம் போன்ற பெரிய தலைவர்கள், கட்சித் தலைவர் பதவியை அடைவது குறித்து கனவு கூடக் காண முடியாது - என்றார்.

## கட்கரியின் மாதவருமானம் ரூ. 6 கோடி

பா.ஜ.க. தலைவர் நிதின் கட்கரியின் மாத வருமானம் ரூபா 6 கோடி என்று தமிழக பா.ஜ.க. தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கட்கரிக்கு மகாராஷ்டிரத்தில் 3 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றின் மதிப்பு ரூபா 500 கோடிக்கும் அதிகம். அதன் மூலம் அவருக்கு மாதம் ரூ. 6 கோடி வருமானம் வருகிறது.

இதுதவிர, அவருக்குச் சொந்தமாக 20 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யும் மின் நிலையங்கள் உள்ளன.

இவை அனைத்தையும், பா.ஜ.க. தொண்டர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக அவர் தொடங்கியுள்ளார் - என்றார் பொன். ராதாகிருஷ்ணன்.

## பட்ஜெட்டைக் கண்டித்துப் பேரணிகள்

சென்னை, ஏப். 12

தமிழக பட்ஜெட்டைக் கண்டித்து அ.தி.மு.க. சார்பில் ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரை 3 நாள்கள் மாநிலம் முழுவதும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்படும் - என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு வருமாறு -

விலைவாசி உயர்வு, கடுமையான மின்வெட்டு, சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையிலான திட்டங்கள் தமிழக அரசின் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. மாறாக, மக்களை ஏமாற்றும் வகையில், கவர்ச்சிகரமான காகிதத் திட்டங்கள்தான் இடம்பெற்றிருக்கின்றன. இது தமிழக அரசின் மக்கள் விரோதப் போக்கையே காட்டுகிறது- என்றுள்ளது.

# படப்பிடிப்பில் தீக்காயங்களுடன் உயிர் தப்பினார் நடிகை ஆஷிமா!

சென்னை, ஏப். 12

படப்பிடிப்பில் நடந்த விபத்தில், நடிகை ஆஷிமா தீக்காயங்களுடன் உயிர் தப்பினார்.

'தம்பி அர்ஜுஸனா' என்ற படத்தின் படப்பிடிப்பு சென்னையை அடுத்த நாவலூர் கிராமத்தில் நடந்தது.

ரமணா, பெரோஸ்கான், பிரவின்ராஜ் ஆகிய மூன்று பேரும் கதாநாயகர்களாகவும், ஆஷிமா கதாநாயகியாகவும் நடித்துக் கொண்டிருந்தார்கள். படத்தின் உச்சக்கட்ட காட்சியில், ஆஷிமா எரியும் நெருப்புக்குள் சிக்கிக்கொள்வது போலவும், அதில் இருந்து அவரை ரமணா காப்பாற்றுவது போலவும் படமாக்கிக் கொண்டிருந்தார்கள்.

இதற்காக ஆஷிமாவை சுற்றி மண் எண்ணையை ஊற்றி தீவைத்தார்கள். அப்போது எதிர்பாராதவிதமாக ஆஷிமாவின் உடையில் தீப்பற்றிக்கொண்டது. அவர் சத்தம்போட்டு கதறி அழ ஆரம்பித்தார்.

நிலைமையின் விபரீதத்தை புரிந்து கொண்ட கதாநாயகன் ரமணா, இயக்குநர் விஜய் ஆனந்த், ஸ்டண்ட் மாஸ்டர் மைக்கேல் மிராக்கிள் ஆகியோர் பாய்ந்து சென்று ஆஷிமாவை சாக்குப்பையால் போர்த்தி வெளியே இழுத்து வந்தார்கள். என்றாலும் ஆஷிமாவின் இரண்டு கால்களிலும் தீக்காயங்கள் ஏற்பட்டன. அதிர்ஷ்டவசமாக அவர் உயிர் தப்பினார்.

உடனடியாக ஆஷிமா அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. இந்த விபத்து காரணமாக 'தம்பி அர்ஜுஸனா' படப்பிடிப்பில் பரபரப்பு ஏற்பட்டது. ஒரு மணி நேரம் படப்பிடிப்பு நிறுத்தி வைக்கப்பட்டது. அதன் பிறகு படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் இல்லம், தீருவில் நினைவுத் தூபியைத் திட்டமிட்டு அழித்தொழிக்கும் செயல் ஆரம்பம்

## ஜனாதிபதிக்கு தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 12.

நல்லூரில் நிறுவப்பட்டிருந்த தியாகி திலீபனின் தூபி அண்மையில் சிதைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தற்போது வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் இளவயதில் வாழ்ந்த இல்லத்தையும், வல்வை தீருவிலில் அமைந்திருக்கும் 12 விடுதலைப் புலிகளின் நினைவுத் தூபியையும் அழிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாக அறியமுடிகிறது.

இந்த நடவடிக்கைகளை உடனடியாகத் தடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதிக்கு அவரச வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் என். சிறீகாந்தா, செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகிய இருவரும் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்திருக்கும் கடிதத்தில் இந்த வேண்டுகோளைவிடுத்துள்ளனர்.

''விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சில முன்னணி உறுப்பினர்களோடு தொடர்பு பட்ட சில அமைவிடங்களையும், கட்டடங்களையும் திட்டமிட்டு அழித்தொழிக்கும் வெறுக்கத்தக்க நடவடிக்கையில் அதிகாரங் கொண்ட சில விஷமத்தனமான சக்திகள் ஈடுபட்டு வருவதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்'' என்று இந்த வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இந்திய அமைதி காக்கும் படை வந்திறங்கியதைத் தொடர்ந்து, தனது கோரிக்கைகளை இந்திய அரசாங்கத்திடம் சமர்ப்பித்தும் ஆக்கபூர்வமான பதிலெதுவும் கிடைக்காத நிலையில் உண்ணாவிரதமிருந்து, அதன் 12ஆவது நாளில், 1987 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26ஆம் திகதி மரணமடைந்த திலீபனின் நினைவாக எழுப்பப்பட்ட தூபி மூன்று வாரங்களுக்கு முன்னர் சிதைக்கப்பட்டது.

வரலாற்றுப்புகழ்மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் சுற்றாடலில் இருபது வருடங்களுக்கு முன்னால் இந்த நினைவுத் தூபி நிறுவப்பட்டிருந்தது.

**இரவு நேரங்களில் சிதைக்கும் வேலை...!**

1987 ஐப்பசி மாதத்தில் இந்திய அமைதிப்படை முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கொழும்பில் புலன் விசாரணையை எதிர்நோக்குவதற்காக வலுக்கட்டாயமாக விமானத்தில் ஏற்றப்படவிருந்த சூழ்நிலையில் தற்கொலை செய்து கொண்ட 12 விடுதலைப் புலிகளின் நினைவாக வல்வெட்டித்துறை தீருவிலில் அமைக்கப்பட்டிருந்த நினைவகம் இப்பொழுது, மெதுவாகவும் உறுதியாகவும் இரவு நேரங்களில் சிதைக்கப்பட்டு வருவதாக நம்பகமான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் தமது இளம் பராயத்தில் பெற்றோர்களுடனும் ஏனைய குடும்ப உறுப்பினர்களுடனும் வாழ்ந்த வீடு கிட்டத்தட்ட முற்றாகச் சிதைக்கப்பட்ட நிலையில் அதன் முன்புறத்தின் ஒருபகுதி மட்டுமே எஞ்சியுள்ளது. கடந்த பல வருடங்களாக யாருமே வசித்திராத இந்த தனியார் சொத்து முற்றிலும் இல்லாதொழிப்பதற்கு மேலும் ஒரு சில நாள்களே போதும்.

இந்தத் திட்டமிட்ட அழித்தொழிப்பு தெளிவான நோக்கத்தைக் கொண்டுள்ளது என்பது மிகவும் தெட்டத்தெளிவானது.

**கொடுமையான நிகழ்வுகள்**

கடந்த சில மாதங்களாக பல்லாயிரக் கணக்கில் தெற்கிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் மக்களின் கவனத்தை ஈர்க்கக்கூடியதும், எந்தவொரு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரோடும் தொடர்பு பட்டதுமான ஏதாவது அமைவிடமோ அல்லது கட்டடமோ தொடர்ந்தும் இருக்கக் கூடாது என்பதுதான், யாழ்ப்பாண மக்கள் மௌனமாகச் சந்தித்துக் கொண்டிருக்கும் இந்தக் கொடுமையான திடீர் நிகழ்வுகளுக்கான தர்க்கரீதியான காரணமாக இருக்கமுடியும்.

இறந்தவர்களுக்கான நினைவிடங்கள் என்பவை, அவர்களில் எவர் தொடர்பிலும் ஒருவர் கொண்டிருக்கக் கூடிய மனோநிலைக்கு அப்பால், மதிப்பிற்கு உரியவை ஆகும். எமது நாட்டின் சகல மக்களினதும் பண்பாடு, பாரம்பரியத்தின் அடிப்படை அம்சங்களில் இந்த உன்னத விழுமியமும் அடங்கி நிற்கின்றது.

யாழ்ப்பாண மக்களின் மன உணர்வுகளைப் புண்படுத்தியிருக்கும் இந்த விவகாரத் தில் நீங்கள் தலையிட்டு, இங்குள்ள சில அதிகாரமிக்க சக்திகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் உணர்வற்ற இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படுவதை உறுதிப்படுத்துவீர்கள் என்று நாங்கள் நம்புகின்றோம்'' - என்றுள்ளது. (ஒ)

# பழைய 'கோமாளிக்' கும்பல் மீண்டும் புதிய அமைச்சரவைக்கு வேண்டாம்

## கொழும்பு ஆங்கிலப்பத்திரிகையின் கருத்து இது

கொழும்பு, ஏப் 12

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அடுத்த செயற்பாடு அமைச்சரவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதாகவே இருக்கும். இயல்பாகவே ஏற்கனவே இருந்த அதே 'கோமாளிகள்' கும்பலை மாற்றி அமைக்கும் செயலாக இது அமையக்கூடாது என்றே நாடு எதிர்பார்க்கின்றது.

இவ்வாறு கொழும்பு ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்று கருத்து வெளியிட்டிருக்கின்றது. புதிதாக அமையவிருக்கும் அமைச்சரவை தொடர்பாக அப் பத்திரிகை மேலும் குறிப்பிட்டதாவது:

அமைச்சரவை அமைக்கும்போது பழைய 'கோமாளிகள்' கும்பலை மாற்றி அமைப்பதாகவோ ஒருவரின் இடத்துக்கு இன்னொருவரை புகுத்தும் செயலாகவோ இருத்தலாகாது.

ஜனவரியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடுகையில் பொதுத் தேர்தலின் போது வாக்காளர்கள் குறைந்த எண்ணிக்கையில் கலந்துகொண்டிருப்பது ஏதோவொன்றைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. அதாவது அரசாங்கத்தில் அமைச்சர்கள் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களால் மக்கள் கவரப்படவில்லை சிலருக்கு வெளியில் போவதற்கான வாசலைக் காட்டியுள்ளார்கள், ஏனையவர்கள் வேறு தெரிவுகள் இல்லாமையால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**புத்திசாலித்தனமாக நடந்துள்ளார்; ஜனாதிபதி**

இதற்காகத்தான் ஜனாதிபதி புத்திசாலித்தனமாக முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடிவுசெய்திருந்தார். அதாவது அதன்மூலம் வெற்றியின் வேகம் நாடாளுமன்றத் தேர்தலிலும் தொடர்வதற்காக.

இப்பொழுது அபரிமிதமான வெற்றியைப் பெற்றுள்ள ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகளைக் கொடுத்து தாயர்பண்ண வேண்டிய அவசியமில்லை. இறுக்கமான சிறிய அமைச்சரவை வேண்டுமென்ற கோரிக்கையில் நியாயம் இருக்கிறது. விசாலமான அமைச்சரவை பொதுமக்கள் பணம் வீணாவதற்கு காரணமாகும். அத்துடன் நல்லாட்சிக்கும் அழகல்ல - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ப)

# இளவாலையில் பெண் வெட்டிக்கொலை! அவர் அணிந்திருந்த நகைகள் அபகரிப்பு!!

யாழ்ப்பாணம், ஏப்.12

தனிமையில் வீட்டிலிருந்த பெண்ணைக்கொலைசெய்து அவர் அணிந்திருந்த நகைகள் அபகரிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் இரவு இளவாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இறந்தவரின் கழுத்தில் வெட்டுக் காயங்கள் இருந்தன என்றும் கூறப்பட்டது.

பத்தாவத்தை, இளவாலையில் வசித்து வந்த இந்துமதி குணரட்ணம் (வயது-44) என்ற பெண் நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் தனிமையில் இருந்தவேளை வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்றும் அவரின் நகைகள் சூறையாடப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது.

பெண்ணின் சடலம் இளவாலை பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-16-78)

# கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் யாழ்.நகரில் வெளிநாட்டுப் பெண்ணொருவரின் சடலம்

யாழ்ப்பாணம், ஏப். 12

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த முதிய பெண்ணொருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் யாழ். நகரில் நேற்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

யாழ். பிரதான வீதியிலுள்ள கட்டடம் ஒன்றில் அதிகாலை வேளையில் அத்துமீறி உள்நுழைந்த நீத்தா மர்லின் (வயது-62) என்ற பெண்மணி கட்டடத்தின் பின்புறம் சென்று அங்கிருந்த மின்சார வயர்களைப் பயன்படுத்தி கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

இப்பெண்மணி வெளிநாட்டவராக இருந்த போதும், குருநகர்வாசியொருவரை வெளிநாட்டில் திருமணம் முடித்திருந்தார். ஒரு சில தினங்களுக்கு முன்னர் தமது கணவருடன் குருநகருக்கு வந்திருந்தார். மனநிலை சிறிது பாதிக்கப்பட்ட இந்த முதிய பெண்ணை நேற்று அதிகாலை முதல் வீட்டில் காணாததால் அவரைத் தேடிச் சென்ற உறவினர்கள் இறுதியில் தூக்கிட்ட நிலையில் அவரது சடலத்தையே கண்டனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு உடனே விரைந்த பொலிஸார் நடத்திய விசாரணைகளின் போதே இந்தத் தகவல்கள் வெளிவந்ததாகக் கூறப்படுகின்றது. இச்சம்பவம் குறித்துப் பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப் பெண் சுவிஸைச் சேர்ந்தவர் என்றும் ஒரு பிள்ளைக்குத் தாய் என்றும் விசாரணைகள் மூலம் தெரியவந்தது.

சம்பவ இடத்திற்குச் சென்ற யாழ். நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டார்..அத்துடன் அதனை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு அவர் உத்தரவிட்டார். (04-23-86-160-135-16-78)

# பொன்சேகா நாடாளுமன்றுக்கு.....

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இராணுவக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஜெனரல் சரத் பொன்சேகா, சிறையில் படுத்திருந்தபடியே கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஜனநாயகத் தேசிய முன்னணி சார்பில் போட்டியிட்டு சுமார் 98ஆயிரம் விருப்பு வாக்குகள் பெற்று எம்.பியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

எதிர்வரும் 22ஆம் திகதி இந்த நாடாளுமன்றம் முதல் தடவையாகக் கூடும்போது புதிய எம்.பிக்கள் சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கவுள்ளனர்.

அந்த நிகழ்வுக்குச் செல்ல பொன்சேகா அனுமதிக்கப்படுவாரா? நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்றுவதற்கு வசதியாக அவரை நாடாளுமன்றத்துக்கு இராணுவம் கூட்டிச் செல்லுமா? - என்றெல்லாம் தற்போது கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

**பெரும் சந்தேக நிலையில்**

கடந்த ஆண்டு முற்பகுதியில் முடிவடைந்த - தமிழீழ விடுதலைப் புலிகளுடனான - இறுதி யுத்த நடவடிக்கைகளின் போது இடம்பெற்றவை எனக் கருதப்படுகின்ற பல விடயங்களுக்கு - பல இரகசியங்களுக்கு - ஜெனரல் சரத் பொன்சேகா அப்போதைய இராணுவத் தளபதி என்ற முறையில் தொடர்புபட்ட முக்கிய சாட்சியாக விளங்குகின்றார்.

அவற்றை அவர் பகிரங்கப்படுத்த - அம்பலப்படுத்த - இடமளிக்காமல் இருப்பதற்காகவே, அவரை சாதாரண நீதிமன்றங்களில் நிறுத்தாமல், மூடிய அறைகளுக்குள் விசாரணை நடத்தும் இராணுவ நீதிமன்றில் குற்றம் சுமத்தப்பட்டவராக ஆளும் தரப்பு நிறுத்தியிருக்கின்றது எனக் கருதப்படுகின்றது.

சாதாரண நீதிமன்றத்தில் கூண்டில் நின்றே பகிரங்கமாகத் தமது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துவதற்கு பொன்சேகாவுக்கு வாய்ப்பளிக்காமல் அவரை இராணுவக் காவலில் முடக்கி வைத்திருக்கும் அரசுத் தலைமை, அவரை நாடாளுமன்றத்துக்குச் சென்று, நாடாளுமன்றச் சிறப்புரிமை என்ற கவசத்தோடு எல்லா இராணுவ நடவடிக்கை இரகசியங்களையும் நாடாளுமன்ற மேடையில் உலகத்துக்கு உரத்து உரைக்க - உறைப்பாக உரைக்க - வாய்ப்பு வழங்குமா என்ற சந்தேகம் கிளப்பப்படுகின்றது.

**எம்.பிக்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டதும்....**

அப்படி அவரைப் பேசவும், விடயங்களை அம்பலப்படுத்தவும் அனுமதிப்பது ஏற்கனவே சர்வதேச யுத்தக்குற்ற விசாரணை என்ற விவகாரத்தினால் பீதியில் மூழ்கிக் கிடக்கும் ஆளும் தரப்பை மேலும் சிக்கலுக்குள் மாட்ட வைக்கும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனினும், சரத் பொன்சேகா இப்போது வரை வெறுமனே குற்றம் சுமத்தப்பட்ட சந்தேக நபர்தான். அவர் குற்றம் நிரூபிக்கப்பட்ட குற்றவாளி அல்லர். அவ்வாறு சந்தேக நபராக - வெறுமனே குற்றம் சுமத்தப்பட்டவராக - இருக்கும் ஒருவரை நாடாளுமன்றத்துக்குச் செல்லவிடாமல் தடுப்பதற்கு இராணுவச் சட்ட விதிகளில் ஏற்பாடு எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை.

• நாடாளுமன்றத்துக்குத் தெரிவான எம்.பிக்களின் பெயர்,விவரங்கள் பற்றிய அம்சங்களைத் தேர்தல் ஆணையாளர் வர்த்தமானி மூலம் அறிவித்ததும், அதனையடுத்து ஜெனரல் பொன்சேகா நாடாளுமன்றச் சிறப்புரிமைகளைப் பெற்றவராகி விடுவார் என்பதும் கவனிக்கத்தக்கது.

அத்தகையவரை - குற்றச்சாட்டு நிரூபிக்கப்படாத ஒருவரை - நாடாளுமன்றத்துக்குச் செல்ல விடாமல் இராணுவக் காவலில் தொடர்ந்து வைத்திருக்க முடியுமா என்பது கேள்விக்குரியதே.

எனினும், இது விடயத்தில் முன்னுதாரண சம்பவம் ஒன்று உண்டு.

1981 நடுப்பகுதியில் கான்ஸ்டபிள் சிவநேசன் படுகொலை வழக்கில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்ட குட்டிமணிக்கு (செல்வராசா யோகச்சந்திரனுக்கு), சாதாரண தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் மரணதண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

அதன் பின்னர், தொடர்ந்து சிறையில் குட்டிமணி இருந்த சமயம், வட்டுக்கோட்டைத் தொகுதியின் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திருநாவுக்கரசு காலமாக, அந்த இடத்துக்கு எம்.பியாக குட்டிமணியை தமிழர் விடுதலைக் கூட்டணி நியமித்தது. எனினும் சிறையில் இருந்த குட்டிமணி நாடாளுமன்றத்துக்குச் சென்று சத்தியப்பிரமாணம் செய்வதற்கு அப்போது வசதியளிக்கப்படவில்லை. அதனால் வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினராக குட்டிமணியின் பெயர் வர்த்தமானியில் பிரசுரமாகியும் அவரால் எம்.பி. பதவியை ஏற்க முடியவில்லை. பின்னர் மூன்றுமாத காலம் கழித்து மீண்டும் அப்பதவி வெற்றிடமானதாக அறிவிக்கப்பட, அந்த இடத்துக்கு நீலன் திருச்செல்வம் எம்.பியாக நியமிக்கப்பட்டுப் பதவியேற்றார். குட்டிமணி போல ஜெனரல் பொன்சேகாவும் நாடாளுமன்றத்துக்கு வராமல் முடக்கப்படும் சூழலும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை கிராம மக்களுக்கு உள்ள மண்பற்று பட்டினவாசிகளுக்கு இல்லாததால் 2 ஆவது ஆசனம் பறிபோனது

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கவலை

திருகோணமலை, ஏப்.12

திருகோணமலை மாவட்டத்தின் கிராமப்புறத் தமிழ் வாக்காளர்கள் மண்பற்று மற்றும் தமிழர் உரிமைகளைப் பெறவேண்டும் என்ற ஆர்வத்தினால் பல இன்னல்களுக்கு மத்தியிலும் வாக்களிப்பில் காட்டிய அக்கறையை பட்டினத்து தமிழ் வாக்காளர்கள் காட்டாதது வேதனையைத் தருகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான 'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவனுக்கு திருகோணமலையில் உள்ள உதயன் அச்சகப் பணியாளர்கள் ஷன்ஷைன் ஹோட்டலில் அளித்த வரவேற்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு பேசுகையில் இரா.சம்பந்தன் மேலும் கூறியதாவது:

கிராமப்புற தமிழ் மக்களுக்கு கவசமாக இருக்கவேண்டிய நகரப்புறத் தமிழர்கள் வாக்களிப்பில் அக்கறை காட்டாதது திருகோணமலையின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது.

திருகோணமலை மாவட்டத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெறமுடியாத நிலைமை ஏற்பட்டதற்குக் காரணம் திருகோணமலை பட்டினத்து தமிழ் வாக்காளர்கள் வாக்களிப்பில் காட்டிய அசட்டையீனமேயாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள அரசியல் தீர்வு மற்றும் மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றல் ஆகியவற்றை விரைவாக நிறைவேற்றுவதற்கு தீவிரமாகவும் - உறுதியாகவும் செயல்படுவோம் - என்றார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அங்கு பேசுகையில் கூறியதாவது:

நாம் எம்முடைய உரிமைகள் பற்றிப் பேசுகின்றோம். ஆனால் தமிழ்ப்பகுதிகளில் தமிழனைத் தமிழனே அடக்கி ஆளுகின்றான். யாழ். மாவட்டத்தல் அதிகளவிலான மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியது. ஆனால் 18 வீதமான வாக்காளர்களே வாக்களித்திருந்தனர். அதிகமானோர் வாக்களித்திருந்தால் அரசாங்கத்திற்கு ஆகக்கூடியது ஒரு ஆசனம் மட்டுமே கிடைத்திருக்கும்.

இது கிளிநொச்சி தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரை நடைபெற்ற மனிதப் பேரவலத்தை சரியெனக் கூறுவதற்கு, நியாயப்படுத்துவதற்கு அரசிற்கு வாய்ப்பாக அமைந்துவிட்டது. இங்கிருந்து கிளிநொச்சி செல்லும்வரை உன்னிப்பாகப் பார்த்தால், வடபுலத்தில் தமிழர்களைச் சிறுபான்மையினராக்குவதற்கான செயற்பாடுகளில் அரசு கச்சிதமாகச் செயற்படுவதைக் காணலாம்.

திருகோணமலை மாவட்டம் தமிழரின் கைகளிலிருந்து பறிபோய்க்கொண்டிருக்கிறது. வன்னி மாவட்டத்திலும் இந்த நிலை ஏற்பட்டு வருகின்றது. அடுத்தது யாழ் மாவட்டமே. 100 சத வீதம் தமிழ் மக்கள் இல்லாத மாவட்டங்களை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் பயந்து வாழும், இயக்கப் பாணி - துப்பாக்கி அரசியல் நடைபெறுகின்றது. இங்கும் கருணா பிள்ளையானின் அடக்குமுறைகள் உள்ளன. தமிழனைத் தமிழன் அடக்கியாளும் முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து எமது உரிமைகளை வென்றெடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்து பாடுபடும் - என்றார். (அ-சி-6)

## நாடாளுமன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று கைவிலங்குடன் நாடாளுமன்றிற்குச் சென்ற வரலாறு கூட இந்த நாட்டில் உண்டு.அந்த வகையில் பொன்சேகா கூட நாடாளுமன்றம் செல்ல முடியும்.

பிரதமராக யார் நியமிக்கப்படப்போகிறார் என்று அறிய அனைவரும் ஆர்வமாகவுள்ளனர். பிரதமராவதற்கான தகுதியுடையவர்கள் பலர் அரசில் உள்ளனர். இது தொடர்பில் ஜனாதிபதி இறுதித் தீர்மானம் எடுப்பார்.

அதேவேளை, அமைச்சர்களின் எண்ணிக்கையையும் 35 ஆக மட்டுப்படுத்தவே அரசு திட்டமிட்டுள்ளது. எனினும் நாட்டுக்கு பாரமில்லாத வகையில் அரசு அமைச்சரவையை அமைக்கும் - என்றார்.

## மீள்குடியேற்றம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

143 ஆசனங்கள் எமக்குச் சொந்தமாகும்.

இத்தேர்தலையடுத்து வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதுபற்றி ஆலோசிக்க வேண்டும். அங்கு இடம்பெற்றுவரும் மீள்குடியேற்றம் முற்றாக நிறைவடைந்ததன் பின்பே அங்கு எப்போது தேர்தல் நடத்துவதென்று முடிவெடுக்கப்படும் - என்றார். (அ-சி)

## தமிழ்க் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாமல் உள்ள சுமார் 32 ஆயிரம் வாக்குகளையும் சேர்த்தால் மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 2 லட்சத்து 50 ஆயிரமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளது என கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-சி)


SKY COMPUTER (Pvt) Ltd.
No.05 Devos Avenue, Colombo - 04. Tel : 0115-335261 Fax : 0115-371229
No.162 Main Street, Jaffna. Tel:021 2221417
Internet & Email -2 Weeks
விடுமுறைக்கால பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்.
Today you Learn Tomorrow You Lead.


## இலங்கையின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சந்திப்பு இன்று திங்களன்றும் நாளையும் வாஷிங்ரனில் இடம்பெறவுள்ளது.

இலங்கையில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் மஹிந்த அரசுக் கூட்டணிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் கிட்டக்கூடிய அதிக வாய்ப்பு ஏற்பட்டிருப்பதால், இனிவரும் காலங்களில் இலங்கையில் ஏற்படக்கூடிய அரசியல் மாற்றங்களில் சர்வதேச சமூகத்தின் சக்தி எவ்வகையானதாக இருக்கப்போகிறது மற்றும் அதற்கான சாத்தியங்கள் என்ன என்பது குறித்து இந்தச் சந்திப்பில் இரு தலைவர்களும் பேச்சுநடத்தலாம் என்று கொழும்பிலுள்ள இந்தியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழ்க்கூட்டமைப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்காகவே இந்த வெற்றி கிடைத் தது. இந்த யுத்தத்தை எதிர்கொள்வதற்குப் பொருத்த மான தலைவராக அவர் இருந்தார். மக்கள் இப்போது இந்த ஆணையை வழங்கியிருக் கின்றனர்.

இந்த நாட்டை எதிர்காலச் சந்ததியின ருக்காகக் கட்டியெழுப்பு வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் உட்பட எதிர்க்கட்சிகளின் எம்.பிக்கள் அனைவரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஒன்றிணையவேண்டும்.

நாட்டு மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவோம்

தற்போது பல புதியவர்கள் நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகி யுள்ளனர். அவர்களுடன் சேர்ந்து நல்லதொரு நிர்வாகத்தை நாம் நடத்திச் செல்வோம். இந்த நாட்டு மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக நாம் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

இந்த கௌரவமான வெற்றியைத்தந்த அனைவருக்கும் நாம் இச்சந்தர்ப்பத்தில் எமது ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்தேர்தலில் மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை படுமோச மாகத் தோல்வியடையச் செய்துள்ளனர்.

1978 ஆம் ஆண்டு அக்கட்சியால் வழங்கப்பட்ட அரசமைப் பின் அடிப்படையிலேயே இத்தேர்தல் நடைபெற்றது. இந்த அரச மைப்பு உருவாக்கப்பட்டபின் 1989 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியால் வெற்றிபெற முடிந்தது. அத னைத் தொடர்ந்து வந்த அனைத்துத் தேர்தல் களிலும் அக்கட்சி தோல் விகளைத் தழுவி 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில்தான் வெற்றிபெற்றது.

2001 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு இடம்பெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியையே கண்டது. 2010 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுடன் மீண்டெழ முடியாத ஒரு தோல்வியை அக்கட்சி சந்தித்துள்ளது. - என்றார். (அ-சி)

## அரசுத்தரப்பில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற நம்பிக்கை இந்த நாட்டு மக்கள் அனை வருக்கும் உண்டு. ஜனாதிபதி மீது அந்த மக்கள் வைத்துள்ள நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்த ஆணையை மக்கள் தந்துள்ளனர்.


எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த வேண்டுகோளை இந்நாட்டு மக்கள் முற்றாக நிராகரித்துள்ளனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசுக்குக் கொடுக்கவேண்டாம் என்று அவர் மக்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆனால், மக்கள் அதை முற்றாக நிராகரித்துவிட்டனர்.

இம்முறை தேர்தலில் அரசுடன் இணைந்து போட்டியிட்டு 46 பேர் புதிய எம்.பிக்களாகத் தெரிவாகியுள்ளனர். இது நாடாளுமன்றத் தேர்தல் வரலாற்றில் பெரிய மாற்றமாகும்.

இத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த எம்.பிக்கள் எவருக்கும் தேசியப்பட்டியலில் இடம் வழங்கப்பட மாட்டாது. இதை ஏற்கனவே ஜனாதிபதி திட்ட வட்டமாகக் கூறிவிட்டார் - என்றார்.

(அ-சி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 ★ 05 ★ 1957

மறைவு 24 ★ 03 ★ 2009

**அப்பாத்துரை ஸ்ரீரங்கநாதன் (ஸ்ரீ)**

(திதி: திரயோதசி 12.04.2010)

*அணையாத தீபமே ! எம் அன்புத் தெய்வமே !*
*பாசமலரே, எமை வாழவைத்த பெருந்தகையே!*
*எம்மை வாழவைக்கத் தங்களையே*
*மெழுகுதிரிபோல் உருக்கி வாழ்ந்த*
*எங்கள் தெய்வத்தை எப்படி மறப்பது?*
*என்றும் உங்கள் நினைவுகளுடன் நாம்!*

மில் வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

சிவஸ்ரீ. ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் (சின்னமணி ஐயா)
அவர்களின் சிவபதம் குறித்து
சர்வதேச இந்துமத குருபீடத்தின்
கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகக் கொண்டவரும், பெருங்காடு சிவன்கோவில் ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவுமாகிய

சிவஸ்ரீ. ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள்

அவர்களின் மரணச் செய்திகேட்டு மனவேதனை அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அமரர் சிவஸ்ரீ. ஸ்ரீநிவாச நாகேந்திரக்குருக்கள் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டி எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சிவஸ்ரீ ஐயப்பதாஸன்
சாம்பசிவ சிவாச்சாரியார்
பீடாதிபதி
சர்வதேச இந்துமத குருபீடம்
ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
கொழும்பு-13.

சிவப்பிரம்மஸ்ரீ.
சிவ. நித்தியானந்த சிவாச்சாரியார்
தலைவர்
சர்வதேச இந்துமத குருபீடம்
(யாழ். மாவட்டக் கிளை)
சங்கானை.

## மரண அறிவித்தல்

திருமதி லோகேஸ்வரி தனபாலசிங்கம்

மட்டுவில் தெற்கைச்சேர்ந்த திருமதி லோகேஸ்வரி தனபாலசிங்கம் நேற்று (11.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2010) திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காந்தளம்புட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'கோகுலம்'
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (96847)

தகவல் :
புவனேஸ்வரி நெல்லிநாதன்
(சகோதரி).


அன்றும் இன்றும் என்றும் யாழ். நகரின் No 1 கல்வி நிறுவனம்
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
22 ஆவது வருட கல்விச் சேவையில்
O/L DAY CLASS
ஆரம்பம்: 16.04.2010
வெள்ளி காலை 8.30 மணி
* பிரிவு 1 இற்கான அனுமதிகளை இன்று முதல் பதிவு செய்யவும்.
* எமது Supper Grade ஆசிரியர் குழு

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
K-SELVAN
Physics
வெப்பவியல்
ஆரம்பம் : 13.04.2010 (செவ்வாய்)
செவ்வாய், வியாழன் :6.15 - 7.15 A.M
2011 A/L

விக்னா
கல்வி நிறுவனம்
35 ஆவது வருட சேவை
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
பிரிவு 02
O/L DAY CLASS
ஆரம்பம்: 16.04.2010 Fri. 8.30-2
இம்முறையும் பிரிவு 6 மட்டுமே
* பிரிவு 3 மிகவிரைவில்.
* விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
* இன்று முதல் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

SUBRA (14)
O/L Day - A/L 2012
★ ஆரம்பம் 15.04.2010

சனச அபிவிருத்தி வங்கி
SDBL
சித்திரைப்புத்தாண்டு அழைப்பு
சித்திரைப் புத்தாண்டு தினத்தில் காலை 9.04 தொடக்கம் நண்பகல் 12 மணிவரை கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் சகல வாடிக்கையாளர்களுக்கும் கைவிசேடமும் அன்பளிப்புக்களும் வழங்கப்படவுள்ளன.
14.04.2010 தொடக்கம் 14.05.2010 வரையான காலப்பகுதியில் நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்களில் வைப்புச் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு உயர் வட்டியுடன் விலையுயர்ந்த பரிசுப் பொருள்களும் வழங்கப்படவுள்ளன.

| சேமிப்பு வைப்புக்கள் (ஒருவருட வைப்பு) | நிலையான வைப்புக்கள் (ஒருவருட வைப்பு) |
|---|---|
| 10,000/= சிறிய கைப்பை | 100,000/= குடையுடன் பிரயாணப் பை |
| 25,000/= பிரயாண பை | 500,000/= Table Fan அல்லது Rice Cooker |
| 100,000/= கைக்கடிகாரம் | 1,000,000/= DVD Player |
| 250,000/= Table Fan | 2,500,000/= Fax Machine |
| 500,000/= DVD Player | 5,000,000/= Note Book |
| 1,000,000/= Fax Machine | 10,000,000/= Lap Top |
| 2,500,000/= Note Book | |
| 5,000,000/= Lap Top | |

நிலையானவைப்பு வட்டிவீதம் வருடத்திற்கு 10%
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
மேலதிக விபரங்களுக்கு: 021 222 1280 முகாமையாளர், ஊழியர்கள்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்[illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org